www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

செப்.22–28,1996

ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 171

## நீர்மூழ்கிக் கப்பல் மர்மம்

## எல்லைப் புறங்களில் அதிரடித் தாக்குதல்



## கரும்பூனைகளும் பிரபாகரனும்

## காதல் நாயகி தேவயானி

## சினிவிசிட்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## திறந்த வெளிச் சிறைகள்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

கடந்த மாதம்
கிழக்கு மாகாணத்தில்-
கல்முனையில்
கரும்புலிகள் என்று கூறப்பட்டு
இரு தமிழ் இளைஞர்கள்
சுட்டுக் கொல்லப்பட்டனர்.

குறிப்பிட்ட சம்பவத்தில்
சந்தேகம் இருப்பதாக
'முரசு' முன்னரே கூறியிருந்தது!

கடந்தவாரம்
கல்முனை மாவட்ட நீதிபதியும்
குறிப்பிட்ட விடயம் தொடர்பாக
சந்தேகம் கொள்ளத்தக்க
அறிகுறிகள் சிலவற்றை
அடையாளம் கண்டிருக்கிறார்.

கொல்லப்பட்ட இரு
வாலிபர்களும்-
கைது செய்யப்பட்ட நேரத்திற்கும்
கொல்லப்பட்ட நேரத்திற்கும்
இடையே வித்தியாசம் இருப்பதாக
நீதிபதிக்கும் தோன்றியிருக்கிறது!

இதிலே வேதனையான விடயம்
என்னவென்றால்,
கிழக்கு மாகாணத்தில் உள்ள
பாராளுமன்ற உறுப்பினர்கள்
பாரா முகமாக நடந்துகொள்வதுதான்!

குறிப்பிட்ட சம்பவத்தில்
உண்மை கண்டறியப்படுவது
அவசர அவசியம்!

பலியான இருவரும்
'கரும்புலிகள்' அல்லவெனில்
இதே பாணியில் மேலும்
பலருக்கு 'கரும்புலி முத்திரை'
குத்தப்படும் அபாயம் நேரலாம்!

நாட்டின் சட்டம், ஒழுங்கு
மற்றும் பாதுகாப்பு அமைப்புக்கள்
சந்தேகத்துக்கு அப்பாற்பட்டவையாக
இருப்பது மிக முக்கியம்!

கல்முனைச் சம்பவத்தின்
சந்தேகம் தீராதுபோனால்
இனிமேல் படைத்தரப்பினர்
'கரும்புலிகள்' பற்றிக் கூறும்போது
மக்கள் வேறு விதமாக நினைக்கும்
நிலைதான் தோன்றச் செய்யும்!

❑❑

"யாழ் குடாநாட்டை
சமாதான நகரமாக்குவோம்."
என்றார் ஜனாதிபதி!

ஜனாதிபதியின் விருப்பம்
நல்லதாக இருக்கலாம்! ஆனால்,
இனப்பிரச்சனை தீரும்வரை
அப்படியொரு திருப்பம்
ஏற்படுவது சாத்தியமில்லை!

யாழ் குடாநாட்டு மக்களுக்கும்
தற்போதைய நிலையில்
அப்படியெல்லாம்
பெரிய பெரிய ஆசைகள் கிடையாது!

பாலோடும், தேன் பாயும்
என்றெல்லாம் எதிர்பார்க்கவுமில்லை.
அவர்கள் எதிர்பார்ப்பதெல்லாம்
உயிர்வாழ உத்தரவாதம்!
கெடு பிடியில்லாத வாழ்க்கை!

திரும்பிய பக்கமெல்லாம்
தடை அரண்கள்; சோதனை முகாம்கள்;
உணவுப் பொருள் வாங்க
நீண்ட கியூ வரிசைகள்!
பயணம் செய்வதென்றால்
பல நாள் காத்திருப்பு!

படைகளும்-புலிகளும்
மோதிக் கொண்ட சத்தம் கேட்டால்
எங்கே தாங்களும்
பாதிக்கப்படலாமோ என்ற அச்சம்!

இவ்வாறான நிலை இல்லாமல்
ஓரளவுக்காவது
நிம்மதியாக தூங்கி எழ முடிந்தாலே
தற்போதைக்குப் போதும்
என்ற மன நிலையில் தான்
யாழ் மக்கள் உள்ளனர்!

ஆனால், அவர்கள் எதிர்பார்ப்பு
பொய்க்கத் தொடங்கிவிட்டதோ
என்று அச்சப்பட வேண்டியுள்ளது!

யாழ் குடாநாடு மட்டுமல்ல,
வவுனியா-மட்டக்களப்பு-திருமலை-
மன்னார் போன்ற முக்கிய நகர்களும்
பாதுகாப்புக் காரணங்களின் பேரால்
'திறந்தவெளிச் சிறைச்சாலை'களாக
மாறிவருகின்றன!

'போர் நடைபெறும்போது
இது தவிர்க்க முடியாது'
என்று ஒரு வாதம் இருக்கிறது.
உண்மைதான்; மறுக்கவில்லை.
இனப்பிரச்சனையைத் தீர்த்து
போரை முடித்துவைக்க வேண்டாம்
என்று எவர்தான் சொல்வர்?

❑❑

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## ஆன்மீகம்



### வழக்காடுதலை விட்டுவிடுங்கள்

இன்றைய சமூகத்தில் சின்னச் சின்ன விஷயங்களுக்கு வழக்குத் தொடர்வதை நாம் அவதானிக்கிறோம். தொட்டதற்கெல்லாம் வழக்கு என்ற நிலை ஏற்பட்டுள்ளது. தொல்லைகள் மிகுந்து மனவருத்தங்கள், வெறுப்பு மிகுந்துள்ளன. ஆனால் ஆன்மீக நிலையிலிருந்து பார்த்தால் என்ன காண்கிறோம்? ஆனமட்டும் வழக்குத் தொடர்தலை விட்டு விடல் வேண்டும் என்றே போதிக்கிறது.

"உங்களில் ஒருவனுக்கு வேறொருவனோடு வழக்குண்டானால், வழக்காடும்படி பரிசுத்தவான்களிடத்தில் போகாமல், அதிகாரரிடத்தில் அவன் போகத்துணிகிறதென்ன"(கொரி: 6:1) பரிசுத்தவான்கள் நேர்மையான முறையில் கூடுமானவரை வழக்கை தீர்த்து வைப்பார்கள்; அதிகாரிகள் இழுத்தடித்து அதிகாரத்தைக் காட்டுவார்கள். இன்று அதுதானே நடைபெறுகிறது! அதுமட்டுமல்ல:

"நீங்கள் ஒருவரோடொருவர் வழக்காடுகிறது எவ்விதத்திலும் குற்றமாயிருக்கிறது. அப்படிச் செய்கிறதைவிட நீங்கள் ஏன் அநியாயத்தை சகித்துக் கொள்வதில்லை? ஏன்? நஷ்டத்தைப் பொறுத்துக் கொள்வதில்லை?"

பொறுமை, சகிப்புத்தன்மை போன்ற நற்குணங்கள் என்பவற்றை போதிக்கின்றது வேதாகமம். ஆம் "உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ் செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து!" -(மத்: 18:15) எல்லாரும் நம் சகோதரர்களே! பகைவனும் நம் சகோதரனே.

ஏ.பி.வி.கோமஸ்.

### சிறப்பான மனிதர் யார்?

ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஸஹாபாக்களில் சிலர் கூடியிருந்த நேரத்தில் அவ்வழியாக ஒரு மனிதர் சென்றார். அப்பொழுது நபியவர்கள் "இம் மனிதரைப் பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டார்.

"யாரசூலல்லாஹ்! இவர் சிறப்பிற்குரிய மனிதர்களில் ஒருவர். அல்லாஹ்வின் மீது ஆணையாக இவர் நிக்காஹ் (திருமணம்) செய்து கொள்ள எங்கேனும் பெண் கேட்டால் அது ஏற்றுக்கொள்ளப்படும். இவர் எவருக்காவது சிபாரிசு செய்தால் அதனை ஏற்றுக்கொள்வார்கள்." என்று ஸஹாபாக்கள் பதிலளித்தார்கள். இதனைக் கேட்டு நபி (ஸல்) அவர்கள் மௌனமாக இருந்தார்கள்.

அதன் பிறகு சற்று நேரத்தில் மற்றொரு மனிதர் அவ்வழியாகச் சென்றார். நபி (ஸல்) அவர்கள் அவரைப் பற்றி விசாரித்தார்கள். "யாரசூலல்லாஹ்! இவர் ஓர் ஏழை முஸ்லிம். இவர் எங்கேனும் பெண் கேட்டால் இவருக்கு திருமணம் செய்து கொடுக்கமாட்டார்கள். இவர் எவருக்கேனும் சிபாரிசு செய்தால் அது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இவர் பேசினால் யாரும் கேட்கமாட்டார்கள்." என்று கூறினார்கள்.

அப்போது நபி (ஸல்) அவர்கள், "முந்திய மனிதரைப் போன்று உலகம் நிரம்ப இருந்தாலும் அவர்கள் அனைவரையும்விட இந்த மனிதர்தான் சிறப்பானவர்" என்று அருளினார்கள். (ஹிகாயாதில் ஸஹாபா)

இதிலிருந்து உலக சிறப்புக்கள் மட்டும் இருப்பது அல்லாஹ்விடம் எவ்வித மதிப்பையும், பலனையும் தராது. மாறாக உலகில் எவ்வித மதிப்பில்லாமலும் அவருடைய சொல் செயல் கேட்கப்படாமலும் இருக்கின்ற ஏழை முஸ்லிம் ஒருவர், உலகச் சிறப்பு நிறைந்த நூற்றுக்கணக்கானவரை விட மிகச் சிறந்தவராவார்.

எம்.ஏ.எம்.மசூத் அஹ்மத்-காத்தான்குடி-03.

## கவிதைப் போட்டி இல. 168

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

**ஒத்திகையா?**

பெண்ணென்றுயெண்ணி,
பேதமை கொண்டழியாமல்
ஷெல்லென்றும் வேட்டென்றும்,
சீறிவரும் நேரந்தன்னில்
உயிர்காக்க வேலி தாண்ட,
உயரப்பாயும் ஒத்திகையோ?

ஆரையம்பதி-இதயம்.

**யாருண்டு வாழ்வில்?**

உயரத்தைத் தாண்டி
உவகையில் சிரித்து நிற்கும்
பாவையர்க்குப் பரிசு தர
பலருண்டு பாரில்!
வறுமைத் துயரத்தைத் தாண்ட
வழியற்றுப் போனதனால்
தனிமைத் தீக் குளிக்கும்
தங்கையர்க்கு மாலையிட
யாருண்டு வாழ்வில்?

அமீர்டீன் கே. முகம்மட்-
திருகோணமலை.

**விலையேற்றம்**

பாமரர் பெருமூச்சும் கூட,
பாண் விலையை கேட்டதுமே
உன்னைவிட உயரே எழுந்து;
உள்ளங்களை புண்ணாக்கும்!!

எஸ். ராஜ்கமல்-திஹாரிய.

**அங்கும் இங்கும்**

"நீ" தடி தாண்டி தரை சேர்ந்தால்
தங்கமெடல் தரித்து நிற்பாய்!
"நாம்" தடை தாண்டி கால் பதித்தால்
தலை சிதறத் தரை சாய்வோம்!

றி.ஹ.சப்னம் ஜெசீதா-
மீராகேணி, ஏறாவூர்.



**வெற்றி வாகை**

வீரியம், விவேகம், விரைவு
வெற்றியின் வரைவிலக்கணம்!
காரியம் கைமேற்பலன்
கட்டுடல் காக்கப் பெறின்!

ஏ. நவஜீவனி-உருகங்கை,
மடுல்கெல.

### பரிசுக்குரிய கவிதை

**சாதனை**

போட்டியின்றியே
மரணத்தின் விளிம்பினில்
கிளாலி கடந்து
சாதனை படைத்தோமே!
எங்கள் பதக்கங்கள்
எங்கே?

மனசு– நீர்கொழும்பு.

**திறமை**

கறுப்பென்றும் சிவப்பென்றும்
திறமைக்கு நிறமுண்டோ?

ச. மகாலிங்கம்-வெலிமடை குரூப்,
வெலிமடை.

## கவிதைப் போட்டி இல-171



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி- 28.09.1996

—முகவரி—

கவிதைப் போட்டி இல.171 தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.

**வாடிக்கை!**

இரு படைகளின் பாய்ச்சலில்
இடை நடுவே நின்ற நீரும்;
அயல் தேசம் பாய்கின்றீரோ...?
வேடிக்கையில்லை- இது
வாடிக்கை தானே!

எம். மொஹமட் ஸன்பர்- கிண்ணியா-06.

**என் நிலை**

உயரம் தாண்டி நீ வந்தால்
உனக்கோர் ஒலிம்பிக் கிண்ணம்!
யாழ்குடா தாண்டி வந்தால் தான்
எனக்கு ஓர் தேநீர்க் கிண்ணம்

கே.எஸ். சர்மா-கொழும்பு-6.

**சவால்**

எத்தனை அடிகள் பாய்ந்து,
கின்னஸில் இடம் பெற்றாலும்
வெடித்திடும் குண்டு தாண்டி,
பாயவே முடிந்திடுமோ?

செல்வி ஸஃரானா ஸத்தார்-
நீர்கொழும்பு.

**நியதி**

உயர உயர
போகையில்
தடை போடுவார்கள்
'தாண்ட' பழகிக்கொள்.

சுபா வரன்-கண்டி.

**கைகொடுக்கும்**

காற்றிலே பாய்ந்து
கரணமடிக்கும் காரிகையே!
கலங்காது முயன்றுவா
காலத்தின் போக்கில்
அரசியலில் இடம்பெற்றால்
கரணமடிக்கும் கலையுனக்கு
கட்டாயம் கை கொடுக்கும்.

சீ. தங்கவடிவேல்-
மட்டக்களப்பு.

## வாசக(ர்) சாலை

முரசு கொட்டும் மலரே,

நீ கொட்டும் மலரின் இதழ்கள் எங்களை மிகவும் கவர்ந்து விட்டன. அதில், மிகவும் வாசனை தரும் 'இலக்கிய நயம்' இதழைத் தரும் ரசிகனுக்கு என் பாராட்டுக்கள்.

ஏ.ஜே.எம்.ஜ.ஃபர், கொழும்பு-15.

பாரு பாரு முரசு பாரு! நாலு பக்கம் வர்ணம் பாரு! பிரபாகரின் கதைய பாரு! ரசிகனோட நயத்தை பாரு! கவிதைப் போட்டி இங்க பாரு! சிறு கதைகள் அங்க பாருடா! என் இதயம் வென்ற முரசு இதுவடா.

எம்.இரவீந்திரன், இராகலை.

எம் இனிய முரசே!

நீ சுமந்து வரும் ஆக்கங்களில் சூடு, சுவை, சுவாரசியம், எல்லாம் அடங்கி உள்ளன. 'கொள்ளை ராணி பூலான் தேவி'யின் தொடருக்காக வாரந்தோறும். உனக்காக வழி மேல் விழி வைத்து காத்திருக்கிறோம். என்றும் உனது ஆக்கங்கள் ஒளியாக பிரசுரிக்க எமது வாழ்த்துக்கள்.

என்.நழிரா, நழிமியா, நிஸ்ரியா, கல்பிட்டி.

என் இனிய முரசே! நீ சுமந்துவரும் ஆக்கங்கள் அனைத்தும் சூப்பர்தான். அதிலே 'கொள்ளை ராணி பூலான் தேவி'யின் உண்மை கதையை ரசிகன் வழங்கும் பாணி படு சூப்பர்.

பி.ஆர்.அசோக்குமார், ஸ்டேம் ஃபொடில், டிக்கோயா.

இனிய முரசே!

நீ ஏந்திவரும் அனைத்து ஆக்கங்களும் சூப்பர்! பூலான் தேவியின் கதைத் தொடரைத்தரும் ரசிகனுக்கு எனது நன்றி! காதில பூ கந்தசாமி எம்.ஜி.ஆரின் ஆவியுடனான பேட்டி, அசத்தல். முரசின் பணி தொடரட்டும்! என் இனிய வாழ்த்துக்கள்!

பீ.எம்.எம்.அன்ஸார், புதிய தெரு, வெலிகம.

'பேச்சுக்கு உதவாத முன் நிபந்தனைகள்' தொடர்பாக இராஜதந்திரி சிறப்பாக அலசியிருந்தார். பாராட்டுக்கள்.

ஆயுதங்களைக் கைவிட்டவர்கள் எதுவும் சாதிக்க முடியவில்லை என்பதும், அரசும் நம்பிக்கையூட்டும்படி எதுவும் செய்யவில்லை என்பதும் வெளிப்படை. தொடர்ந்தும் உண்மைகளை முரசு நடுநிலை நின்று வெளியிட வாழ்த்துக்கள்.

நவீனன், தெகிவளை.

ஆசிரியருக்கு!

தமிழ் மக்களுக்கு வெளிநாட்டுத் தலைமை தேடும் குமார் பொன்னம்பலம் போன்ற அரசியல்வாதிகள் கண்டிக்கப்படவேண்டியவர்களே. இரத்தம் சொட்டுவதும், இன்னல்கள் சுமப்பதும் மட்டும்தான் இங்குள்ள தமிழர்களுக்கு இலாயக்கு என்று நினைத்துவிட்டார்கள் போலும். "தம்பிமாருக்கு சுடத்தான் தெரியும், அரசியல் தெரியாது" என்று முன்னர் கூட்டணியினர் சொன்னதையும் இப்போது நினைவுகூரவேண்டும். கூட்டணி முதல் குமார் வரை அனைவருமே தம்பிமாரின் முதுகில் சவாரி செய்யவே ஆசைப்படுகிறார்கள். அதன் பொருட்டு இடைக்கிடையே தம்பிமாரின் முதுகையும் தட்டிக் கொடுத்திடுவர்!.

ஜெ.தனபாலசிங்கம், கொழும்பு-6. (இடம் பெயர்ந்த தமிழன்)

'தா' எதிர்பாராத திருப்பத்துடன் தொடருவது நமக்கெல்லாம் இன்ப அதிர்ச்சி. மதன் கீதாவைக் கொன்றது சரிதான். தகுந்த பரிசுதான்.

செல்வன் இ.கஜேந்திரன், வெள்ளவத்தை.

தொடர் 'தா' முதல்பாகம் நெத்தியடியான முடிவோடு நிறைவு கண்டது. பட்டுக்கோட்டை பிரபாகரின் பல நாவல்களை நான் படித்திருக்கிறேன். எனினும் 'தா' அவற்றில் வித்தியாசமாய்- தனி முத்திரை பதித்துவிட்டது. தொடரட்டும் விறுவிறுப்பு.

எம்.எச்.தம்பிக், புத்தளம்.

டியர் முரசு!

பிரபாகர் என்ற பெயருடையவர் எல்லாம் ஏன் எதிர்பாராத முடிவையே தருகிறார்கள்? "தா"வைத் தான் சொல்கிறேன். சிந்தியா வளர்பிறைபோல் மெருகு கூடுகிறது.

சுபாவரன், கண்டி.




**முரசுக்கு மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்படுபவர்கள்:**

* பி.கிறிஸ்ரி அன்ரனி, மட்டுநகர்.
* செ.பத்மசீலன், வீ.குகதாசன், மட்டக்களப்பு.
* மா.மகேஸ்வரன், தன்னாமுனை.
* ஹஸ்னி ஸாலி, மக்கொன.
* ஆர்.ராஜகலா, பசறை.
* சரவணேஸ் டெயிசி, கலவான.
* மொஹமட் ஸன்பர், கிண்ணியா.
* கி.பாஸ்கரன், நானு ஓயா.
* செல்வி சுந்தரம் சுபத்ரா, சுசீலா, சுமதி, கோளாவில்-02.
* இரா.சுபாஷினி, அட்டன்.
* எம்.சீ.எம்.சன்பரா பாஹிர், கொட்டராமுல்ல.
* க.சுதர்சன், செங்கலடி.
* டில்சாட் தேவதாசன், கொழும்பு-15.
* கே.சுப்பிரமணியம், நெல்லிமலை.
* பி.சண்முகவள்ளி, வெலிகந்த.
* ஐ.எம்.கிர்சாத், கிண்ணியா.
* செல்வி பாத்திமா றிஸ்வானா சித்தீக், வாடியகொட.

நாட்களை மறந்தாலும், தினமுரசு வரும் நாளை மறப்பதே இல்லை! முரசில் 'சிந்தியா பதில்கள்'களில் வரும் துணுக்குகள் சிந்திக்க, சிரிக்க, வைக்கிறது. மக்கள் திலகம், எம்.ஜி.ஆரை நினைவு கூர்ந்தது, பாராட்டத்தக்கது.

ஏ.ஜே.மர்லியா பேகம், இக்பால் நகர், மூதூர்-3.


படிப்பகம்

www.padippakam.com

# மழைக்காலத் தாக்குதலுக்கு புலிகள் ஆயத்தம்!

# யாழ் குடாநாட்டில் நெருக்கடி ஆரம்பம்!

யாழ்-குடாநாட்டில் விரைவில் மழைக் காலம் ஆரம்பமாகப்போகிறது. மழைக் காலத்தில் யாழ் குடாநாட்டில் பரவலான கெரில்லாத் தாக்குதல்களில் ஈடுபட புலிகள் இயக்கத்தினர் திட்டமிட்டு வருகின்றனர்.

யாழ் குடாநாட்டில் ஊடுருவித் தாக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக வன்னியில் புலிகளின் அணிகளுக்கு விசேஷ பயிற்சிகள் வழங்கப்பட்டுவருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ் குடாநாட்டில் படையினர் நிலை கொண்டிருக்காத பகுதிகளில் புலிகள் இயக்கத்தின் புதிய அணிகளின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மக்கள் நிலை

யாழ் நகரில் தட்டா தெருச் சந்திக்கு அப்பால் படையினரின் நடமாட்டம் அதிகம் இருப்பதில்லை. தட்டா தெருச் சந்தியில் படையினரின் தடை முகாம் இருக்கிறது.

தட்டாதெருச் சந்திக்கு அப்பால் உள்ள பகுதிகளைச் சேர்ந்த மக்கள் யாழ் நகருக்குச் சென்றுவருவதற்கு கடும் கட்டுப் பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களோடு புலிகள் இயக்கத்தினரும் உள்ளே புகுந்து விடலாம் என்று கருதியே கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டுள்ளன.

சமீபத்தில் நடைபெற்ற நல்லூர் கந்தசாமி கோவில் திருவிழாவுக்கு செல்வதற்கும் படையினர் நிலைகொண்டிருக்காத பகுதி மக்கள் சிரமங்களை எதிர்நோக்கினார்கள்.

புலிகளின் ஊடுருவலையும் தடுக்க வேண்டும்; பொதுமக்களையும் அதிருப்தி அடையாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். இந்த இரண்டு கடமைகளையும் ஒரே நேரத்தில் எப்படிச் செய்வது என்பதுதான் படையினர் எதிர்நோக்கும் பிரச்சனையாகும்.

இவ்வாறான நிலையில் புலிகளின் தாக்குதல்களும் தீவிரமானால் நிலவரம் மேலும் நெருக்கடிக்கு உள்ளாகும் என்று அஞ்சப் படுகிறது.

## போக்குவரத்து

யாழ் குடாநாட்டுக்கு வெளியே போக்குவரத்து செய்வதற்கு உள்ள கஷ்டத்தைவிட, யாழ் குடாநாட்டுக்குள் போக்குவரத்தில் ஈடுபடுவதே பெரும் சிரமத்துக்குரிய காரியமாக மாறிவருகிறது.

யாழ் குடாநாட்டில் படையினர் நிலை கொண்டிருக்காத பகுதிகளில் உள்ள மக்கள் யாழ் வைத்தியசாலைக்குச் செல்வது, யாழ் குடாநாட்டுக்கு வெளியே உள்ளவர்களுடன் கடிதத் தொடர்புகள் மேற்கொள்வது, யாழ் நகரில் உள்ள அரச செயலகம், வங்கிகள் போன்றவற்றுக்கு செல்வது போன்றவை தற்போதே பெரும் சிரமமான காரியங்களாக மாறிவிட்டன.

எதிர்காலத்தில் இந்த நிலை மிகவும் மோசமாகலாம் என்று அங்குள்ள மக்கள் கவலை கொண்டுள்ளனர்.

புலிகள் இயக்கத்தினரும் இவ்வாறான நிலைமைகள் ஏற்படுவதை விரும்பவே செய்கின்றனர்.

படையினர் தொடர்பாகவும், அரசாங்கம் தொடர்பாகவும் மக்கள் நேரடியாக அனுபவித்து அறிந்துகொள்ளட்டும் என்பதுதான் புலிகள் இயக்கத்தினரின் நிலைப்பாடாகும்.

அதனால் யாழ் குடாநாட்டில் நெருக்கடி நிலையை மேலும் இறுக்கமாக்கும் வகையில் தான் புலிகள் இயக்கத்தினர் தமது நடவடிக்கைகளை மேற்கொள்வர்.

## பலப்பரீட்சை

எதிர்வரும் மழைக்காலத்தை தமது கெரில்லா நடவடிக்கைகளுக்கு சாதகமாகப் பயன்படுத்தி பரவலான தாக்குதல்களை புலிகள் மேற்கொள்ளப் போகின்றனர்.

"யாழ் குடாநாட்டில் நிலை கொண்டிருப்பது எத்தனை ஆபத்தானது என்பதை படையினருக்கு உணர்த்துவோம்" என்று புலிகள் இயக்கத்தினர் கூறிவருவது குறிப்பிடத்தக்கது.

மழைக்காலம் எத்தனை கடுமையாக இருக்கிறதோ அதற்கேற்ப யாழ் குடாநாட்டு நிலவரமும் கெரில்லாக்களுக்கு சாதகமாக இருக்கும் என்று இராணுவ விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

படைத்தரப்பினரும் மழைக்கால தாக்குதல்கள் நடைபெறக்கூடும் என்று எதிர் பார்க்கவே செய்வர்.

எனவே இருதரப்புப் பலப்பரீட்சையும் இனித்தான் யாழ் குடாநாட்டில் கடுமையாகும்.

# சட்ட அதிகாரமில்லாத ஒருங்கிணைப்புக் குழு!

## தமிழ்க் கட்சிகள் மத்தியில் தடுமாற்றம்!

வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்கான ஒருங்கிணைப்புக் குழுவை அரசாங்கம் நியமித்துள்ளது. வடக்கு-கிழக்கு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதே இக் குழுவின் முக்கிய பணி என்று கூறப்படுகிறது.

ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் நியமிக்கப் பட்டுள்ளார்.

வடக்கு-கிழக்கில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்களின் பிரதிநிதிகளைக் கொண்டே அங்கு அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு வேலைகள் நடைபெறுவதாக காட்டுவதற்கு அரசாங்கம் விரும்புகிறது.

அவ்வாறான ஒரு அமைப்பின் மூலம் மேற்கொள்ளப்படும் புனரமைப்பு வேலைகளை புலிகள் சீர்குலைத்தால், புலிகளுக்கே கெட்டபெயர் ஏற்படும் என்று அரசாங்கம் நினைக்கலாம்.

அதுதவிர வடக்கு-கிழக்கு புனரமைப்புக்கு என்று பெருமளவு நிதியை வெளிநாடுகளில் இருந்து பெற்றுக்கொள்ளவும் ஒருங்கிணைப்புக்குழு பயன்படலாம்.

வடக்கு-கிழக்கு புனரமைப்புப் பணிகள் அங்குள்ள தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் மூலமே நடைபெறுகின்றன. எனவே வெளிநாடுகள் சந்தேகம் கொள்ளாமல் உதவலாம் என்று அரசாங்கம் சொல்வதற்கும் ஒரு வாய்ப்பு ஏற்படும். எனவேதான் அவசரமாக ஒருங்கிணைப்புக்குழு உருவாக்கப்பட்டது என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

### புலிகளின் நிலை

வடக்கு-கிழக்கில் அபிவிருத்திப் பணிகள் எதனையும் செய்ய அனுமதிப்பதில்லை என்பதே புலிகள் இயக்கத்தின் நிலைப் பாடாகும். இந்நிலையில் குறிப்பிட்ட ஒருங்கிணைப்புக்குழு தனது நடவடிக்கைகளை எப்படி மேற்கொள்ளப்போகிறது என்பது கேள்விக்குறிதான்.

இதேவேளை குறிப்பிட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் அங்கம் வகிப்பது தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் இரு மாறுபட்ட அபிப்பிராயங்கள் எழுந்துள்ளதாகத் தெரிகிறது.

"இடைக்கால ஏற்பாடுகள் எதுவும் தேவையில்லை; நிரந்தரத்தீர்வே தேவை" என்று சில மாதங்களுக்கு முன்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி கூறியிருந்தது.

வடக்கு-கிழக்கில் யுத்தம் நடைபெறும் சூழ்நிலையிலும் அங்கு அபிவிருத்திப் பணிகள் நடைபெறுகின்றன என்று காட்டுவதற்கு குறிப்பிட்ட ஒருங்கிணைப்புக் குழுவும் பயன்படலாம். இந்நிலையில் குறிப்பிட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் கூட்டணி பங்கு பெற்றுமானால் இதுவரை அக்கட்சி கூறி வந்த கருத்துக்களுக்கு நேர்மாறாகவே இருக்கும் என்று ஒரு சாரார் கூறுகின்றனர்.

ஆயினும் அடுத்த தேர்தலிலும் போட்டியிட விரும்பும் பிரமுகர்கள் சிலர் ஒருங்கிணைப்புக் குழுவில் பங்குகொள்ள வேண்டும் என்று விரும்புகின்றனர். அதன் மூலமாக மக்களிடம் செல்வாக்குப் பெற்றுக் கொள்ள முடியும் என்று கருதுகின்றனர்.

### அதிகாரமில்லை

ஏற்கனவே, ஈ.பி.டி.பி., புளொட், முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஒன்று தேவை என்று கோரிக்கை விடுத்திருந்தன.

எனினும் ஈ.பி.டி.பி., புளொட் இரண்டும் தற்போதைய ஒருங்கிணைப்புக் குழு தொடர்பாக கடும் அதிருப்தி தெரிவித்துள்ளன.

குறிப்பிட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் மேற்படி இரு கட்சிகளும் பங்கு கொள்ளுமா, இல்லையா என்பது திட்டவட்டமாகத் தெரியவில்லை.

எது எப்படியிருந்தபோதும், குறிப்பிட்ட ஒருங்கிணைப்புக் குழு சட்டபூர்வ அதிகாரம் கொண்ட ஓர் அமைப்பாக இருக்காது. வடக்கு-கிழக்கு ஆளுநர் ஒருங்கிணைப்புக் குழுவில் அங்கம் வகிப்பார். இணைத்தலைவராகவும் இருப்பார். ஆயினும் மேற்படி ஒருங்கிணைப்புக் குழுவின் முடிவுகளை அவர் செயற்படுத்தியே தீர வேண்டும் என்று கட்டாயமில்லை. அதுபோல வடக்கு-கிழக்கு மாகாண சபையையும் மேற்படி ஒருங்கிணைப்புக்குழு கட்டுப்படுத்தும் சட்டபூர்வ அதிகாரம் கொண்டதல்ல.

# "தமிழரின் பிரச்சனை அபிவிருத்திப் பிரச்சனையல்ல"

## வடக்கில் விடுதலைப் புலிகள் தெரிவிப்பு!

"வடக்கு-கிழக்கில், குறிப்பாக வடக்கில் நடைபெறும் நிவாரணப் பணிகளும் புனர் நிர்மாணப் பணிகளும் ஒரு பொறி. இந்தப் பொறியில் தமிழ் மக்கள் சிக்கிவிடக்கூடாது." இவ்வாறு விடுதலைப் புலிகள் அமைப்பினரால் 'தேசபக்தர்கள்' என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ள பிரசுரம் ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அந்தப் பிரசுரத்தில் மேலும் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

"கடந்த கால் நூற்றாண்டு காலமாக நாங்கள் போராடியதெல்லாம் இப்படி இந்தச் சலுகைகள், நிவாரணங்களுக்காகத்தான் என்று வெளியுலகுக்குக் காட்ட நினைக்கிறது சிறிலங்கா அரசாங்கம்

ஒரு புதிய மாயச் சொகுசுக்குள் எங்களைச் சிக்க வைப்பதன் மூலம், எங்களுடைய மாறாத காயங்களின் வேதனைகளில் இருந்து திசை திருப்பிவிடலாம் என்று கற்பனை செய்கிறார்கள்.

மட்டக்களப்பிலும், திருமலையிலும் தமிழர்கள் இருக்கிறார்கள். ஆனால் யாழ்ப் பாணத்தவர்களோடு நேரடியாகப் பேசப் போவதாகச் சந்திரிக்கா கூறுகின்றார்.

நேரடியாகப் பேசுவது என்றால் என்ன? சந்தி, தெருக்களில், திண்ணைகளில் வைத்து தமிழர்களோடு கதைப்பதா? இப்படி ஒரு பேச்சுவார்த்தை உலகில் வேறெங்கும் நடந்ததே இல்லை.

இதுவரை காலமும் "புலிகளுடன் பேச முடியாது. கொழும்பில் உள்ள தமிழ் அரசியல் வாதிகளுடன்தான் பேசுவேன்" என்று கூறினார். இப்போது அதுவுமில்லை.

தமிழர்களின் பிரச்சனை உதிரிகளின் பிரச்சனை அல்ல; தமிழர்களின் பிரச்சனை அபிவிருத்திப் பிரச்சனையுமல்ல. தமிழர்கள் ஒரு திரளான தேசிய இனம். ஒரு தேசிய இனத்தின் திரட்டப்பட்ட, விலை கூறப்பட முடியாத கூட்டு உரிமைகளுக்காகவே தமிழர்கள் போராடிக் கொண்டு இருக்கிறார்கள். சலுகைகள் நிவாரணங்களுக்காக அல்ல." இவ்வாறு அப்பிரசுரத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# யாழ் செல்லுமாறு தமிழ் கட்சிகளுக்கு அழைப்பு!

## புளொட், ஈ.பி.டி.பி. கட்சிகள் மறுப்பு!

யாழ் குடாநாட்டுக்கு தமிழ்க் கட்சிகள் செல்வதற்கு அரச தரப்பில் முன்னர் தயக்கம் காட்டப்பட்டமை தெரிந்ததே.

புளொட், ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈரோஸ், ரெலோ, ஈ.பி.டி.பி. ஆகிய ஐந்து கட்சிகள் யாழ் சென்று அங்குள்ள நிலவரத்தைக் கண்டறிந்து வருவதற்கு தமது பிரதிநிதிகளை அனுப்ப முடிவெடுத்தன. இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் அனுமதியையும் கோரியிருந்தன.

பாதுகாப்புக் காரணங்களுக்காக என்று கூறப்பட்டு அனுமதி வழங்கப்படுவது தாமதிக்கப்பட்டது.

இதேவேளை யாழ் குடாநாட்டுக்கு தமிழ் கட்சிகள் ஆயுதங்களுடன் செல்ல முடியாது என்று அரசாங்கத்தால் கூறப்பட்டது.

சமீபகாலத்தில் யாழ் நிலவரம் திருப்திகரமாக இல்லை என்று செய்திகள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

யாழ் குடாநாட்டில் மனித உரிமை மீறல்கள் நடைபெற்றுவருகின்றன. வகை தொகையற்ற கைதுகள் இடம்பெற்றுவருகின்றன. கைதுசெய்யப்பட்ட சிலர் காணாமல் போயுள்ளனர்.

ஆண்கள் மட்டுமன்றி பெண்களும் பெருமளவில் கைதுசெய்யப்படுவதாகவும் செய்திகள் கிடைத்துவருகின்றன.

கடந்தவாரம் ஜனாதிபதி சந்திரிக்கா ஈ.பி.டி.பி, புளொட் ஆகிய கட்சிகளை அழைத்துப் பேச்சு நடத்தினார்.

இரண்டு கட்சிகளும் யாழ் செல்ல விரும்பினால் அரசாங்கம் அனுமதி வழங்கும். சொந்தப் பாதுகாப்புக்கான ஆயுதங்களையும் கொண்டு செல்ல முடியும், என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா, புளொட் தலைவர் சித்தார்த்தன் இருவரும் அரசாங்கத்தின் கோரிக்கை தொடர்பாக தாம் உடனடியாகப் பதில் சொல்ல முடியாது என்று ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

"யாழ் குடாநாட்டில் ஈ.பி.டி.பி.யின் பெயரைப் பயன்படுத்தி ஆட்கடத்தல்கள் நடைபெற்றுள்ளன. இது யாழ் குடாநாட்டு மக்களிடம் தமிழ் அமைப்புக்கள் தொடர்பாக தவறான அபிப்பிராயத்தை உருவாக்கும் திட்டமிட்ட நடவடிக்கையாகும். இதற்குக் காரணமானவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப் படவேண்டும்," என்று டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியிடம் புகார் தெரிவித்தார்.

"யாழ் குடாநாட்டில் தற்போதுள்ள நிலை வரவேற்கக்கூடியதாக இல்லை. இந்நிலையில் நாம் யாழ் சென்றால் பழியெல்லாம் நம் தலைமீது விழுந்துவிடும். எனவே இது குறித்து எமது கட்சியினருடன் பேசிவிட்டே முடிவு சொல்ல முடியும்" என்று புளொட் தலைவர் சித்தார்த்தன் ஜனாதிபதியிடம் கூறினார்.

இச்சந்திப்பில் ஜனாதிபதியுடன் இராணுவத் தளபதியும், ஜனாதிபதியின் செயலாளரும் கலந்துகொண்டனர்.

புளொட், ஈ.பி.டி.பி. வட்டாரங்களுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, 'தற்போதைய நிலையில் யாழ்ப்பாணம் செல்வதற்குத் தாம் விரும்பவில்லை' என்று தெரிவித்தன.

# அமைச்சர் அஷ்ரப் புத்தளம் விஜயம்!

## இடம்பெயர்ந்தோருக்கு நிதி ஒதுக்கீடு

(புத்தளம் நிருபர்)

புனர்வாழ்வு, புனரமைப்பு, கப்பற்றுறை, துறைமுகங்கள் அமைச்சர் அல்ஹாஜ், எம்.எச்.எம். அஷ்ரப் இருநாள் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு அக்டோபர் 5ஆம், 6ஆம் திகதிகளில் புத்தளம் தொகுதிக்கு விஜயம் செய்கின்றார்.

பல அபிவிருத்தித் திட்டங்களை அமைச்சர் அத்தினங்களில் ஆரம்பித்து வைப்பார்.

யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஐ.எம். இல்யாஸ் அவர்களின் அழைப்பின்பேரில் அமைச்சர் இந்த விஜயத்தை மேற்கொள்கின்றார்.

இடம்பெயர்ந்த குழந்தைகளும் காலை நேரப் பாடசாலைகளில் கல்விபெற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என இடம்பெயர்ந்தவர்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து அமைச்சர், புத்தளம் தொகுதியில் மேலதிகமாக 26 பாடசாலைகளை அமைக்க உத்தரவு பிறப்பித்தார்.

இதற்கென புனர்வாழ்வு அமைச்சிலிருந்து 3 கோடி 60 இலட்சம் ரூபாயும் அமைச்சரினால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. கட்டிமுடிக்கப்பட்டுள்ள 26 பாடசாலைகளையும் வைபவரீதியாக திறந்துவைக்கவே அமைச்சர் இந்த விஜயத்தை மேற்கொள்கின்றார்.

அமைச்சருடன், பிரதியமைச்சர் திரு. மகிந்த விஜயசேகரா, முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள், புனர்வாழ்வு அமைச்சின் உயரதிகாரிகள் ஆகியோரும் வருகை தருகின்றனர்.

## திலீபன் நினைவு தினம்

இந்திய அமைதிப்படைக்கு எதிராக சாகும்வரை உண்ணாவிரதம் அனுஷ்டித்து மரணமானவர் திலீபன்.

தீலிபனின் ஏழாவது நினைவுநாள் 15.09.96 முதல் புலிகள் இயக்கத்தின் கட்டுப் பாட்டில் உள்ள பகுதிகளில் அனுஷ்டிக்கப் பட்டுவருகின்றது.

நீர்கூட அருந்தாமல் 12 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து பலியானவர் திலீபன் என்பது குறிப்பிடத்தக்கது. 12 நாட்களுக்கு திலீபன் நினைவுதினம் புலிகள் இயக்கத்தினரால் அனுஷ்டிக்கப்படுகிறது.

வெளிநாடுகளில் உள்ள புலிகள் இயக்க கிளைகளாலும் திலீபன் நினைவு நாள் அனுஷ்டிக்கப்படுகிறது.

## "பாதுகாப்பு படை உருவாகும்"

தமிழ் நாட்டில் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் ஒரு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

"தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுகின்றனர். இராமநாதபுர மீனவர்கள் அவ்வாறு தாக்கப்பட்டுள்ளனர். இந்திய அரசு இவ்விடயத்தில் பாராமுகமாக இருக்குமானால் பாட்டாளி மக்கள் கட்சித் தொண்டர்கள் துணையுடன் 'தமிழக மீனவர்கள் பாதுகாப்புப் படை' ஒன்று உருவாகும். அது இலங்கைப் படையினரை எதிர்த்துப் போராடும்" என்று கூறியுள்ளார்.

# கொட்டும் மழையிலும் தொடரும் இடம்பெயர்வு!

## தமிழகம் செல்வோர் தொகை அதிகரிப்பு!

(மன்னார் நிருபர்)

இலங்கையின் வடமேற்குப் பகுதியான மன்னார்ப் பகுதியிலிருந்து தமிழகம் செல்வோரின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

பேசாலை நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த 76 குடும்பங்களும் தமிழகம் சென்றுவிட்டன. இது தவிர உள்ளூர் மக்களில் சிலரும் இந்தியா சென்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

கொட்டும் மழையையும் பாராமல் ஏராளமான அகதிகள் படகுகளுக்காக காத்திருந்த சம்பவமும் அண்மையில் நிகழ்ந்தது. "எங்கள் உயிரைக் காப்பாற்ற இந்தியா செல்கிறோம்" என மழையில் நனைந்தபடி மூட்டை முடிச்சுக்களுடன் சென்ற ஒருவர் சொன்னார்.

சில நாட்களாக குறைந்திருந்த தமிழ் நாட்டிற்கான இடம்பெயர்வு, கடந்த வாரம் முதல் மீண்டும் அதிகரித்துள்ளது. பகல் வேளைகளிலும் படகுகளில் அகதிகள் செல்வதாகவும் கூறப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க எருக்கலம்பிட்டி பகுதியில் தற்காலிகமாக தங்கியிருந்த பாதுகாப்புப் படையினர் கடந்தவாரம் முதல் முகாமைக் காலி செய்து வேறிடத்துக்குச் சென்றுவிட்டனர் என அறிவிக்கப்பட் டுள்ளது.

# யாழ் மருத்துவ பீடம் மூடப்படுமா?

## மாணவர்கள் மத்தியில் அச்சம்! கவலை!!

அண்மைய யுத்தப் பேரழிவுகளின் பின்பு எழுந்துள்ள அமைதியற்ற சூழல் காரணமாக, யாழ் மருத்துவ பீடத்தில் போதிய விரிவுரையாளர்கள் சேவையில் இல்லாத நிலை தோன்றியுள்ளது. இதைச் சாக்காக வைத்து இலங்கை மருத்துவ கவுன்சில் தனது அங்கீகாரத்தை இரத்துச் செய்து யாழ் மருத்துவ பீடத்தை நிரந்தரமாக மூடிவிடுமா? என்ற ஐயப்பாடு மாணவர்கள் மத்தியில் தோன்றியுள்ளது.

### விரிவுரையாளர்கள் இல்லை

முதல் இரு வருட எம்.பி.பி.எஸ். படிப்பிற்குப் பின்புள்ள 3ம் வருட, 4ம் வருட, மற்றும் இறுதியாண்டு விரிவுரைகளிற்கே பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் அற்ற நிலை நிலவுகின்றது.

இறுதியாண்டு மாணவர்களுக்கான நியமனம் அடுத்து வரும் 2 மாதத்தில் முடிந்தபின் மேலும் நெருக்கடிகள் தோன்றலாமென்றும்; இறுதி வகுப்புக்களை கொழும்புக்குச் சென்று தொடர வேண்டிய நிர்ப்பந்தம் எழுமா? எனவும் மாணவர்கள் மேலும் அச்சம் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடி நிலையில் அவ்வாறு கொழும்பிற்குச் செல்ல வேண்டியேற்படின் எம்.பி.பி.எஸ், பட்டத்தைப் பெறாமல் இடை நடுவே படிப்பை நிறுத்தவேண்டியேற்படும் என மூத்த மாணவர் ஒருவர் கண்ணீர் மல்கக் கூறினார்.

### ஒரே ஒரு வைத்தியர்

மேற்படி பீடத்தில் எல்லாமாக பத்துப் பேராசிரியர்களும், மூத்த விரிவுரையாளர்களும் இளநிலை விரிவுரையாளர்களும் நிரந்தர ஊழியர்கள் மற்றும் சில வைத்தியர்களும் சேவை வழங்கவேண்டிய இடத்தில், ஒரே ஒரு வைத்தியர் மட்டுமே மேற்படி பொறுப்புக்களைச் சுமந்து வருகின்றார் என்பது வேதனைக்குரியது.

கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் கடமையாற்றும் வைத்தியர்களில் சிலர் சுழற்சி முறை அடிப்படையில் 2 மாதத்திற்கொருவராக யாழ் மருத்துவ பீடத்திற்குச் சென்று கடமையாற்ற முன் வருவார்களாயின் நிலைமை ஓரளவு சீரடையாலாம் என்றும் நம்பப்படுகின்றது.

### அசமந்தப் போக்கா?

இத்தகைய பாரதூரமான நிலையிலிருந்து யாழ் மருத்துவபீடத்தைக் காப்பாற்ற பொறுப்பானவர்கள் எவரும் முன்வராமல் தட்டிக் கழிக்கின்றார்களா? என்ற ஐயப்பாடும் அம்மாணவர்கள் மத்தியில் தோன்றியுள்ளது.

இங்கிருந்து பட்டம் பெற்று வெளியேறுவோர் இலங்கையின் எல்லா மருத்துவமனைகளிலும் சேவையாற்றுவோர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த 10 வருடங்களாக 500க்கு மேற்பட்ட மருத்துவ பட்டதாரிகள் இங்கிருந்து வெளியேறியதோடு தற்போது 500 மாணவர்களிற்கும் குறையாமல் கல்வி கற்றும் வருகின்றனர்.

## கேள்விக்குள்ளாகும் யாழ் போதனா வைத்தியசாலை

5 இலட்சம் மக்கள் வாழும் யாழ் குடாநாட்டின் ஒரேயொரு போதனா வைத்தியசாலையான யாழ் பெரியாஸ்பத்திரியில் சத்திர சிகிச்சை மேற்கொள்ள எவருமில்லாத நிலையே காணப்படுகின்றது. மகப்பேற்றுக்கும், குழந்தை மருத்துவத்திற்கும்கூட ஒரு நிபுணரும் இல்லை என அறிவிக்கப்படுகின்றது.

இருந்தபோதிலும், தற்போது ஒரேயொரு சிரேஷ்ட வைத்திய ஆலோசகர் மட்டுமே கடமையாற்றி வருவதானது அங்குள்ள மக்களுக்கு வயிற்றில் பால் வார்த்தது போல் ஆறுதலைத் தருகின்றது.



படிப்பகம்

www.padippakam.com

# பஸ் சேவைக்கு படையினர் அனுமதி?

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு- பதுளை வீதியில் செங்கலடிச் சந்தியிலிருந்து உறுகாமம், உன்னிச்சை போன்ற- படையினரின் கட்டுப்பாட்டிலில்லாத- பகுதிகளுக்கான பஸ் சேவைகள் பல மாதங்களாக அனுமதிக்கப்படவில்லை. இதனால் பாடசாலை மாணவர்கள் உட்பட அப் பகுதியிலுள்ள மக்கள் அனைவரும் பல தேவைகளுக்காக நகர்ப் பகுதிகளுக்கு வந்து செல்ல 15 மைல் தூரத்தைக் கால் நடையாகவே பயணம் செய்தனர். அவசர ஆபத்து வேளைகளுக்குக்கூட எதுவித வாகனங்களும் அப்பகுதியில் அனுமதிக்கப்படவில்லை. இதனால் போக்குவரத்தில் மக்கள் சொல்லொண்ணாத் துன்பத்தை அனுபவித்துவந்தனர்.

எனினும் இக்கஷ்டங்களை நீக்குமுகமாக கடந்த 09.09.96 தொடக்கம் பதுளை வீதியில் உறுகாமத்திற்கும், உன்னிச்சைக்குமாக மட்டக்களப்பு டிப்போவினால் இரு பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் தரப்பினால் புலிகளுக்கும், படையினருக்கும் கொடுக்கப்பட்ட நெருக்குதல்கள் காரணமாகவே இரு தரப்பினரும் பஸ் சேவைகள் நடத்த இசைந்து கொடுத்துள்ளனர். ஆயினும் பதுளை வீதியால் பிபிலை, பதுளை, நுவரெலியா போன்ற சேவைகளுக்காக அனுமதி இன்னமுமில்லை. இப்பகுதிகளுக்கான பயணிகள் அம்பாறை அல்லது பொலநறுவை வழியாகவே பயணம் செய்ய வேண்டியுள்ளது.

இதனிடையே புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மட்டக்களப்பு வாகரைக்கான பஸ் சேவையும் இன்னும் சில நாட்களில் அனுமதிக்கப்படலாம் என்று தெரியவருகிறது.

# இந்தி நடிகர் சுனில் ஷெட்டி

## அரவிந்த டி சில்வாவின் பரம இரசிகர்

பிரபல இந்தி சினிமா நடிகர் சுனில் ஷெட்டி அண்மையில் இங்கு நடைபெற்று முடிவடைந்த சிங்கர் கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் சிறப்புப் பார்வையாளராகக் கலந்து கொண்டார். இலங்கை கிரிக்கெட் சபையின் விசேட அழைப்பின் பேரில் இங்கு வந்திருந்த சுனில் ஷெட்டி, இந்திய அணியின் தோல்வியினால் மனமுடைந்து போய்விட்டார். "இறுதிப் போட்டியில்கூட இந்திய அணி பங்குபற்ற முடியாது போனதால் நான் அதிர்ச்சியடைந்தேன்," என்று செய்தியாளர்கள் மத்தியில் பேசும் போது கூறினார்.

இந்தியக் கிரிக்கெட் துறையில் அஸாருதீன் ஒரு மாபெரும் வீரர் என்று கூறும் சுனில், இலங்கை வீரர் அரவிந்த டி சில்வா தனது அபிமானத்துக்குரியவர் என்று சொன்னார். "சந்தர்ப்பத்துக்கேற்ப தனது ஆட்டத்திறமைகளை மாற்றக் கூடிய திறமைசாலி அரவிந்த டி சில்வா" என்று பாராட்டியுள்ளார் சுனில் ஷெட்டி.

சுனில் ஷெட்டி இளமையிலிருந்தே கிரிக்கெட்டில் மிக்க ஆர்வம் கொண்டவர். திரைப்படங்களில் நடிப்பதற்காகச் செலவிடும் நேரத்தைத் தவிர்ந்த ஏனைய வேளைகளில் தற்காப்புப் போர்க் கலைகளான கராட்டி மற்றும் குங்ஃபூ முதலியவற்றில் பயிற்சியிலீடுபடுவார். கராட்டியில் இவர் கறுப்புப்பட்டி பெற்றவர். பள்ளி வாழ்க்கையில் முன்னாள் கிரிக்கெட் வீரர் ரவி சாஸ்திரியின் சக மாணவனுமாவார்.

# தலைமைச்செயலரின் தவறு

(திருமலை நிருபர்)

அரசகரும மொழிகள் நடைமுறைப் படுத்தற் பிரிவு ஒன்று வடக்கு-கிழக்கு மாகாண சபையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தலைமைச் செயலர் ஜி.கிருஷ்ணமூர்த்தியின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயக்கும் இப்பிரிவின் உதவிப் பணிப்பாளராக சி.வன்னியகுலம் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் கருமமாற்றப்படுவதை உறுதிப்படுத்துவதே இப்பிரிவின் நோக்கமாகும். இந் நடைமுறைக்கென ஒவ்வொரு திணைக்களத்திலும், ஒவ்வொரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து அரசாங்கமே மனமுவந்து தமிழில் அனுப்பும் சுற்று நிருபங்களைக் கூட, அதன் பிரதியுடன் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து கையொப்பமிட்டு சகல திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கின்ற நடைமுறையை கையாளுகிறார் தலைமைச் செயலர். அவர் இத்தகைய நடைமுறையை கைவிட்டாலே போதும்; தமிழ் அரசோங்கியது மாதிரித் தான் என்று கூறினார் மாகாணசபை உத்தியோகத்தர் ஒருவர். தலைமைச் செயலர் தனது தவறை முதலில் திருத்திக் கொள்வாரா?

# ஆதார வைத்தியசாலையின் அவலம்!

(காரைதீவு நிருபர்)

கல்முனை ஆதார வைத்தியசாலை எந்தளவுக்கு பாராமுகமாக கைவிடப்பட்டிருக்கின்றதென்பதை அங்குள்ள பிரேத அறையை (Mortuary) பார்த்தால் புரியும். மின் வசதியோ, குளிரூட்டி வசதியோ, சுகாதார வசதியோ முற்றாக இல்லை.

இதேபோன்றுதான் அங்குள்ள ஒவ்வொன்றும். இவ்வைத்தியசாலை 1889 இல் தோற்றம் பெற்று 1974ல் ஆதார வைத்தியசாலையானது. சரித்திரம் பேச சுவையாயுள்ளது. ஆனால் அங்குள்ள வசதிகளைப் பேசப்போனால் வாய்கூசும்.

ஒரு நிருவாகக் கட்டிடம் இல்லை. ஜெனரேட்டர் இல்லை, மருந்துக்களஞ்சிய சாலை இல்லை, டயறியா வார்ட் இல்லை, போதிய எம்.ஓ.குவாட்டர்ஸ் இல்லை, எக்ஸ்றே அறை வசதியுடனில்லை, Blood Bank அறைக்கான நவீன கருவிகள் இல்லை, போதிய அம்புலன்ஸ் இல்லை, சீரான தொலைபேசி இல்லை; வைத்திய நிபுணர் இல்லை, சத்திரசிகிச்சைக் கூடம் இல்லை. இன்னும் எழுதப்போனால் "முரசு" போதாது. அமைச்சர் பௌசி கண் திறப்பாரா?

# ஓய்வுபெறும் ஒரு துணிச்சல் பெண்மணி

திருக்கோணமலை மாவட்ட நீதிபதி திருமதி. சிவகாமசுந்தரி அருச்சுனா, ஆகஸ்ட் இறுதியுடன் சேவையிலிருந்து ஓய்வு பெற்றதையடுத்து அவரது கடமைகளை திரு. கே.பி.எஸ் வரதராசா பொறுப்பேற்றுள்ளார்.

அவரது முதல் நாள் அமர்வில் வழக்குகள் விசாரிக்கப்படமாட்டாது; தவணைகளே தரப்படும் என எதிர்பார்த்திருந்தோர், வழக்குகள் பல விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதால் தடுமாறிப் போனார்கள். புதிய மாவட்ட நீதிபதியின் சுறுசுறுப்பான கடமையுணர்வு பலரையும் வெகுவாகக் கவர்ந்துள்ளது.

நீதிபதி வாசஸ்தலத்தில் நிரந்தரமாகப் பயன் தரும் பழமரங்கள் நாட்டப்பட வேண்டும் எனத் தனது ஊழியரைக் கேட்டுக் கொண்ட அவர், இவை எமது எதிர்காலச் சந்ததிக்குச் செய்யும் சேவை எனவும் கூறினார்.

ஓய்வு பெற்ற நீதிபதி திருமதி. அருச்சுனா நேர்மைக்கும் துணிச்சலுக்கும் பெயர் பெற்றிருந்ததோடு, பொதுமக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றவராகவும் திகழ்ந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 'மட்டக்களப்பில் சிறுதெய்வ வழிபாடு' நூல் வெளியீடு

சைவாகம விதிகளுக்குப் புறம்பான சிறு தெய்வ வழிபாடு இலங்கையில் எங்கணும் நடைபெறுவதுண்டு. மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இவ்வழிபாடு கிராமங்கள்தோறும் உண்டு. இந்த வழிபாட்டு முறைகள் பத்ததி முறையில் அமைந்துள்ளன. இவ்வழிபாடுகள் நடைபெறும் ஆலயங்களில் பிராமணரல்லாதோர் தான் பூசைகளை நடத்துகின்றனர்.

மட்டக்களப்புக் கிராமங்களில் சிறு தெய்வ வழிபாடு எவ்வாறு இடம்பிடித்தது; வழிபாட்டு முறைகள் எவ்வாறு நடைபெறுகின்றது, என்பன போன்ற விபரங்களைக் கொண்ட 'மட்டக்களபில் சிறு தெய்வ வழிபாடு' என்ற நூலை மகிழை மகேசன் எழுதியுள்ளார். இதன் வெளியீட்டு விழா செப்டம்பர் மாதம் 29ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மட். தெய்வநாயகம் அரங்கில் நடைபெறுகிறது. கலாநிதி எஸ்.மௌனகுரு இந்நூலை வெளியிட்டுவைக்கிறார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை மற்றும் நுண்கலை பட்டப்படிப்பின் மேற்படிப்புத் திட்டத்துக்கான ஆலோசனை வழங்குவதற்காக பேராசிரியர் கா. சிவத்தம்பி மட்டக்களப்புக்கு வருக்கிறார். இந்நூல் வெளியீட்டிற்கு பேராசிரியர் சிவத்தம்பி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவிருக்கிறார்.

# மணிக்கூடுகள் குப்பையில்!

(மன்னார் நிருபர்)

மன்னார்ப் பகுதியில் வீடுகளிலுள்ள சுவர் மணிக்கூடுகள் குப்பை மேட்டுக்குச் செல்லும் நிலையை அடைந்துள்ளன.

இவற்றிற்குரிய பற்றரிகள் இல்லாமையே இதற்கான காரணமாகும். இப்பகுதிக்கு பற்றரி எடுத்துச் செல்வது, விற்பனை செய்வது என்பன தடை செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை வானொலிப் பெட்டிகளுக்காக இடையிடையே கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் டோர்ச் பற்றரிகள் விநியோகிக்கப்பட்டு வருகின்ற போதிலும், சுவர் மணிக்கூடுகளுக்காக பென்டோர்ச் பற்றரிகள் விநியோகிக்கப்படுவதில்லை.

இதனால் இப் பகுதியிலுள்ள நூற்றுக்கணக்கான வீடுகளில் காணப்படும் சுவர் மணிக்கூடுகள் தூசி படிந்த நிலையில் காணப்படுகின்றன.

# புத்தளத்தில் லொறியில் ஆயுதங்கள்

(புத்தளம் நிருபர்)

வவுனியாவிலிருந்து புத்தளம் வழியாக கொழும்பு சென்ற தனியார் லொறியிலிருந்து ஆயுதங்களும், சைனட் வில்லைகளும் கைப்பற்றப்பட்டன. இச் சம்பவம் அண்மையில் புத்தளத்திலுள்ள இஹல புளியங்குளம் என்னும் இடத்தில் அண்மையில் இடம் பெற்றது. இது குறித்து மேலும் கூறப்படுவதாவது:

முகம்மது மீரா மொஹிதீன் என்பவருக்குச் சொந்தமான 28ஸ்ரீ 1827 என்னும் இலக்கம் கொண்ட லொறி வவுனியா நகரிலிருந்து பொருட்களை ஏற்றிக் கொண்டு புத்தளம் நகருக்கு வந்தது. அங்கிருந்து அதன் பயணத்தை கொழும்பு நகருக்கு தொடரவிருந்தது.

புத்தளம்-வவுனியா வீதியில் உள்ள இஹல புளியங்குளம் என்னும் இடத்திலுள்ள தடைமுகாமில் வைத்து லொறி சோதனையிடப்பட்டபோது மறைத்து வைக்கப்பட்டிருந்த பின்வரும் பொருட்கள் புத்தளம் போலீஸாரால் கண்டெடுக்கப் பட்டன:

- ★ டி-56 ரக இயந்திரத் துப்பாக்கி-1
- ★ இயந்திரத் துப்பாக்கி ரவைகள்-125
- ★ மெகஸின்-4
- ★ பவுச்-4.
- ★ சைனைட் வில்லைகள்-2
- ★ பிஸ்க்கட், மற்றும் சட்னி போத்தல்கள்.

லொறியின் கிளீனராக வேலை புரிந்த வவுனியாவைச் சேர்ந்த ராமசாமி குமார் (26) என்பவரும் டிரைவரான வவுனியாவைச் சேர்ந்த சந்திரபோஸ் என்பவரும் கைதுசெய்யப்பட்டதுடன் லொறியும் தற்சமயம் புத்தளம் போலீஸாரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

புத்தளம் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு.சீ.ஐ.ஜெயசூரியா தலைமையிலான போலீஸ் கோஷ்டி புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளது.


## ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 195/=,105/=
தங்க பஸ்பம் கலந்தது 990/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 890/=

**ஞான சுந்தர வைத்தியசாலை**

187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398

**Classes in Pottery and Cake Decoration with Suger Craft. Contact: 581539**

## 2 வது பிறந்தநாள் வாழ்த்து

23.09.96

காண்டீபன் தனுசியா



உந்தன் சின்னஞ்சிறு சிரிப்பில்
எங்கள் சொர்க்கம் இருக்கும்.
உன்னை அள்ளிக் கொஞ்சத்தானே
என் உயிரும் இங்கு இருக்கும்.
சுவிசில் உள்ள பேத்தியை
நீடூழி வாழ்கவென
வாழ்த்தும்

அப்பம்மா
இலக்கம் 50/3,
'லக்சுமி வாசம்'
குருமன்காடு
வவுனியா (இலங்கை)



## 3 மாதத்தில் தீர்வு

கணவன்-மனைவி பிணக்கு, பிரிந்தவர் ஒன்று சேர, காதலித்தவர் திருமணம் புரிய, தொழில் உயர்ச்சிலை மேம்படுத்த, வீழ்ச்சியுற்ற தொழிலை வீழ்ச்சி அடையா வண்ணம் இருந்த நிலைக்கு 3 மாதத்திற்குள் கொண்டுவர, எண்ணிய தொழில் கிடைக்க, திருமணமே ஆகாதென விரக்தி உற்றோருக்கு தெய்வீக வரத்தால் திருமணம் நடைபெற இன்னும் முனிவர்களால் அருளிய ஜீவிய கால காண்டம்-நாடி ஜோதிடம் எழுதிக் கொள்ள, அக்குபஞ்சர் சிகிச்சை மூலம் காது கேளாதவர், கண் தெரியாதவர், வாய்பேச முடியாதவர்கள், பாரிச வாதம், முடக்கு வாதம், இடுப்பு வலி, அஸ்மா, படபடப்பு, வீரியமின்மை, பெண்களுக்கு வெள்ளைபடுதல், மாதவிடாய் கோளாறு, மனநோய் (ஹிஸ்டீரியா) குழந்தை பேறின்மை, பாலியல் குறைபாடுகள், ஞாபக சக்தி இன்மை, நித்திரை இன்மை, பசியின்மை, தலை முடி உதிர்தல், தோல், நோய் இப்படி தீர்க்க முடியாத வியாதிகளுக்கு மனோதத்துவ ரீதியிலும், வைத்திய முறையிலும், மாந்திரிக முறைகளிலும் வெற்றி கண்டவர். எத்தனை எத்தனையோ பேர்-இதைவிட பெரிய சக்தி வந்தாரை வாழவைக்கும் மகாசக்தி ஸ்ரீ துர்கா தேவியின் அருளால் வசதி அற்றோருக்கு எம்மாத கடைசியும் கொழும்பிலும், நுவரெலியாவிலும் இலவச அற்புத ஞான தியான பூஜை நடைபெறுகிறது. தேவைகளுக்கு முன் அறிவித்தலுடன் தொடர்புகொள்ளவும். தொடர்புகளுக்கு-

P.K.SAAMI (J.D.G.A.N) & J P, மலையாள மாந்திரீக உச்சாடனப் பீடம்.
162, கொட்டாஞ்சேனை வீதி, பேபிக் ஸ்ரீட், கொழும்பு-13.
தொலைபேசி - 01,342463/64 344832 விசேட பிரிவு - 344831 EXT FRS

## UNION

யூனியன் மோட்டிஸ் கதவு பூட்டுக்கள்

Single, Double, Night Latch & Sliding Locks, (English Origin)

**றம்சன்ஸ்**

443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு - 12.
தொலைபேசி - 431511, 434411

## Brightன் தபால் மூலம் கல்வித்திட்டம்

மூன்றே மாதங்களில் ஆங்கிலம்/ சிங்களம் பேச, எழுத, வாசிக்க கற்றுத் தரப்படும் விபரங்களுக்கு கீழ்க்காணும் விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க.

பெயர்...............................

விலாசம்...............................

BRIGHT BOOK CENTRE (PVT) LTD
S-27, FIRST FLOOR, P.O.BOX 162,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX,
COLOMBO 11. TEL : 434770

## காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

**ரிஷி. S.மணி**

மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

சந்திரன்
144 2/1 காலிவீதி, வெள்ளவத்தை,
கொழும்பு-06.
T.P: 586218, 078-63611
Fax: 503030

## Bright - 1997 ஆண்டு மாணவர் களுக்கான ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைமுன்னோடிப் பயிற்சி

Brightன் தபால் மூலம் கல்வி

**புதிய வெற்றிக்கனி 1-10**

புதியதோர் அமைப்பு, புதியதோர் உத்வேகம், அறிவு, திறன், மனப்பாங்கு வளர்ச்சியூடாக புதியதோர் வழிகாட்டல் நூலாக வெளிவரவுள்ளது.

புதிய வெற்றிக்கனியை தொடர்ச்சியாக பெற விரும்புவோர் விண்ணப்பப்படிவம் பெற தொடர்பு கொள்க.

Bright Book Centre (Pvt) Ltd
S-27, First Floor, P.O. Box 162
Colombo Central Super Market Complex
Colombo -11 T.P : 434770

## மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHOTHERAPHY)

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி, உங்களை நீங்களே வெற்றி கொள்ள பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

இளம் சமுதாயத்தினர் மெலிந்து, கனவில் சக்தியிழந்த, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்களை மனோதத்துவ சிகிச்சை மூலம் உடனே நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு.

செப்டம்பர் 19 முதல் 30 வரை **Dr.P. ARUMUGAM,** AHMED TOURIST INN. BANG BANG BULDING NO: 10, RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST.,) COLOMBO 11. T.P. 436383, 436390 Fax : 436439 ஒக்டோபர் 4, 5 Dr. முகைதீன் டிஸ்பென்ஸரி, ஒட்டமாவடியிலும், ஒக்டோபர் 12, 13, 14 தினங்களில் கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் **DR.P.ARUMUGAM** No: 50, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD, BATTICALOAவிலும் சந்திக்கலாம்.




படிப்பகம்

www.padippakam.com

# நீர்மூழ்கி மர்மம்

**கொ**ழும்புத் துறைமுகப் பகுதியில் நீர்மூழ்கி நடமாட்டம். அடிக்கடி மூக்கைக் காட்டிவிட்டு மறைந்து கொண்டிருக்கிறது.

கடந்த வருடமும் இப்படியொரு செய்தி பரபரப்பாக அடிபட்டது. உடனே புலிகளின் நீர்மூழ்கிகள்தான் அவை என்று சில பத்திரிகைகளிலும் செய்தி வந்தது.

இப்போது மீண்டும் நீர்மூழ்கிச் செய்திகள் அடிபடத் தொடங்கியுள்ளன.

நீர்மூழ்கிகளோடு புலிகளையும் இணைத்து வெளியாகும் செய்திகளில் உண்மை இருக்கிறதா என்று ஆராய்வோம்.

புலிகளிடம் நீர்மூழ்கிகள் இருந்தால் கொழும்புத் துறைமுகப்பகுதியில் வந்து மூக்கை காட்டிக்கொண்டு திரியவேண்டிய அவசியம் என்ன?

'எங்களிடம் நீர்மூழ்கிகள் இருக்கின்றன. எனவே உஷாராக இருங்கள்' என்று இரகசியத்தை வெளியிடுமளவுக்கும், கடற்படையினரை உஷார்படுத்துமளவுக்கும் புலிகள் நடந்துகொள்வார்கள் என்று யாராவது நம்பலாமா?

கடற்படையினரை உஷார்படுத்தாமல் உடனே ஒரு பாரிய தாக்குதலையே புலிகள் நடத்தி முடித்திருப்பார்கள்.

கொழும்புத் துறைமுகப் பகுதியில் ஏற்கெனவே புலிகள் ஒரு தாக்குதலை நடத்தினார்கள். புலிகளிடம் சிறியரக நீர்மூழ்கிகள் இருந்திருந்தால்கூட குறிப்பிட்ட தாக்குதலின் முடிவே வேறு விதமாக அமைந்திருக்கும்.

அதுதவிர முல்லைக் கடலில் புலிகளின் ஆயுதக் கப்பல் தாக்கப்பட்டதும் தவிர்க்கப்பட்டிருக்கலாம். நீர்மூழ்கிகள் இருக்கும்போது கப்பலில் ஆயுதம் கொண்டுவந்து பல கோடி ரூபாய் பெறுமதியான ஆயுதங்களைப் புலிகள் ஏன் இழக்க வேண்டும்?

நீர்மூழ்கிகளை இரண்டு வகையாகப் பிரித்துப் பார்க்கலாம்.

ஒன்று, ஆயுதங்களையும், ஆட்களையும் தாங்கிச் செல்லும் நீர் மூழ்கிக்கப்பல்கள். இவற்றில் பல ரகங்கள் இருக்கின்றன. ஏவுகணைகளை டசின் கணக்காக அடுக்கிச் செல்லும் நவீன நீர்மூழ்கிக் கப்பல்களும் இருக்கின்றன.

எவ்வாறான ரக நீர்மூழ்கிக் கப்பலை புலிகள் வைத்திருப்பதாக இருந்தாலும் அதற்கு ஒரு பெரிய நாட்டின் உதவி நிச்சயம் தேவை.

இலங்கை அரசிடம் கூட நீழ்மூழ்கிக் கப்பல் கிடையாது. வாங்கினால் கட்டுபடியாகாது. இந்தியாவிடம் கூட நீர்மூழ்கிக் கப்பல்கள் பெருமளவில் இல்லை. அமெரிக்கா போன்ற பணக்கார நாடுகளில் தேவைக்கு அதிகமாகவே நீர்மூழ்கிக் கப்பல்கள் இருக்கின்றன.

எனவே புலிகளிடம் நீர்மூழ்கிக் கப்பல் இருப்பதாகக் கூறப்படுவது சிறுபிள்ளைத் தனமான ஒரு வதந்தி மட்டுமே.

ஆனால், புலிகளுக்கு வேறு ஏதாவது ஒருநாடு ஆயுத உதவி செய்வதானால் நீர்மூழ்கிக் கப்பல் மூலம் ஆயுதங்களை அனுப்பக்கூடும். அதற்கான வாய்ப்பு உண்டுதானே என்பது மற்றொரு சந்தேகம்.

அப்படியொரு உதவி வழங்கப்படுவதாக இருந்தால் குறிப்பிட்ட நீர்மூழ்கிக் கப்பல் எந்தளவுக்கு இரகசியமாக வந்து செல்லமுடியுமோ அந்தளவுக்கு இரகசியமாக வந்து செல்லுமே தவிர, கொழும்புக் கடலில் வந்து தேவையில்லாமல் மூக்கைக் காட்டிக்கொண்டிருக்காது.

அதுதவிர, நீர்மூழ்கிக் கப்பல் மூலம் ஆயுதங்கள் வருமளவுக்கு புலிகளுக்கு பெரிய கை ஒன்று உதவுமானால், இன்றைய போர்க்கள நிலவரமே தலைகீழாக மாறியிருக்கும்.

நீர் மூழ்கியில் இரண்டாவது வகை, சிறிய ரக நீர்மூழ்கிகள். 'அண்டர் வோட்டர் குரூசர்' என்றும் இவை அழைக்கப்படும்.

நீருக்கடியில் ஒரு சிலர் மட்டும் நீச்சல் அடித்துச் செல்ல இவை பயன்படும்.

அவ்வாறான குட்டி குட்டி நீர்மூழ்கிகளைக் கூட புலிகள் இதுவரை பயன்படுத்தவில்லை. அவ்வாறான குட்டி நீர்மூழ்கிகள் இருக்குமானால் அவற்றை மிக இரகசியமாக வைத்திருந்து நீருக்கடியில் பெரும் தாக்குதல் ஒன்றை புலிகள் நடத்தியிருப்பர். கடற்படையினருக்கு வேடிக்கை காட்டிவிட்டு, எட்டி எட்டிப் பார்த்துவிட்டுப் போகமாட்டார்கள்.

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

'அண்டர் வோட்டர் குரூசர்' புலிகளிடம் இருக்கிறது என்ற சந்தேகம் உறுதியாகி விட்டால் கடற்படையினர் என்ன செய்வார்கள்? உடனே மாற்று ஏற்பாடு தேடுவார்கள். அண்டர் வோட்டர் குரூசரை கடலுக்கடியில் வைத்துத் தாக்கக்கூடிய கருவிகள் இருக்கின்றன. அவற்றை வாங்கிக் கொள்வார்கள்.

எனவே, கடற்படையினர் மாற்று ஏற்பாடு செய்து உஷாராக புலிகள் வாய்ப்புக் கொடுப்பார்களா? கொடுக்கமாட்டார்கள். தம்மிடம் 'அண்டர் வோட்டர் குரூசர்' இருந்தால் உடனடியாக அதனைப் பாவித்துக் கடலில் பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தி முடித்திருப்பார்கள்.

அதைவிடுத்து தம்மிடம் 'அண்டர் வோட்டர் குரூசர்' இருப்பதாகக் காட்டிக் கொண்டு திரியமாட்டார்கள்.

தாம் வீழ்த்திய விமானங்களை எந்தவகை ஆயுதத்தால் சுட்டுவீழ்த்தினோம் என்பதையே புலிகள் இதுவரை கூறவில்லை. காரணம், அதற்கு மாற்றீடான விமானங்களை படையினர் வாங்கிவிடுவார்கள் என்ற எச்சரிக்கை உணர்வுதான்.

எனவே-தம்மிடம் நீருக்கடியில் பயன்படுத்தக் கூடிய சிறியரக நீர்மூழ்கிகள் இருக்குமானால் அவை தம்மிடம் இருப்பதற்கான சுவடே தெரியாமல் ஒரு பெரும் தாக்குதலை நடத்தி முடிப்பதில்தான் புலிகள் அக்கறை காட்டியிருப்பர்.

எனவே-நீர்மூழ்கிகள், சிறியரக நீர்மூழ்கிகள் போன்றவற்றை புலிகளோடு முடிச்சுப் போட்டுப் பரப்பப்படும் செய்திகளை ஒதுக்கி விடலாம்.

கடந்த வருடம் ஐரிஸ்மோனா கப்பலை கடத்திச் சென்ற புலிகள், அதனைவைத்து வலைவிரித்து இரண்டு டோராப் படகுகளை தாக்கினார்கள்.

உடனே சில பத்திரிகைகள் டோராப் படகுகளை புலிகள் சிறியரக நீர்மூழ்கிகள் மூலம் தாக்கியதாக செய்திகள், விமர்சனங்கள் வெளியிட்டன. முரசு 119ல் வெளியான எக்ஸ்ரே ரிப்போட்டில் அந்த வதந்திகளை மறுத்திருந்தோம்.

அதன் பின்னர் புலிகள் கடலில் பல வெற்றிகரமான தாக்குதல்களை நடத்தியுள்ளனர். அவற்றிலும் சிறிய ரக நீர்மூழ்கிகள் பயன்படுத்தப்படவில்லை. கொழும்புத் துறைமுகத் தாக்குதலில்கூட நீருக்கடியில் நீந்திவந்துதான் குண்டுவைக்க முயன்றனர். எனவே முரசு 119ல் நாம் வெளியிட்ட தகவல் உறுதிப்படுத்தப்பட்டது.

இப்போது சரியாக ஒருவருடம் கழிந்த பின்னர் கொழும்பு பத்திரிகைகள் சிலவற்றில் 'புலிகளின் நீர்மூழ்கிக் கப்பல்' என்ற பரபரப்பு செய்திகள் மீண்டும் வெளியாகியுள்ளன.

இச் செய்திகள் தாமாக உருவானவையல்ல. நெருப்பில்லாமல் புகையுமா? ஆனால் நெருப்பு எங்கே இருக்கிறது என்று கண்டறியாமல் சில பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டுவிட்டன.

தமது பலத்தைப் பெருக்குவதற்கு நவீன ரக ஆயுதங்களையும், மேலும் நவீன போர்ப் பட்குகளையும் பெறுவதற்கு கடற்படையினர் விரும்புவது இயல்புதான்.

அவ்வாறான விருப்பத்தை விரைவாக செயற்படுத்த நீர்மூழ்கிப் பூச்சாண்டி காட்டப்பட்டிருக்கலாம்.

அதுதவிர கடற்பகுதியில் புலிகளின் கடற்கரும்புலிகளது தாக்குதல்கள் காரணமாக கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி உள்ளன.

கடலில் ரோந்துக்கு செல்ல ஏற்படும் தயக்கங்களையும் நீர் மூழ்கிப் பூச்சாண்டியால் நியாயப்படுத்தலாம்.

எவ்வகையில் பார்த்தாலும் கொழும்பு மற்றும் இலங்கைக் கடற்பகுதியில் நீர்மூழ்கிகள் நடமாட்டம் என்ற செய்தி புலிகளுக்கு சாதகமான விடயமல்ல. இலங்கை அரசின் கடற்படையினருக்கு சாதகமான விடயம்தான்.

அதுமட்டுமல்லாமல் மீன்பிடிக்கான தடைகளையும் 'நீர் மூழ்கி' வதந்தி நியாயப் படுத்தப்பார்க்கிறது.

★ ★ ★



# எல்லைப் புறங்களில் புலிகள் பாய்ச்சல்

**நாரதர்**

**பு**லிகளின் கவனம் எல்லைப்புறப் பகுதிகளில் திரும்பியிருக்கிறது.

29.08.96 அன்று அதிகாலை ஆறுமணிக்கு பொலநறுவை மாவட்டத்தில் குடாப்பொக்கணை என்னும் இடத்தில் உள்ள பொலிஸ் நிலையம் மீது அதிரடித் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது.

15 நிமிடநேரம் மட்டுமே தாக்குதல் நடந்தது. திடீர் தாக்குதலை பொலிசார் எதிர்பார்த்திருக்கவில்லை. குறிப்பிட்ட பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்புக்காக வைத்திருந்த ஆயுதங்களைவிட புலிகள் தாக்குதலுக்கு பயன்படுத்திய ஆயுதங்கள் நவீனமானவை.

எனவே 15 நிமிடத்தில் குடாப்பொக்கணை பொலிஸ் நிலையம் புலிகளின் கையில் வீழ்ந்தது. புலிகளின் தரப்பில் லெப்டினன்ட் துசந்தன் என்பவர் மட்டுமே பலியானார். பொலிஸ் தரப்பில் 27 பேர்வரை பலியானார்கள்.

ரி.56-1 ரகத் துப்பாக்கிகள் 20, ரி.56-2ரக துப்பாக்கிகள் 06, 60 எம்.எம்.மோட்டார் 01, அதற்கான ஷெல் 12, அல்லிமெக்ஸ் எல்.எம்ஜி.01 ஆகியவை அங்கு கைப்பற்றப் பட்ட ஆயுதங்களில் குறிப்பிடத்தக்கவை.

31.08.96 அன்று மட்டக்களப்பு மாவட்ட எல்லைப்புறமான வொறவெவ என்னும் கிராமத்துக்குள் புலிகளின் கெரில்லாக்கள் புகுந்தனர்.

புலிகளின் கெரில்லாக்கள் பதுங்கி இருப்பதை அறியாமல் ரோந்து சென்ற இராணுவத்தினர் திடீர் தாக்குதலை எதிர் கொண்டனர். ஐந்து இராணுவத்தினர் பலியானார்கள். புலிகளின் தரப்பில் இழப்புக்கள் எதுவுமில்லை.

ரி.81 ரகத் துப்பாக்கி 01, ரி.56 ரகத் துப்பாக்கிகள் மூன்று ஆகியவற்றை புலிகள் எடுத்துக் கொண்டனர்.

இந்த நடவடிக்கைகளின் உச்சகட்டமாக 12.09.96 அன்று அப்பாறை மாவட்டம் அரந்தலாவ என்னும் இடத்தில் ஒரு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஆனால் இத் தாக்குதலின் இலக்கு படையினர் அல்ல, பொதுமக்கள்! சரமாரியாக நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டிலும், கிரனேற் வீச்சிலும் 11 பயணிகள் கொல்லப் பட்டுள்ளனர்.

புலிகள்தான் தாக்குதலை நடத்தியதாக அரசாங்கம் உடனடியாக குற்றம் சாட்டியது. தாக்குதலில் பலியானவர்களது புகைப்படங்களும் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன. பலியானவர்களில் சிங்கள மக்களும், முஸ்லிம் பயணிகளும் அடங்கியிருந்தனர்.

கிழக்கு மாகாணத்தில் படையினர் பாரிய தாக்குதல் ஒன்றுக்கு தயாராகிவருவதாக புலிகள் கூறியுள்ளனர்.

கிளிநொச்சி நோக்கி ஆனையிறவில் இருந்து மேற்கொள்ளப்பட்ட 'சத்யஜெய' நடவடிக்கை சத்தமில்லாமல் திரும்பி பரந்தனோடு நின்றுவிட்டது.

ஆனையிறவில் இருந்து புறப்பட்டபோது இருந்த ஆரவாரம், பரந்தனை தாண்டிய போது புலிகள் காட்டிய எதிர்ப்பால் அடங்கிப்போனது. ஆனையிறவில் இருந்து புறப்பட்ட 'சத்யஜெய' துருப்பினர் தற்போது எங்கே நிலைகொண்டுள்ளனர் என்பதைக்கூட படைத்தரப்போ, அரசாங்கமோ வெளியிடவில்லை.

அப்படி வெளியிடாமல் இருப்பதே குறிப்பிட்ட நடவடிக்கையின் பின்னடைவைத் தான் காட்டுகிறது. தொடர்ந்து முன்னேற முடிந்திருந்தால் தினசரி தொலைக்காட்சிகளில் படம் காட்டியிருப்பார்கள்.

வன்னியில் பாரிய ஒரு படைநடவடிக்கையில் ஈடுபடுவதை 'சத்யஜெய' நடவடிக்கையின் பின்னடைவு கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது.

அதேவேளை புலிகளுக்கு எதிராக தாம் தொடர்ந்து போரிடுவதையும் அரசாங்கம் வெளிப்படுத்தியாக வேண்டும். பாண்விலை, மாவிலை எல்லாவற்றையும் யுத்தத்தை சொல்லியே அதிகரித்துவிட்டு, யுத்தத்திலும் தோல்வி கண்டுகொண்டிருப்பதாகச் சொல்லப்பட்டால் அரசுக்கு அரசியல் ரீதியில் பலத்த நஷ்டம் ஏற்படும்.

எனவே-விலைவாசி உயர்வுகளால் நொந்துபோயுள்ள மக்களுக்கு ஒரு போனஸ் மாதிரி ஏதாவது ஒரு முனையில் இருந்து யுத்த வெற்றிச் செய்தியை அறிவித்தாக வேண்டும்.

யாழ்-குடாநாட்டு வெற்றிச் செய்தியை முல்லைத்தீவுச் சமர் அமுக்கிவிட்டது. அது மட்டுமல்லாமல் நாளும் பொழுதும் யாழ் நிலவரம் கலவரமாகிவருகிறது.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு விமானத்தில் செல்லும் பயணிகளோடு புலிகளும் போய்விடுவார்களோ என்று படையினர் கடும் அலசல் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் புலிகளோ யாழ்ப்பாணத்தில் படு சுதந்திரமாக நடமாடித்திரிகிறார்கள். தினம் ஒரு மோதல் என்றளவுக்கு அங்கு சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

புலிகள் யாழ் குடாநாட்டுக்குச் செல்ல வேண்டுமானால் கொழும்பில் படையினரிடம் ரிக்கெற் எடுத்துக்கொண்டு விமானம் மூலமோ, கப்பல் மூலமோ தான் செல்ல வேண்டும் என்று படைத் தரப்பு கண்டுபிடித்திருப்பதுதான் உலக அதிசயம்.

இப்படியான கேலிக்கூத்தான கண்டுபிடிப்புக்களும், புலிகளின் பாதை எங்கோ இருக்க, பொதுமக்களின் பயணப் பாதைக்கு குறுக்கே நிற்கும் நடைமுறைகளும் யாழ் குடாநாட்டு மக்களில் ஒரு பகுதியினர் மத்தியில் அரசாங்கம் தொடர்பாக ஆரம்பத்தில் இருந்த எதிர்பார்ப்பையும் பொய்யாக்கிவருகின்றன.

யாழ் குடாநாட்டை கைப்பற்றியவுடன் 'இனி எல்லாம் சுகமே, தமிழ் மக்களுக்கு உணவு கொடுத்தால் போதும். அவர்கள் நம் பக்கமே!' என்று அரசாங்கம் கண்ட கனவும் மெல்ல மெல்லப் பொய்க்கத் தொடங்கிவிட்டது.

ஆனாலும் உண்மையை ஒப்புக் கொண்டால் தெற்கில் அரசாங்கம் முகம் காட்டமுடியாது. எதிர்க்கட்சி எம்பிக் குதித்து வெளுத்துவாங்கிவிடும்.

எனவே-எங்காவது ஒரு முனையில் யுத்தத்தை முன்னெடுத்தாக வேண்டும். வன்னியில் உடனடியாக பாரிய நடவடிக்கைக்கு சாத்தியம் இல்லையென்றால், கைகட்டிக்கொண்டு இருக்க முடியுமா? தெற்கில் என்ன பதில் சொல்வது?

எனவே வேறு முனையில் பாரிய நடவடிக்கை ஒன்றுக்கு படைகளை அனுப்பவேண்டும்.

கிழக்கில்தான் படையினர் குறிவைப்பர் என்கின்றனர் புலிகள்.

அதனால்தான் கிழக்கில் எல்லைப் புறங்களில் புலிகளின் தாக்குதல் ஆரம்பித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் படையினர் முன்னேறினால் எல்லைப்புறக் கிராமங்களின் நிலை கவலைக்கிடமாகும் என்பதை முன்னெச்சரிக்கை போல தெரிவிக்கவே புலிகள் நினைக்கின்றனர்.

அந்த முன்னெச்சரிக்கைதான் கிழக்கில் எல்லைப்புறங்களில் நடைபெற்று வரும் தாக்குதல்கள்.

புலிகளைப் பொறுத்தவரை நோக்கம் தான் முக்கியம். விளைவுகள் பற்றிக் கவலைப்படுவது கிடையாது.

அரந்தலாவவில் பயணிகள் கொல்லப்பட்டது கண்டனத்துக்கு உள்ளாகலாம். ஆனால் அக் கண்டனங்களைவிட படையினரின் கைகள் கிழக்கில் மேலோங்காமல் இருப்பதுதான் புலிகளுக்கு முக்கியம்.

கிழக்கில் ஒரு மூர்க்கமான தாக்குதலுக்கு அரசாங்கம் முன்வருமானால், புலிகளிடமிருந்தும் மூர்க்கமான பதிலடி ஒன்றை எதிர்பார்த்தேயாக வேண்டும். எல்லைப்புற கிராமங்களை நோக்கியும் புலிகளின் மூர்க்கத்தனமான பார்வை திரும்பும் என்பதையும் நிராகரித்துவிட முடியாது.

# அதிரடி அய்யாத்துரை



ரெண்டு எழுத்தார்மீது தடைவிதிப்பது பற்றி விறு விறுப்பாகப் பேசப்பட்டதல்லோ. வெளிநாட்டு இராஜதந்திர வட்டாரங்களின் நாடி பிடித்துப் பார்த்ததில் நல்ல சகுனம் தெரியவில்லையாம். அமெரிக்கத்தூதர் தமிழ் கட்சிப் பிரமுகர் ஒருவரிடம் தடைபற்றிச் சொன்ன அபிப்பிராயம் என்ன தெரியுமோ, "புத்திசாலித்தனமான காரியமல்ல" என்றாராம். வெளிநாட்டு விவகாரத்திற்குப் பொறுப்பானவருக்கும் குறிப்பிட்ட விடயத்தில் உடன்பாடில்லையாம். அதுதான் கடைசியாக ஒத்திப்போட்டிருக்கினமாம்.

**கி**ழக்கின் தனித்துவக் கட்சியின் அதிகாரமுள்ள ஒருவர் ரெண்டு எழுத்தாரைப் பாராட்டியும், வேண்டுகோள் விடுத்தும் கூட்டம் ஒன்றில் உரையாற்றியவராம். தனித்துவ தலைவருக்கு அது பிடிக்கேல்லையாம். 'தற்பாதுகாப்புக்காக பேசியிருப்பார்' என்று 'கொமென்ற்' பண்ணுவதாகத் தகவல்.

**ப**ச்சைக் கட்சியுடன் பேசிப் பயனில்லை எண்டு கூட்டான கட்சித்தலைவர் அறிக்கைவிட்டவரல்லோ. அதன்பின்னர் கூட்டான கட்சியின் நீலமானவர் பச்சைக்கட்சி பிரமுகர்களுக்கு விருந்து கொடுத்தவராம். இது பத்திரிகைகளுக்கு மறைக்கப்பட்ட செய்தி. அதிகாரதரப்பையும் தட்டிக்கொடுப்பது, எதிர்காலத்தில் உதவும் எண்ட நம்பிக்கையோடு எதிர்த்தரப்பையும் தடவிக் கொடுப்பது எண்டு நீலமானவர் சுறுசுறுப்பாகத்தான் இருக்கிறார். சிவ சிவா.. இதையெல்லாம் விளங்காமல் அவசரப்பட்டு பச்சைத் தரப்பைத் தாக்கிப் பேசலாமோ?

**வ**வுனியாவில் சில கடைகளில் 30 ஆயிரம் ரூபா களையாகத் தருமாறு கேட்கிறதாம் ஒரு இயக்கம். இன்னொரு இயக்கம் அந்தளவுக்கு கடைக்காரர்களை கஸ்டப்படுத்தக்கூடாது எண்ட 'நல்லெண்ணத்தில்'(?) மாதாந்தம் ஒரு குறிப்பிட்ட தொகை தமக்குத் தந்தால்போதும் எண்டு கேட்குதாம். இயக்கங்களின் பொதுச்சேவைக்கு உதவ முடியாதவை கடைகளை மூடிப்போட்டுப்போக வேண்டியதுதான்.

**ஒ**ருங்கிணைப்புக்குழுவுக்கு கிழக்கின் தனித்துவத் தலைவரை பொறுப்பாக நியமித்த விடயத்தில் கிழக்கின் சிங்கத்தாரைவிட சிங்கத்தாரின் பாரியார்தான் பலத்த கோபம் அடைந்தாராம். தூதரக விருந்தொன்றில் சிங்கத்தாரும் பாரியாரும் கலந்துகொண்டனர். தமிழ் கட்சி பிரமுகர்கள் சிலரை அழைத்து சிங்கத்தாரின் பாரியார் சூறாவளிப் பிரசாரமே நடத்தி முடிச்சுப்போட்டாராம். 'இதை நீங்கள் விடவே கூடாது' எண்டு உறுதியாகத் தெரிவித்துக்கொண்டிருந்தாராம்.

**யா**ழிலிருந்து விமானத்தில் வெங்காயம் கொண்டுவரப்படும் எண்டு செய்தி. அதைப் பார்த்துவிட்டு ஒரு நண்பர் பெருமூச்சுவிட்டார். "என்ன பெருமூச்சு?" எண்டு கேட்டேன். "ஒன்றுமில்லை; வெங்காயமெல்லாம் விமானத்தில் பாஸ் இல்லாமல் போய்வர முடிகிறது. நாங்கள் மட்டும் தான் யாழ்ப்பாணம் போக காத்திருந்து காய வேண்டிக்கிடக்கு" எண்டு கடும் கவலையோடு சொன்னார் மனுசன். வெங்காயத்திலும் கீழானானோ செந்தமிழன்?

**ஹ**ஜ், சிவராத்திரி தினங்களுக்கு அந்தந்த மதத்தினருக்கு மட்டும் தான் விடுமுறையாம். ஆனாலும் பாருங்கோ, சிவராத்திரி விடுமுறையன்று தலைநகரில் பல அரச அலுவலகங்கள் மூடித்தான் கிடக்கும் எண்டார் ஒரு குறும்பு நண்பர். எனக்கு உடனடியாக விஷயம் விளங்கவில்லை. அவரே விளக்கினார். 'தமிழ் ஆட்கள் லீவு போட்டால், குண்டுவெடிக்கும் எண்டு தெரிந்துதான் லீவு போட்டவையோ எண்டு தலைநகர அலுவலகங்களில் ஏற்கனவே ஒரு பீதி பரவிக் கொண்டிருக்கு. காலையில் வேலைக்கு வந்தவுடன் 'தமிழ் ஆட்கள் எல்லோரும் வந்திருக்கினமோ எண்டு எண்ணிப்பார்த்துப் போட்டுதான் வேலையைத் தொடங்குகினமாம். இந்த இலட்சணத்திலை சிவராத்திரி லீவுக்கு தமிழ் ஆட்கள் வேலைக்குப் போகாட்டி, மற்றவை எப்படி நிம்மதியாக வேலை செய்யிறது? அவையும் லீவு போட்டுட்டுப் போக வேண்டியதானே!" எப்படிப் பாருங்கோ விளக்கம்.

**தே**நீர் கடைகள் சிலவற்றில் கதிரைகளில் மூட்டைப்பூச்சிக்கு நிரந்தரப் பதவி கொடுக்கப்பட்டிருக்குதாம். அதுக்கும் ஒரு காரணம் இல்லாமல் போகுமோ? தேநீர் குடிக்கும் சாட்டோடு சாட்டாக கடைக்குள் இருந்து அறுவை மாநாடு நடத்துவது சிலருக்கு ஒரு பழக்கம். 'போதும் எழுந்து போங்கோ' எண்டு சொல்லுறது நாகரிகமில்லை. வாடிக்கையாளர்களையும் இழக்க வேண்டிவரும். அதுதான் மூட்டைப் பூச்சி வளர்ப்பாம். அது கடிக்கிற கடியில் 'அறுஞர்கள்' எழுந்துதானேயாகவேண்டும்.

**இ**ந்தக்காலத்தில் உண்மை சொன்னால் பலருக்குப் பிடிப்பதில்லை. பொய் சொன்னாலும் வம்புதான். பேசாமல் நாக்கைக் கட்டிப்போடுவதுதான் உகந்தது. சமீபத்தில் படித்த பொன்மொழி.

*"நாய் தன்*
*நாக்கை ஆட்டாமல்*
*வாலை ஆட்டுவதினால்தான்*
*அதற்கு நிறைய*
*நண்பர்கள் இருக்கிறார்கள்"*



படிப்பகம்

www.padippakam.com




**அரசியல் தொடர்**

**அற்புதன் - எழுதுவது**

# பிரபாவுக்குக் கருப்புப் பூனைகள் காவல்

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

### MI-17

ஜூலை 24ம் திகதி யாழ்ப்பாணம் சுதுமலை அம்மன் கோவிலுக்கு அருகிலுள்ள வயல் வெளியில் இரண்டு இந்திய ஹெலிகொப்டர்கள் வந்திறங்கின.

இரண்டும் MI-17 ரக ஹெலிகொப்டர்கள். பிரபாவை வழியனுப்பி வைத்தார் புலிகள் இயக்க பிரதித்தலைவர் மாத்தையா.

இக்காலகட்டத்தில் கிட்டு சென்னையில் இருந்தார். சென்னையில் அடையாறில் இருந்த புலிகள் இயக்க அலுவலகத்தின் வேலைகள் கிட்டுவின் பொறுப்பில் மேற்கொள்ளப்பட்டன.

தனது காலுக்கு சிகிச்சை செய்யவே கிட்டு தமிழகம் சென்றார் என்று புலிகள் இயக்கத்தினரால் கூறப்பட்டது.

சிகிச்சைக்காக மட்டும் அவர் செல்லவில்லை. யாழ்ப்பாணத்தில் தனிக்காட்டு ராஜாவாக இருந்தவர் கிட்டு. யாழ்ப்பாணத்தில் மாத்தையாவின் ஆதிக்கம் ஏற்பட்டுவிட்ட பின்னர் அங்கு தொடர்ந்து தங்கியிருக்க கிட்டு விரும்பவில்லை.

கிட்டு தமிழ்நாட்டுக்கு சென்றதும் அங்கு அவருக்கு மரியாதை கிடைத்தது. கிட்டுவைப் பற்றி பத்திரிகைகள் வாயிலாக தமிழக மக்கள் முன்னரே அறிந்திருந்தனர்.

கிட்டு ஒரு அசாத்தியமான வீரர். இலங்கைப் படைகளுக்கு தண்ணிகாட்டி வருபவர். பயங்கரமான பேர்வழி என்றெல்லாம் தமிழக மக்களும், தமிழகத்தில் உள்ள புலிகள் இயக்க ஆதரவாளர்களான முக்கியஸ்தர்களும் தங்கள் மனதில் ஒரு தோற்றத்தை உருவாக்கி வைத்திருந்தனர்.

குள்ளமான உருவத்துடனும், சாந்தமான முகத்துடனும், மூக்குக் கண்ணாடியுடனும் கிட்டுவைக் கண்டவர்களுக்கு கொஞ்சம் ஆச்சரியமாகத்தான் இருந்தது.

'பார்ப்பதற்கு சாதாரணமாக இருக்கும் இந்த மனிதரா இலங்கைப்படைகளுக்கு சிம்ம சொப்பனமாக இருந்தார்?!' என்று வியந்தனர்.

முக்கிய பிரமுகர்களும், தமிழகப் பத்திரிகையாளர்களும் சென்னையில் உள்ள புலிகள் இயக்க அலுவலகத்தில் கிட்டுவை தினமும் சந்தித்தனர்.

தமிழக வார இதழான 'தேவி' என்னும் சஞ்சிகை கிட்டுவிடம் அவரது அனுபவங்களை எழுதுமாறு கேட்டு வாரா வாரம் தொடராக வெளியிட்டது.

கிட்டு எங்கு சென்றாலும் அங்கு பிரபலமாகிவிடுவார். தமிழ்நாட்டில் புலிகள் இயக்க வேலைகளை பேபி சுப்பிரமணியமே முன்னின்று செய்து வந்தார். ஆனாலும் கிட்டுதான் தமிழக மக்களிடம் நன்கு அறிமுகமானார்.

கிட்டுவை 'றோ' அதிகாரிகளும் தினமும் சந்தித்துக் கொண்டிருந்தனர்.

இலங்கை அரசை ஒரு தீர்வுக்கு நிர்ப்பந்திக்கும் காரியங்கள் நடைபெற்று வருகின்றன என்ற தகவலும் கிட்டுவுக்கு தெரிவிக்கப்பட்டது.

### எம்.ஜி.ஆருக்கு தகவல்

இதற்கிடையே தமிழக முதல்வர் எம்.ஜி.ஆருக்கும் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி தகவல் அனுப்பிவிட்டார்.

இலங்கை அரசோடு ஏற்படப் போகும் உடன்பாடு இலங்கைத் தமிழர்களுக்கு நன்மையானது. திருப்திகரமானது என்பதை எம்.ஜி.ஆருக்கு முதலில் புரிய வைக்க வேண்டும் என்று நினைத்தார் ராஜீவ்.

எம்.ஜி.ஆருக்கு புரியவைத்து அவரும் அதனை ஏற்றுக்கொண்டால்தான் தமிழக மக்களிடம் தப்பான அபிப்பிராயங்கள் ஏற்படாமல் தடுக்க முடியும்.

புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனிடம் எம்.ஜி.ஆருக்கு நெருக்கம் இருப்பதும் ராஜீவுக்கும் தெரியும். அதனை பயன்படுத்தி எம்.ஜி.ஆர். மூலம் பிரபாகரனை இந்தியாவின் முயற்சிக்கு உடன்படவைக்கலாம் என்பதும் ராஜீவ்காந்தியின் திட்டம்.

அதனால் எம்.ஜி.ஆரையும் புதுடில்லிக்கு அழைப்பித்தார் ராஜிவ்காந்தி. பண்ருட்டி ராமச்சந்திரன்தான் அப்போது தமிழ் நாட்டில் மின்சார அமைச்சர்.

எம்.ஜி.ஆரின் மொழிபெயர்ப்பாளரும் அவர்தான். இலங்கை விவகாரத்திலும் பண்ருட்டியாருக்கு பரிச்சயம் இருந்தது. பண்ருட்டி ராமச்சந்திரனுடன் எம்.ஜி.ஆர். டில்லிக்குச் சென்றார்.

யாழ்ப்பாணத்தில், இருந்து பிரபாகரனை இந்தியாவுக்கு அழைக்கும்போது, 'விடுதலைப் புலிகள் மட்டும் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதை இந்தியா ஏற்றுக் கொள்ள வேண்டும்' என்று பிரபாகரன் கூறியிருந்தார் அல்லவா.

அதற்கு உடன்படுவதுபோலவே இந்தியத் தரப்பு நடந்துகொண்டு பிரபாகரனை இந்தியாவுக்குக் கூட்டிச் சென்றது.

ஆனால் இந்தியாவில் நடந்ததோ வேறு கதை. தமிழ்நாட்டில் இருந்த ஏனைய இயக்கத் தலைவர்களையும் தமது தீர்வு முயற்சியில் இணைத்துக்கொள்ள நினைத்தது இந்திய அரசு.

தமிழ் இயக்கங்களிடையே நிலவிய முரண்பாடுகளைப் பயன்படுத்தி தமது முடிவுக்கு அந்த இயக்கங்களை உடன்பட வைக்கலாம் என்று திட்டமிட்டது 'றோ'.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் முன்னர் இந்திய அரசும், அதன் உளவுப் பிரிவுகளும், குறிப்பாக றோவும் கையாண்ட அணுகுமுறைகள் ஒரு சுவாரசியமான நாடகம் போலவே இருந்தது.



ஜே.என்.தீக்ஷித்

சாம, பேத, தான, தண்டம் என்று சகல வழிமுறைகளையும் இந்தியத்தரப்பு பயன்படுத்தியது.

அந்த நேரத்தில் இலங்கைத் தமிழ் அமைப்புக்களுக்குள் காணப்பட்ட முரண்பாடுகளை முதலில் சொல்லவேண்டும். அப்போதுதான் அதனை இந்தியத் தரப்பு எப்படி பயன்படுத்தியது என்பது தெரியும்.



## இந்தியா பயன்படுத்திய முரண்பாடுகள்

### முரண்பாடுகள்

முதலாவது முரண்பாடு புலிகள் இயக்கத்தினருக்கும் ஏனைய தமிழ் அமைப்புக்களுக்கும் இடையில் உள்ள முரண்பாடு.

இரண்டாவது முரண்பாடு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் போராளி அமைப்புக்களுக்கும் இடையே நிலவிய முரண்பாடு.

மூன்றாவது முரண்பாடு, புலிகள் இயக்கத்துடன் இணைந்து நின்ற ஈரோஸ் இயக்கத்துக்கும் ஏனைய இயக்கங்களுக்கும் இடையிலானது.

நான்காவதாக ஈ.பி.ஆர்.எல்.எஃப், புளொட் ஆகிய அமைப்புக்களுக்கு எதிரான போக்குடைய ஈ.என்.டி.எல்.எஃப் இயக்கத்துக்குக்கும், குறிப்பிட்ட இரண்டு இயக்கங்களுக்கும் இடையிலான முரண்பாடு.

ஈ.என்.டி.எல்.எஃப் இயக்கத்தில் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான அணியினர் தாம் சொல்வதை கேட்கமாட்டார்கள் என்று 'றோ' தீர்மானித்தது.

எனவே ஈ.என்.டி.எல்.எஃப். அமைப்புக்குள் 'றோ' ஒரு முரண்பாட்டை தோற்றுவித்தது.

பரந்தன் ராஜனை மட்டுமே டக்ளஸ் தேவானந்தா அணியினருக்கு தெரியாமல் தனியாக அழைத்துப் பேசியது 'றோ'. தமது முடிவுக்கு உடன்பட்டால் பரந்தன் ராஜனுக்கு நல்லதொரு எதிர்காலம் இருப்பதாகவும் ஆசை காட்டியது 'றோ'. வலையில் விழுந்தார் பரந்தன் ராஜன்.

தமது முடிவை மறுபேச்சில்லாமல் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு இயக்கம் 'றோ'வுக்கு தேவைப்பட்டது. அப்படியான ஒரு இயக்கம் இருந்தால்தான் புலிகள் தவிர்ந்த ஏனைய இயக்கங்களை வழிக்கு கொண்டுவரலாம் என்பது 'றோ'வின் தந்திரம்.

பரந்தன் ராஜன் அணியினருக்கு அதிக வாய்ப்புக்கள் கிடைத்துவிடுமோ என்று புளொட் நினைக்கும். எனவே இந்திய அரசின் முடிவுக்கு உடன்பட புளொட்டும் முன்வரும். புளொட் முன்வந்தால் ஏனைய இயக்கங்கள் தாம் தனிமைப் பட்டு விடுவோமோ, இந்திய நட்பை இழந்து விடுவோமோ என்று நினைத்து தாமும் உடன்பாடு தெரிவிக்க வேண்டி இருக்கும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரை இந்தியாவின் முடிவுக்கு மறுபேச்சு பேசாது. ஆனால் ஆயுதமேந்திய இயக்கங்கள் அதனை மிரட்டிவிடலாம். ஆனாலும் மீண்டும் தனக்கு ஒரு அரசியல் வாய்ப்புக் கிடைக்கும் என்றால் கூட்டணி இயக்கங்களை எதிர்த்து நிற்கத் துணியலாம்.

தமிழர் விடுதலைக் கூட்டணியை தனியாக விட்டால் இந்தியாவின் உதவியுடன் கூட்டணி மீண்டும் வளர்ந்துவிடுமோ என்ற நினைப்பில் ஏனைய இயக்கங்களும் இந்தியாவின் முடிவுக்கு ஒத்துழைக்க முன்வரலாம்.

இதெல்லாம் தமிழ் அமைப்புக்களின் பலம், பலவீனங்களை நன்கு தெரிந்து வைத்திருந்த 'றோ' உளவுப்பிரிவு போட்ட கணக்குகள்.

கணக்குப்போடப்பட்டுவிட்டதல்லவா. அடுத்த கட்டம் காய் நகர்த்தல்தானே.

### சந்திப்பில் தந்திரம்

இந்திய வெளிவிவகார செயலாளர் கே.பி.எஸ்.மேனனும், இலங்கைக்கான இந்தியத் தூதர் திக்ஷித்தும் சென்னை சென்றனர்.

தமிழக அரசின் விருந்தினர் விடுதியில் ஜூலை 26ம் திகதி ஒரு சந்திப்பு நடைபெற்றது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ, புளொட், ஈ.என்,டி.எல்.எஃப், ஈரோஸ் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களை சந்தித்தார் மேனன். திக்ஷித்தும் கலந்து கொண்டார். புலிகள் இயக்கத்தினர் அழைக்கப்பட்டிருக்கவில்லை.

தாம் எதற்காக அழைக்கப்பட்டிருக்கிறோம் என்று தலைவர்கள் எவருக்குமே தெரிந்திருக்கவில்லை. மேனன் என்ன சொல்லப்போகிறார் என்று அறிவதில் ஆர்வமாக அமர்ந்திருந்தனர்.

மேனன் அழகான ஆங்கிலத்தில் அவர்களுக்குச் சொன்னார்; "வடக்கு-கிழக்கு இணைந்த ஒரு தீர்வு வரப்போகிறது. விரைவில் இலங்கையுடன் அத்தகைய தீர்வை உள்ளடக்கிய ஒப்பந்தத்தில் நாம் கையொப்பமிடக்கூடும்.

வடக்கு-கிழக்கு இணைப்புடன் கூடிய தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு பொருத்தமான ஒரு தீர்வைத்தான் இந்தியா பெற்றுத்தரும்" என்றார் மேனன்.

அங்கு அழகான பொய் ஒன்றையும் மேனன் சொல்லத் தவறவில்லை. அது இதுதான்.

"புலிகள் இயக்கத்தினரும் இத்தகைய தீர்வுக்கு உடன்பாடு தெரிவித்துவிட்டனர்" என்றார் மேனன்.

புலிகள் இயக்கத்தினருக்கும் ஏனைய இயக்கங்களுக்கும் இடையே உள்ள கடும்பகையை மேனன் அறிவார்.

புலிகள் உடன்பட்டுவிட்டார்கள் என்றால் புலிகளைவிட இந்தியாவிடம் நல்ல பெயர் எடுக்கும் அவசரத்தில் ஏனைய இயக்கங்கள் விழுந்தடித்துக்கொண்டு ஓடிவருவார்கள் என்று நினைத்தார் மேனன்.

ஜூலை 26 மாலையில் ஏனைய இயக்கத் தலைவர்கள் புறப்பட்டு புதுடில்லி வருமாறு கூறப்பட்டது.

அப்போது தமிழ்நாட்டில் 'றோ' உளவுப்பிரிவுக்கு பொறுப்பாக இருந்தவர் மாலுகா. கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர்.

அவர் இயக்கங்களை தனித்தனியாக சந்தித்துப் பேசினார்.

"இலங்கை அரசோடு பேச்சு நடத்தப் போகிறோம். அந்த சந்தர்ப்பத்தில் நீங்களும் இருக்கவேண்டும். எனவே புதுடில்லிக்குப் புறப்படுங்கள்" என்றார்.

ஈ.என்.டி.எல்.எஃப். அமைப்பில் பரந்தன் ராஜன் மட்டுமே கனகராஜா என்பவரை மொழி பெயர்ப்பாளராக அழைத்துக் கொண்டு புதுடில்லிக்கு உடனே சென்றார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்., புளொட், ரெலோ போன்ற அமைப்புக்களின் தலைவர்கள் தாம் நேரில் செல்லாமல் தமது பிரதிநிதிகளையே புதுடில்லிக்கு அனுப்பிவைத்தனர்.

தாம் நேரில் கலந்துகொண்டால் உடனே முடிவுகள் சொல்ல வேண்டி இருக்கும். பிரதிநிதிகள் கலந்துகொண்டால் தலைவர்களிடம் கேட்டுத்தான் சொல்ல வேண்டும் என்று, சாட்டுச் சொல்லித் தப்பிக்கலாம் என்பதுதான் காரணம்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். சார்பாக கேதீஸ்வரன், வரதராஜப்பெருமாள், புளொட் சார்பாக த.சித்தார்த்தன், இரா வாசுதேவா, ரெலோ சார்பாக ஸ்ரீ காந்தா, ஈரோஸ் சார்பாக பாலகுமார், சங்கர் ராஜி, தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாக அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், சம்பந்தன், ஈ.என்.டி.எல்.எஃப். சார்பாக பரந்தன்ராஜன், கனகராஜா ஆகியோர் புதுடில்லி சென்றனர்.

விமான ரிக்கெற், ஹோட்டல் செலவுகள் யாவும் இந்திய அரசின் பொறுப்பு.

புதுடில்லியில் பிரதமர் ராஜீவ் காந்தியின் இல்லத்துக்கு அருகில் இருந்த சாம்ராட் ஹோட்டலில் அவர்கள் அனைவரும் தங்கவைக்கப்பட்டனர்.

புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் மட்டும் அங்கு இருக்கவில்லை.

### திக்ஷித் சந்திப்பு

புதுடில்லியில் உள்ள 'அசோக்' ஹோட்டலில் தனியான அறை ஒன்றில் பிரபாகரன் உட்பட புலிகள் இயக்க தூதுக் குழுவினர் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

குறிப்பிட்ட அறையில் சகல வசதிகளும் இருந்தது. அறையின் முன்பாக கறுப்புப் பூனைகள் படையினர் காவலுக்கு நிறுத்தப் பட்டனர்.

பிரபாகரனோ வேறு எவருமோ அறையை விட்டு வெளியே செல்ல முடியாது. அவர்களது பாதுகாப்புக்காக அத்தகைய ஏற்பாடு செய்யப்பட்டதாக காரணம் கூறப்பட்டது.

ஆனால் உண்மையில் கிட்டதட்ட தாம் காவலில் வைக்கப்பட்டுள்ளோம் என்பதை பிரபாகரன் தெரிந்து கொண்டார்.

அசோக் ஹோட்டலுக்குச் சென்று பிரபாகரனைச் சந்தித்தார் திக்ஷித்.

"இலங்கை அரசுடன் இந்தியா ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளப்போகிறது." என்ற தகவலை அப்போதுதான் முதல் தடவையாக பிரபாகரனிடம் தெரிவித்தார்.

'இந்தியா தன்னைத் திட்டமிட்டு ஏமாற்றி விட்டது' என்ற வெறுப்பும், கோபமும் பிரபாகரன் மனதில் தோன்றுவதற்கான 'விதை' போடப்பட்டதும் அப்போதுதான்.

இலங்கை, இந்திய அரசுகளுக்கிடையே செய்யப்படவுள்ள ஒப்பந்த நகலையும் பிரபாகரனிடம் கொடுத்தார் திக்ஷித்.

தம்முடன் கலந்துபேசாமல், கருத்தும் கேட்காமல் இதுதான் ஒப்பந்தம், இதனை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று இந்தியா கையாண்ட அணுகுமுறை பிரபாகரனுக்கு பெரும் கோபத்தை ஏற்படுத்தியது.

'எமது மக்கள் சார்பாக, எம்முடன் கலந்து பேசாமல் நீங்கள் மட்டுமே ஒரு முடிவுக்கு எப்படி வரமுடியும்?' என்று கேட்டார் பிரபாகரன்.

திக்ஷித் அதிகாரத்தோரணையில் உறுதியான குரலில், 'இதுதான் இந்திய அரசின் முடிவு. நீங்கள் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.' என்பதுபோலப் பதிலளித்தார்.

திக்ஷித் அன்று நடந்துகொண்ட முறை பிரபாகரனுக்கு மறக்கமுடியாத அனுபவம். அதனை மனதில் வைத்திருந்துதான் பிரபாகரன் பின்னர் திக்ஷித்துக்கு யாழ்ப்பாணத்தில் பாடம் புகட்டினார். அது பற்றிப் பின்னர் குறிப்பிடுகிறேன்.

### தற்காலிக இணைப்பு

ஒப்பந்த நகலில் வடக்கு-கிழக்கு இணைப்பு தற்காலிகம் என்றே குறிப்பிடப்பட்டிருந்தது.

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைத்திருப்பது தற்காலிக ஏற்பாடாகவே இருக்கும். 1988 டிசம்பர் 31ல் அல்லது அதற்கு முன்பாக கிழக்கு மாகாண மக்கள் மத்தியில் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடத்தப்படும்.

வடக்கு மாகாணத்துடன் இணைந்திருப்பதா அல்லது கிழக்கு மாகாணம் தனியான நிர்வாக அலகாகி, தனிமாகாண சபையாகி தனியான ஒரு கவர்னர், தனியான முதலமைச்சர், மற்றும் ஒரு மந்திரிசபையினை ஏற்படுத்துவதா என்பதை கிழக்கு மாகாண மக்கள் தீர்மானிப்பர்.

அதேவேளை ஒப்பந்தத்தில் இன்னொரு விடயமும் குறிப்பிடப்பட்டிருந்தது.

கிழக்கு மாகாணத்தில் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பைத் தள்ளிவைக்க ஜனாதிபதி விரும்பினால் அவ்வாறு செய்யலாம்.

"வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகம். அதில் எந்த விட்டுக் கொடுப்புக்கும் தயாராக இல்லை" என்று புலிகள் இயக்கத்தினர் தெரிவித்தனர்.

அதற்கும் இந்தியத் தூதரிடம் பதில் தயாராக இருந்தது.

"வடக்கு-கிழக்கு எப்போதும் இணைந்துதான் இருக்கும். சிங்கள மக்களை திருப்திப்படுத்துவதற்காகவே தற்காலிக இணைப்பு என்று குறிப்பிடப் பட்டுள்ளது. கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை நடத்தப் போவதில்லை. வடக்கு-கிழக்கு தொடர்ந்து ஒரே நிர்வாக அலகாக இருக்கும் என்று ஜே.ஆர். ஜெயவர்த்தனே உறுதியளித்துள்ளார். ராஜிவ் காந்தி அந்த உத்தரவாதத்தைப் பெற்றுள்ளார்.

இந்தியாவை நம்பி நீங்கள் இதனை ஏற்றுக் கொள்ளலாம். ஜே.ஆர். தனது வாக்குறுதியை மீறி நடந்தால் இந்தியா அவரைக் கவனித்துக் கொள்ளும்" என்று திக்ஷித் சொன்னார்.

பிரபாகரன் அசைந்து கொடுக்கவில்லை.

"நீங்கள் சொல்லும் விடயத்தை எழுத்தில் தரமுடியுமா?" என்று கேட்டார் பிரபா.

திக்ஷித் அதற்கு உடன்படவில்லை.

"பிரதமர் ராஜீவ் காந்தியை தனியாகச் சந்திக்க வேண்டும்" என்று சொன்னார் பிரபாகரன்.

திக்ஷித்துக்கும் பிரபாகரனுக்கும் இடையில் காரசாரமான வாக்குவாதம் நடைபெற்றது.

ஒரு கட்டத்தில் திக்ஷித் பிரபாகரனைப் பார்த்து: **"நான்கு தடவை நீர் எம்மை ஏமாற்றிவிட்டீர்!" என்றார்.**

**அதற்கு பிரபாகரன் சொன்ன பதில் இது:**

**"நான்கு தடவை நான் என் மக்களின் நலனைக் காப்பாற்றி விட்டேன்"**

இதே நேரம் இந்திய வெளியுறவு அமைச்சில் ஒரு கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

## அலசுவது- இராஜதந்திரி

# நிரந்தரத் தீர்வை இழுத்தடிக்கும் இடைக்கால ஏற்பாடுகள்!

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு.

ஜனாதிபதியினால் அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள இக்குழு, வடக்கு-கிழக்குச் சர்ச்சையை மேலும் குழப்பிவிடுவதாகவே இருக்கின்றது.


காரசாரமான அரசியல் பிரச்சினைக்குள்ளாகி, ஒரு நிரந்தரத்தீர்வை வேண்டியதாகவே வடக்கு-கிழக்குப் பிரதேசங்கள் இருக்கின்றன.

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் இணைப்பு நிரந்தரமானதாக இருக்கவேண்டும். இந்த இணைப்பின் அடிப்படையில் சமஷ்டி முறையைக் கொண்ட ஓர் அதிகாரப்பகிர்வு வடக்கு-கிழக்கில் இருக்கவேண்டுமென்பதே தமிழ் அரசியல் கட்சிகளின் நிலைப்பாடாக இருக்கின்றது.

இருந்தபோதிலும் வடக்கு-கிழக்கில் பலம்மிக்க ஆயுதப்போராட்ட அமைப்பாக இருந்துவரும் தமிழீழ விடுதலைப்புலிகள் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் ஒரு தனிநாட்டுக்குரிய அம்சங்களுடன், பிரிந்துசெல்ல வேண்டுமென்ற நிலைப்பாட்டுடன் இருக்கின்றனர்.

இந்நிலையில் தமிழ் அரசியல் கட்சிகளின் சமஷ்டி முறையை அடிப்படையாகக் கொண்ட நிர்வாக அமைப்புபற்றிய கோரிக்கை தொடர்பாகவும் எதுவித முடிவுகளையும் எட்டவில்லை. எல்.ரி.ரி.ஈ.யினருடைய அரசியல் நிலைப்பாடு பற்றியும் பேச்சுக்கள் நடத்தப்படவில்லை. இந்நிலையில் குட்டையைக் குழப்பிவிடும் பாங்கிலேயே வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவை ஆட்சியாளர்கள் அமைத்துள்ளனர்.


டக்ளஸ் தேவானந்தா


சித்தார்த்தன்

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் நியமனம் ஜனாதிபதியின் ஒரு தனிப்பட்ட முடிவாகவே இருக்கின்றது. இதுபற்றி வடக்கு-கிழக்கைச் சேர்ந்த தமிழ் அரசியல் கட்சிகளுடன் எவ்வித கலந்தாலோசனைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

தமது நிறைவேற்று அதிகாரத்தின் அடிப்படையில் ஜனாதிபதி வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக்குழுவை நியமித்துள்ளார். அக்குழுவின் தலைவராக அமைச்சர் அஷ்ரப்பையும், இணைத் தலைவராக வடக்கு-கிழக்கு ஆளுநர் காமினி பொன்சேகாவையும் ஜனாதிபதி நியமித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவை நியமித்துள்ளது பற்றி தெரிவித்துள்ள காரணத்தில், ஒரு நிரந்தரத்தீர்வை எட்டும்வரை வடக்கு-கிழக்குப் பகுதியில் வாழுகின்ற மக்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்திலேயே இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிரந்தரத்தீர்வு என்பது வெறுமனே ஒரு மாயை என்பது தற்போது முன்பைவிட மேலும் உறுதியாகியுள்ளது.

தீர்வு முயற்சிகள் எவ்விதத்திலும் காத்திரமாக்கப்படவில்லை. இந்நிலையில் நிரந்தரத்தீர்வு என்பது எக்காலத்தில் சாத்தியமாகும் என்பது எவருக்குமே புரியாததாக இருக்கின்றது.

ஒரு ஆரோக்கியமான- இறுதியும் முடிவுமான தீர்வுக்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் ஆட்சியாளர்கள் தயக்கம் காட்டுகின்றனர். ஆனால் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கி விடுவதாகவே ஒருங்கிணைப்புக் குழு போன்றவற்றின் நியமனம் விளங்குகின்றது.

'பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காக மாறிய கதை' என்று சொல்லப்படுவதுண்டு.

வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கான தீர்வை எட்டுவது என்ற நோக்கில் இருந்து விலகி, அரசியல் தீர்வில் ஆர்வங்காட்டும் தமிழ் கட்சிகளை எள்ளி நகையாடுவதாக வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு விளங்குகின்றது.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி), ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்), தமிழர் விடுதலைக் கூட்டணி, ஆகியன உட்பட ஏனைய தமிழ் அரசியல் கட்சிகள் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஒரு தீர்வை முன்வைக்கவேண்டுமென்பதில் தீவிரமாக இருக்கின்றன.

வடக்கு-கிழக்குப் பிரச்சினை குறித்த பல்வேறு விடயங்களும் தமிழ் கட்சிகளுடன் கலந்தாலோசிக்கப்பட்டே வருகின்றன.

ஆனால் வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு விடயத்தில் மட்டும் தமிழ் கட்சிகள் அணுகப் படவுமில்லை; அவற்றின் கருத்துக்கள் அறியப்படவுமில்லை.

மாறாக வடக்கு-கிழக்கில இயங்கும் மற்றொரு அரசியல் கட்சியான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கே வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவைத் தலைமை தாங்கும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. ஸ்ரீ.ல.மு.கா.வின் தலைவரான அமைச்சர் அஷ்ரப் அந்த ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவராகவும் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைச்சரவைப் பொறுப்புகளுடன் சந்திரிகா அரசில் இடம்பெறலாம், ஆனால் அக்கட்சியும் வடக்கு-கிழக்குப் பிரச்சினையுடன் சம்பந்தப்பட்டதாகும்.


அஷ்ரப்

ஒரு சமூகத்தையும், அச்சமூகத்தின் தனித்துவத்தைப் பேண வேண்டுமென்ற அடிப்படையிலுமே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி குரல் கொடுத்து வருகின்றது.

ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளுடன் சேர்ந்திராது தனது சொந்தப் பாணியில் ஸ்ரீல.மு.கா வடக்கு-கிழக்கில் முஸ்லிம் சமூகத்தவரது பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமென்பதில் ஆர்வங்காட்டுகின்றது.

எனவே முஸ்லிம்களையும், முஸ்லிம் சமூகத்தவர்களது தனித்துவங்களையும் மட்டுமே பேசிவரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை வடக்கு-கிழக்கின் பெரும்பான்மையான தமிழ் மக்களின் விடயங்களில் தலைமை தாங்க அனுமதிப்பது ஒரு நியாயமான நடவடிக்கையாக இருக்க முடியாது.


சிவசிதம்பரம்

இதன் மூலம் தமிழ்-முஸ்லிம் சமூகத்தவரிடையே சந்தேகங்களையும், அவநம்பிக்கைகளையும் ஏற்படுத்தும் நடவடிக்கைகளுக்கே ஆட்சியாளர்கள் தூபமிடுபவர்களாக இருக்கின்றனர்.

ஆங்கிலேயர்கள் கையாண்டதே பிரித்தாளும் தந்திரம். இத்தந்திரத்தைப் பிரயோகித்தன்மூலம், இனம், மதம், பிரதேசம் என்று பிளவுகளை ஏற்படுத்தி, அப்பிளவுகள் மூலமான பிணக்குகளைக் கையாண்டவாறு தமது ஆட்சியை ஆங்கிலேயர்கள் மேற்கொண்டனர்.

அப்பாணியிலேயே வடக்கு-கிழக்குப் பிரச்சினையும் இலங்கையின் ஆட்சியாளர்களில் அணுகப்படுகின்றது.

அன்றைய தமிழரசுக் கட்சியில் ஓர் உறுப்பினராக இருந்தவரே இன்றைய ஸ்ரீ.ல.மு.கா தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப்.

வடக்கு-கிழக்கில் முஸ்லிம்கள் ஒரு தனித்துவம் மிக்க சமூகத்தவர்களாக இருப்பது உண்மையே. அவர்களுக்கும், தமிழர்களுக்குமிடையிலான அரசியல் பிரச்சினைகள் பொதுவானவையாகவே இருந்து வருகின்றன. தமிழைப் பேசுபவர்கள் என்ற ரீதியில் இரு சமூகத்தவர்களும் வடக்கு-கிழக்கில் ஓர் அரசியல் தீர்வுக்காகப் போராட வேண்டியவர்களாகவுள்ளனர்.

கடந்த கால ஆட்சியாளர்கள் கையாண்ட நயவஞ்சகத்தனமான நடவடிக்கையினாலேயே இன்று வடக்கு-கிழக்கில் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் தம்மிடையே வேறுபாடுகளைக் கொண்டுள்ளன.

இந்த இரு சமூகங்களையும் பிரிப்பதன் மூலம் வடக்கு-கிழக்கின் அரசியல் காத்திரத்தன்மையைச் சிதைத்துவிடுவதே பேரினவாதிகளின் தந்திரமாக இருந்தது.

துரதிர்ஷ்டவசமாக தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகளும் இத்தந்திரத்துக்கு இரையாகி அரசியலில் குளறுபடியான நிலைக்கு முகங்கொடுத்துள்ளனர்.

தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையே அவநம்பிக்கைகள், சந்தேகங்களை மேலும் உண்டு பண்ணுவதாகவே வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக்குழுவின் நியமனம் விளங்குகின்றது.

அரசியல் தீர்வொன்று காணப்படும் வரை வடக்கு-கிழக்கு மக்களின் அன்றாடத் தேவைகள், மற்றும் அவர்களது நிர்வாக ரீதியான பிரச்சினைகள் புறக்கணிக்கப்படலாகாது என்பதனாலேயே வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு அமைக்கப்பட்டதாக ஆட்சியாளர்கள் கூறுகின்றனர்.

இக்கூற்றை அவதானிக்கும்போது 'ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுத' கதையே ஞாபகத்துக்கு வருகிறது.

வடக்கு-கிழக்கு மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பதாலேயே வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு நியமிக்கப்பட்டதாக ஆட்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் வடக்கு-கிழக்கு மக்கள் இன்று பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் மட்டும் கஷ்டப்படவில்லை. கடந்த 17 வருடகால யுத்தத்தினால் தொடர்ச்சியாகச் சொல்லொணாக் கஷ்டங்களுக்கு அவர்கள் முகங்கொடுத்துள்ளார்கள்.

அவர்கள் படுகின்ற கஷ்டங்கள், துன்பங்களுக்கு ஒரு நிரந்தரத்தீர்வே தேவை. எந்தவொரு இடைக்காலத்தீர்வோ, தற்காலிகத்தீர்வோ அம்மக்களை அவர்களது கஷ்டங்களிலிருந்து மீட்டுவிடமாட்டா.

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு அரசியல் சார்பற்றதென ஆட்சியாளர்கள் தெரிவிக்கலாம். ஆனால் ஏற்கனவே வடக்கு-கிழக்கில் நிர்வாக இயந்திரத்தை உடைத்தெறியப் போவதாக எல்.ரி.ரி.ஈ.யினர் சூளுரைத்துள்ளனர்.

இந்நிலையில் வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு மூலமாக அரசு எதிர்பார்ப்பவற்றை நிறைவேற்ற முடியுமா? என்பது சந்தேகமே.

எது எப்படியிருந்தபோதிலும் ஒன்றைமட்டும் ஆட்சியாளர்கள் உணர்ந்துள்ளதை வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு என்ற விடயம் தெளிவாக்கியுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் ஒருங்கிணைந்தவையாக- ஒரே பிரதேசமாகவே இருக்க முடியும் என்பதை ஆட்சியாளர்கள் உணரத்தலைப்பட்டுள்ளதையே இந்த ஒருங்கிணைப்புக்குழு மூலம் அவதானிக்க முடிகின்றது.

---

# தூதரக விருந்தில் துருவப்பட்ட ஒருங்கிணைப்புக் குழு!

கடந்த 11.09.96 அன்று அமெரிக்கத் தூதர் இரவு விருந்தொன்றை ஏற்பாடு செய்திருந்தார்.

ஈ.பி.டி.பி, புளொட், கூட்டணி ஆகிய கட்சிகளின் தலைவர்களும், ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். அன்றைய விருந்தில் பேசப்பட்ட 'ஹைலைட்'டான விஷயமே வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்கான ஒருங்கிணைப்புக் குழு விவகாரம்தான்.

விருந்து நடைபெற்ற தினத்தன்றுதான் ஒருங்கிணைப்புக் குழு தொடர்பான அறிவிப்பை புனர்வாழ்வ அமைச்சு வெளியிட்டிருந்தது.

அமைச்சர் அஷ்ரப் தலைமையில், வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகாவை செயலாளராகக் கொண்ட ஒருங்கிணைப்புக்குழு பற்றிய அறிவித்தல் தமிழ்க் கட்சி வட்டாரங்களில் பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

அந்த அதிர்ச்சியோடு அமெரிக்கத் தூதரின் விருந்தில் கலந்துகொண்டவர்களிடம் நிலமைகள் தொடர்பாக அக்கறையோடு கேட்டறிந்தாராம் அமெரிக்கத் தூதர்.

அப்போதுதான் ஒருங்கிணைப்புக் குழு விவகாரம் தொடர்பாகவும் அக்குவேறு ஆணிவேறாக அலசப்பட்டிருக்கிறது.

திரு.நீலன் திருச்செல்வம் அமெரிக்கத் தூதரின் காதோடு காதாக சில விபரங்களை நாசூக்காக தள்ளிவிட்டிருக்கிறார். அத்தோடு அமைச்சர் அஷ்ரப்பை தலைவராக நியமித்தது தவறு என்றும் உறுதியாக- சற்று உரக்கவே கூறிவிட்டாராம் நீலன்.

டக்ளஸ் தேவானந்தா, சித்தார்த்தன் இருவரும் ஒருங்கிணைப்புக் குழு 'கிணறு வெட்டப் பூதம் வந்த கதை' என்று தூதரிடம் சொன்னார்களாம். விருந்தில் கலந்து கொண்ட அரச எம்.பிக்களிடமும் இருவரும் தமது அதிருப்தியை தெரிவித்தார்களாம்.

இனவிவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளேயும் விருந்தில் கலந்து கொண்டவர்களில் ஒருவர்.

பெயருக்குத்தான் அவர் இன விவகார அமைச்சர். ஒருங்கிணைப்புக் குழு விவகாரம் அவரோடும் ஆலோசிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. தமிழ்க் கட்சித் தலைவர்கள் விஷயத்தைக் கூறியபோது தலையைச் சொறிந்தாராம் அமைச்சர்.

இப்படியெல்லாம் ஒருங்கிணைப்பு குழு விவகாரம் அலசப்பட்டுக்கொண்டிருந்த போது, டக்ளஸ் தேவானந்தா, சித்தார்த்தன் நீலன் ஆகியோரை தொடர்பு கொள்ள ☏போனில் தேடியிருக்கிறார் அமைச்சர் அஷ்ரப்.

மூவரும் அமெரிக்கத் தூதரின் விருந்தில் கலந்துகொண்டிருக்கிறார்கள் என்ற தகவல் அவருக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

எனவே விருந்து நடைபெற்ற இடத்துக்கே ☏போன்செய்து, நீலன், சித்தார்த்தன், டக்ளஸ் தேவானந்தா ஆகியோருடன் பேசியிருக்கிறார் அஷ்ரப்.

ஒருங்கிணைப்புக் குழுவுக்கு தன்னை தலைவராக நியமித்த விடயத்தைக் கூறியதுடன், மூவரதும் ஆதரவைக் கோரினாராம் அமைச்சர். மூவருமே பிடிகொடாமல் பேசி விட்டுப் ☏போனை வைத்துவிட்டனர்.

இதற்கிடையே ஒருங்கிணைப்புக் குழு தொடர்பாக கேட்டறிந்த அமெரிக்கத் தூதர், "உங்கள் ஆலோசனைகள் கேட்கப்பட்டதா?" என்று வினவினாராம். "இல்லை" என்று தமிழ் கட்சித் தலைவர்கள் கூறியபோது தூதர் ஆச்சரியப்பட்டாராம். "தவறான நடைமுறை தான்" என்றும் தூதர் அப்பிப்பிராயம் தெரிவித்தாராம்.

இதெல்லாம் ஒரு புறம் நடந்து கொண்டிருக்க மறுபுறம் இன்னொரு கூத்து.

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகா தனது வீட்டிலிருந்து மளமளவென்று ராஜினாமா கடிதம் எழுதிக் கொண்டிருந்தார்.

ஆளுநரான அவரை ஒருங்கிணைப்புக் குழுவுக்கு செயலாளர் என்று அறிவித்தது தான் கோபத்துக்குக் காரணம். அது அவரது தகுதியைக் குறைப்பதுபோன்ற நடவடிக்கை தான்.

அதுமட்டுமல்ல, வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநரான அவரிடமே அந்த மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் ஒரு முக்கிய நடவடிக்கை தொடர்பாக ஆலோசனை கேட்கப்படவில்லை.

ஒருங்கிணைப்புக் குழு தொடர்பாக அறிவிப்பு வெளியானதும் ஜனாதிபதியைத் தொடர்பு கொள்ள முயன்றாராம் ஆளுநர் காமினி பொன்சேகா. முடியவில்லை. அதனால்தான் ராஜினாமா செய்யும் முடிவுக்குச் சென்றார்.

இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், மாகாண ஆளுநரை செயலாளராக நியமித்தது தகுதிக்கு குறைவான விடயம் மட்டுமல்ல, சட்டப்படியே தவறான செயலாம். ஜனாதிபதிக்கு யார்தான் அப்படி ஒரு தவறான ஆலோசனையைச் சொன்னார்கள்? என்று முடியைப் பிய்த்துக் கொள்கின்றன அரசியல் வட்டாரங்கள்.

சட்டச்சிக்கல் பற்றி காலதாமதமாகத் தான் ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறப்பட்டது. அதன்பின்னரே ஆளுநர் காமினி பொன்சேகாவை ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவராக நியமித்தார் ஜனாதிபதி. அதாவது அமைச்சர் அஷ்ரப்புக்கு சமமான பதவி ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஆரம்பமே அவசரத்தில் அள்ளிப்போட்ட கோலம்போன்றே அமைந்திருக்கிறது. முதற் கோணல் முற்றும் கோணல் என்பது ஒருங்கிணைப்புக் குழு விவகாரத்திலும் பொருந்தலாம்.

ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக யாரை நியமிக்கலாம், யாரை நியமிக்கக் கூடாது என்பது தேவையில்லாத சர்ச்சை.

ஏனெனில் குறிப்பிட்ட ஒருங்கிணைப்புக் குழுவே ஒரு கண்துடைப்பு நடவடிக்கைதான்.

வடக்கு-கிழக்கில் அரசாங்கம் புனரமைப்புப் பணிகளை செய்கிறது என்று வெளியுலகுக்குச் சொல்வதற்கும், காட்டுவதற்கும் செய்யப்பட்டுள்ள ஏற்பாடே இதுவாகும்.



படிப்பகம்

**சென்றவாரம்**

கிராம அதிகாரியின் மகன்
சுரேஷ் சந்த்
பூலான்தேவியைத் தப்பான
எண்ணத்துடன், வழிமறிக்கிறான்.
பூலான் அவனைத் தாக்கிவிட்டு
வீடு செல்லும்போது
சுரேஷ்சந்த் சில குண்டர்களுடன் வந்து
பூலானை நடுவீதியில் வைத்து
தாக்குகிறான். செருப்பால் அடிக்கிறான்.
அபாண்டமாக பழி சுமத்துகிறான்.
பூலானை அவளது கணவன்
புத்திலால் வீட்டுக்கு
அழைத்துப் போகிறார் பூலானின் தந்தை.

>>>>>>>>>> இனி

# 10 கொள்ளை ராணி

## பூலான்தேவி

நானும் அப்பாவும் புத்திலால் வீட்டுக்கு சென்றபோது புத்திலால் வெளியே எங்கோ போயிருந்தான். புத்திலாலின் அம்மாதான் எங்களை வரவேற்றாள்.

புத்திலாலின் அம்மாவோடு நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது வீட்டுக்குள் இருந்து ஒரு பெண் வெளிப்பட்டாள்.

புத்திலாலுக்கு உடன்பிறந்த சகோதரிகள் யாரும் கிடையாது என்று தெரியும். அதனால் அவள் யாராக இருக்கும் என்று எனக்குள் யோசனை எழுந்தது.

முதல் பார்வையிலேயே என்ன காரணமோ தெரியவில்லை, அவளை எனக்குப் பிடிக்கவில்லை. அவளும் ஒப்புக்காக ஒரு புன்னகைகூட சிந்தாமல், என்னையும், அப்பாவையும் ஒரு மாதிரியாகப் பார்த்தாள். பின்னர் புத்திலாலின் அம்மாவை நோக்கினாள். 'யார் இவர்கள்?' என்ற கேள்வி அவள் பார்வைக்குள் இருந்தது.

எம்மை அவள் பார்ப்பதையும், அவளை நாங்கள் பார்ப்பதையும் புத்திலாலின் அம்மா கவனிக்கவே செய்தாள். ஆனாலும் ஏனோ அறிமுகம் செய்து வைக்கத் தயங்கினாள்.

அந்த நேரத்தில் வெளியே சென்றிருந்த புத்திலால் வந்துவிட்டான். எங்களைக் கண்டதும் ஒரு நொடி அவன் கண்கள் விரிந்தன. ஒரு மரியாதைக்காகக் கூட அப்பாவைப் பார்த்து சிரிக்கவும் இல்லை. ஒரு பேச்சுக்காக என்றாலும் சுகம் விசாரிக்கவுமில்லை.

அப்பாதான் எழுந்து நின்று, மிகவும் பணிவாக, "வாங்கோ மாப்பிள்ளை!" என்றார். என்ன செய்வது? பெண்ணைப் பெற்றுவிட்டாரே. அது மட்டுமா, ஏழையாகவும் இருக்கிறாரே. எனக்கு அப்பாவைப் பார்க்கக் கவலையாக இருந்தது.

என் மனதில் ஓடிய இன்னொரு எண்ணத்தையும் சொல்லத்தான் வேண்டும்.

என்னைக் கண்டதும் புத்திலால் வெறுப்பாகி, அந்த வெறுப்போடு, 'ஏண்டி இங்கே வந்தாய்?' என்று கத்தவேண்டும். 'உன் மகளை யாரைக் கேட்டு இங்கே அழைத்து வந்தாய்? அதுதான் எப்போதோ கைகழுவி விட்டேனே. உடனே இரண்டு பேரும் இடத்தைக் காலி செய்யுங்கள். இந்த நாயை வைத்து குடும்பமா நடத்த முடியும்?' என்றெல்லாம் புத்திலால் கத்த வேண்டும். அப்பாவுக்கு ஆச்சரியமாய் ரோஷம் வந்து, 'என் மகளை அத்தனை கேவலமாகவா பேசுகிறாய்? போடா கழுதை. என் மகள் கிளியடா கிளி. அவள் இனிமேல் இந்த வீட்டுப்பக்கமே கால்வைத்தும் பார்க்கமாட்டாள். தூ! நீ வா பூலான்' என்று என்னை அழைத்துக் கொண்டு விறுவிறுவென்று புறப்பட வேண்டும்' என்றெல்லாம் ஆசைப்பட்டேன்.

எங்கள் கிராமத்தில் ஒரு துர்க்கையம்மன் கோவில் இருக்கிறது. 'அம்மா தாயே துர்க்கா' இந்த புத்திலாலிடம் மீண்டும் என்னை சேர்த்து விடாதே தாயே! நீ மட்டும் எனக்கு துணை செய்தால், நான் தினமும் உன் கோவிலில் விளக்கு வைப்பேன்' என்று மனதில் வேண்டுதல் செய்துகொண்டேன்.

எங்கள் முன்பாக அமர்ந்த புத்திலால் அந்தப் பெண்ணிடம் திரும்பி, "வித்தியா! குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் எடுத்துவா போ" என்றான். அவள் பெயர் இப்போது தெரிந்துவிட்டது.

என்னை அலட்சியமாக ஒரு பார்வை பார்த்துவிட்டு அப்பாவிடம் திரும்பி, "வித்தியாவும் இப்போது என் மனைவிதான்!" என்றான். அப்பா அதிர்ந்து போனதுபோலத் தெரிந்தது.

எனக்கு நெஞ்சுக்குள் யாரோ பால் வார்த்ததுபோல இருந்தது. இனி நான் இங்கே இருக்க முடியாதுதானே. அப்பா கெஞ்சிக் கூத்தாடினாலும்கூட புத்திலால் இனி என்னை எப்படி வீட்டில் வைத்திருக்க முடியும்?

வித்தியா ஒரு குவளையில் தண்ணீர் கொண்டுவந்து புத்திலாலிடம் கொடுத்தாள். அப்படி ஒன்றும் பிரமாதமான அழகியல்ல. மாநிறம். சராசரி உயரம். நீண்ட மூக்கு. நீண்ட கழுத்து. கழுத்துக்கு கீழே மட்டும் பெரிய வளர்த்தி. புத்திலாலுக்கு அது போதும். தண்ணீரைக் கொடுத்துவிட்டு வித்தியா உள்ளே போய்விட்டாள்.

"மாப்பிளை என் பெண்ணின் கதி?" என்று கேட்டார் அப்பா. புத்திலால் விகாரமாய் சிரித்து, 'அதோ கதிதான். வந்த பாதையால் திரும்பி இரண்டுபேரும் நடையைக் கட்டுங்கள்!' என்று சொல்லுவான் என எதிர்பார்த்தேன்.

ஆனால் புத்திலாலோ, "விரும்பினால் அவளும் இந்த வீட்டிலேயே இருக்கலாம். வேண்டாமென்றா சொல்லப்போகிறேன். நான் தந்த பசுமாடு எப்படியிருக்கிறது? பால் நன்றாகச் சுரக்கிறதா?" என்றான்.

"அந்த பசுமாடு செத்துவிட்டது மாப்பிள்ளை! பூலான்! இனிமேல் மாப்பிள்ளையை அனுசரித்து நடந்துகொள் அம்மா! மாப்பிள்ளை!, பூலான் சிறு பெண்! நாங்கள் ஏழைகள்தான்! ஆனாலும் இவளுக்கு சற்று அதிகமாகவே செல்லம் கொடுத்து வளர்த்துவிட்டோம். பூலானின் அம்மா போதுமானளவுக்கு புத்திசொல்லித்தான் அனுப்பியிருக்கிறாள். பழசையெல்லாம் மனதில் வைத்திருக்காதீர்கள் மாப்பிள்ளை!" தனது கண்களை துண்டால் துடைத்துக் கொண்டார் அப்பா.

புத்திலாவிடம் விடைபெற்று அப்பா சென்ற சில நிமிடங்களிலேயே நரகம் ஆரம்பித்துவிட்டது.

வித்தியா என்னை ஒரு புழுவைப் பார்ப்பது போலத்தான் பார்த்தாள். புத்திலால் என்னைக் கூப்பிட்டான்.

"உன் திமிரை எல்லாம் மூட்டை கட்டிவை! "என்ன? வித்தியா சொல்லும் வேலைகளை ஒழுங்காகச் செய். அவள் உனக்கு சாப்பாடு போடுவாள். கொழுப்பைக் காட்டினாய், பட்டினிதான்! போடி!" வித்தியாவின் காதில் விழட்டும் என்பதற்காகவே உரத்த குரலில் பேசினான்.

காலையில் வீட்டில் இருந்து புறப்படும் போது கொஞ்சம் கஞ்சி குடித்திருந்தேன். அதன் பின்னர் பச்சை தண்ணீர் மட்டும்தான். வித்தியாவோ, புத்திலாலோ என்னைச் சாப்பிடச் சொல்லிக் கேட்கவில்லை. பாவம் புத்திலாலின் தாய், அவள் மட்டும் இரண்டு முறை கேட்டுப் பார்த்தாள்.

முதல் முறை கேட்டபோது "வேண்டாம் பசிக்கவில்லை" என்று விட்டேன். இரவு பசித்தது. அந்த நேரம்பார்த்து புத்திலாலின் தாய் 'சாப்பிட்டுவிட்டுத் தூங்கு பூலான்' என்றாள்.

சமையல்கட்டில் வித்தியா பாத்திரங்களைக் கழுவிக் கொண்டு இருந்தாள். என்னைக் கண்டதும், விறுவிறுவென்று போய்

**தருவது—ரசிகன்**

பானைக்குள் இருந்த சோற்றை ஒரு தட்டில் போட்டாள்.

'வித்தியா நல்லவள். நான்தான் இவளைப்போய் தவறாக நினைத்துவிட்டேன்.' என்று கவலைப்பட்டேன்.

தட்டில் சோற்றையும், கறிகளையும் போட்டு எடுத்துக்கொண்ட வித்தியா தட்டோடு சமையல்கட்டைவிட்டு வெளியே போனாள்.

வெளியே போனவள் வெறும் தட்டோடு திரும்பி வந்தாள். என்னைப் பார்த்து, "சாப்பிடவா வந்தாய்? வெளியே நாய்க்கு சாப்பாடு போட்டிருக்கிறேன். கடும் பசியென்றால் நாயிடம் போய் உனக்கொரு பங்கு எடுத்துக்கொள்!" என்றாள்.

எனக்கு பசி பறந்துவிட்டது. சுள்ளென்று கோபம்தான் வந்தது. அப்பாவின் முகம் நினைவில் வர என் கோபத்தை கட்டாயமாக அடக்கிக்கொண்டேன்.

நான் சண்டைபோட்டால் அப்பாதானே சமாதானம் செய்ய வந்து இந்த நாய் மக்கள் முன்பாக தலைகுனிந்து நிற்கவேண்டும். அதனால் வேண்டாம். சண்டை வேண்டாம். முடியுமானவரை பொறுத்துப் பார்க்கலாம் என்ற முடிவோடு அமைதியாகத் திரும்பிப் போய் படுத்துவிட்டேன்.

தூக்கம் வரமறுத்தது. பசி வயிற்றைக் கிள்ளிக்கொண்டிருந்தது. வித்தியாவின் செய்கையை நினைக்க அழுகை, அழுகையாக வந்தது. தரையில் சேலையை விரித்து, தலையணை எதுவுமில்லாமல் படுத்திருந்தேன்.

தண்ணீர் குடிக்கவேண்டும்போல் இருந்தது. மெதுவாக எழுந்து சமையல்கட்டுப் பக்கம் சென்றேன். சமையல் கட்டுக்குச் செல்லவேண்டுமானால் புத்திலாலும், வித்தியாவும் படுத்திருக்கும் அறையைத் தாண்டித்தான் செல்ல வேண்டும்.

அறையைத் தாண்டிச் செல்லும்போது உள்ளே புத்திலாலும், வித்தியாவும் பேசிக் கொண்டிருப்பது என்காதில் விழுந்தது. என்பெயரும் அவர்கள் பேச்சில் அடிபட்டதால் பூனைபோல சுவரோடு பதுங்கிக் கொண்டு, காதுகளை தீட்டிக்கொண்டேன்.

"கோவிக்காதே வித்தியா! உனக்கு ஒரு வேலைக்காரிமாதிரித்தானே அவள். வேலைக்காரியை தனியாக வைத்துக்கொண்டால் கூலி கொடுக்க வேண்டும். இவளுக்கு ஒரு நேரம் சாப்பாடு போட்டாலே போதும். அவளது அப்பனுக்கு ஒரு பசுமாடும், சைக்கிளும் கொடுத்திருக்கிறேன். அதற்காக என்றாலும் இவளிடம் வேலை வாங்கிக் கொள்ளவேண்டும்!"

"பார்த்தால் மொழு மொழுவென்று மூக்கும் முழியுமாக இருக்கிறாள் மூதேவி!"

"சேச்சே.. உன்னுடன் ஒப்பிட்டால் சனியன் கால்தூசிக்கும் வரமாட்டாள். என்ன இது வர வர பெரிசாகிக்கொண்டே..."

"அங்கெல்லாம் தொட வேண்டாம்... உங்கள் அம்மாவுக்கு மட்டும் மூத்த மருமகள் மீது பாசம் பொங்கிக்கொண்டு வருகுதாக்கும்?"

"அது கிழவி. விடு! விளக்கை அணைக்கவா? இருக்கட்டுமா? வெளிச்சத்தில் உன்னை ஒருநாள்கூட முழுசாகப் பார்க்கவில்லை நான். என் செல்லம். ஒருநாள் மட்டும். ஒரே ஒருநாள் மட்டும் உன்னை வெளிச்சத்தில்..."

அந்த இடத்தில் தொடர்ந்தும் நிற்கப் பிடிக்கவில்லை. தண்ணீர் குடித்துவிட்டுப் போய்ப் படுத்துக்கொண்டேன்.

மறுநாள் முதல் என்னை வேலைக்காரி போலவே நடத்த ஆரம்பித்தாள் வித்தியாக் கழுதை.

அவள் துணி முழுக்க நான்தான் துவைக்க வேண்டும். சமையல் செய்ய வேண்டும். வீடு பெருக்க வேண்டும். எல்லாம் செய்தேன். இரவு யாரோ அடித்துப் போட்டதுபோல உடம்பெல்லாம் நோகும். புண்புண்ணாக வலிக்கும். பொறுத்துக் கொண்டேன். நான் தாங்கலாம். உடம்பு தாங்குமோ?

காய்ச்சல் பிடித்துக்கொண்டது. மார்பில் சளி கட்டியது. துப்பினால் மஞ்சள் மஞ்சளாக சளி. மருந்தா எடுக்கமுடியும்?

காய்சல் என்று நான் காட்டிக் கொள்ளவில்லை. வித்தியா அறிந்தால் சந்தோசப்படுவாள். அதனால் சொல்லக்கூடாது. வழக்கம்போலவே வேலை செய்தேன்.



பூலான்

ஒருநாள் அதிகாலை 4 மணி இருக்கும் என்று நினைக்கிறேன். காய்ச்சலும், சளியும் காரணமாக இரவு முழுக்க தூக்கம் இல்லை. அப்போதுதான் சற்றுக் கண்ணயர்ந்தேன். யாரோ என்னைத் தொட்டு உலுக்கினார்கள்.

கண்திறந்து பார்த்தால் சண்டாளி அவள்தான் வித்தியா.

"எழும்படி. விடிந்து நாலு நாள். இன்னுமா தூங்குகிறாய்? மூதேவி! தரித்திரம்! எழும்படி!" நான் எழுந்துவிட்டேன்.

"இதோ பாராடி. நான் வெளியே போய் வருவதற்கு இடையில் இந்த கோதுமை முழுவதும் மாவாக மாறியிருக்கவேண்டும். என்ன, முண்டம் வாயைத் திறவடி!"

"சரி!" என்றேன்.

முழுவதும் பத்துக்கிலோ கோதுமை இருக்கும்.

மாலையில் வித்தியா வீடு திரும்பும்போது அதில் பாதியைக் கூட நான் திரிக்க முடியவில்லை.

வித்தியா பத்திரகாளியாக மாறிவிட்டாள். "வேலைக்கார நாயே! என்ன கொழுப்படி உனக்கு. சொல்லிவிட்டு போயும் கல்லுமாதிரி இருந்திருக்கிறாய்." என் கையைப் பிடித்து தரதரவென்று இழுத்துக் கொண்டு உள்ளே போனாள்.

சமையல் கட்டில் என்னை நிறுத்திவிட்டு இரும்புக் கம்பி ஒன்றை அடுப்பில் செருகி சூடாக்கினாள்.

எனக்குப் புரிந்துவிட்டது.

சூடுவைக்கப்போகிறாள்.

"சேலையைக் கழட்டிப்போடடி கழுதை!"

நான் யோசிக்கவேயில்லை. நிதானமாக அவிழ்த்துப் போட்டேன்.

"சட்டையைக் கழட்டடி.. உன் நெஞ்சில்தான் சூடு போடவேண்டும். கொழுப்பெல்லாம் மாரில்தான்! என்னடி பார்க்கிறாய்? கழட்டடி!" இப்போது அவள் கையில் சூடாக்கிய இரும்பு.

அதன் முனை சிவப்பாக ஒளிர்ந்தது. பட்டால்போதும். உயிர் போகுமளவுக்கு வலிக்கும்.

"கழட்டடி நாயே!" கிட்ட வந்தாள்

இப்போது எனக்குள் இருந்த பொறுமை, சகிப்பு எல்லாம் மெல்ல மெல்ல விலகிக் கொண்டிருந்தது.

'என் பலம் என்னவென்று அறியாமல் வருகிறாயே' என்று அவளை ஒரு எலிபோல பார்த்தேன். எனக்குள் திடீரென்று அந்த மாற்றம் ஏற்பட்டது.

'நீ தேவதை. மலர்களின் தேவதை!' என்று யாரோ எனக்குள் இருந்து கூவுவது போல் இருந்தது. என் உதடுகள் தன்னிச்சையாக விரிந்து,

"நில்லடி!" என்றேன்.

அதுவரை என்னிடமிருந்து அப்படியொரு எதிர்ப்பையோ, குரலின் கடுமையையோ எதிர்பார்க்காத வித்தியா அதிர்ந்து போனவள் போல் பார்க்க,

"அதைக் கொடடி என்னிடம்!"

என்றேன். அதிர்ச்சியில் விரிந்த விழிகளை மூடாமலேயே இரும்புக் கம்பியை நீட்டினாள். வாங்கிக் கொண்டே சொன்னேன்.

"உடம்பில் ஒரு பொட்டுத்துணிகூட இருக்கக்கூடாது கழட்டடி நாயே!"

தயங்கினாள்.

நெருங்கினேன்.

"ஐயோ.... சூடுவைக்காதே!" கனைய ஆரம்பித்தாள்.

(தொடர்ந்து வரும்)

## தனிமைச் சிறையில் "நான்தான் கார்லோஸ்"

பாரிஸ் நகரின் தென் கிழக்கே பிரமாண்டமானதொரு சாம்பல் நிறக் கட்டிடம். 129 வயதுடைய இக்கட்டிடத்தில்தான் சர்வதேசப்பயங்கரவாதி கார்லோஸ் சிறை வைக்கப்பட்டுள்ளான். முக்கியமான பிரமுகர்கள் மொத்தம் 1600 பேர் கைதிகளாக இங்கிருக்கின்றனர். இங்கு பாதுகாப்புக் கெடுபிடிகள் மிகவும் அதிகம். பிரான்சிலுள்ள சிறைக் கூடங்களில் 'லா சந்தே' சிறைக்கூடம் மூன்றாவதாகக் கணிக்கப்படுகிறது.

லஞ்ச ஊழல் ஒழிப்பு நடவடிக்கையை ஃபிரான்ஸ் அரசாங்கம் அண்மையில் மேற்கொண்டது. இதில் அந்நாட்டின் பல பிரமுகர்கள் சட்டத்தின் கைகளில் மாட்டிக் கொண்டனர். ஃபிரான்சின் 'பாதாள உலக' மன்னன் 'கேணல்' பொப் டெனாட், கார்லோஸ் வாழும் சிறை அறையின் மேல்தளத்தில் வைக்கப்பட்டுள்ளான்.

அரசியல் கைதிகள், போதைப் பொருள் கடத்தல்காரர்கள், அரச நிர்வாகத்தில் உயர் தரத்தில் இருந்தவர்கள் ஆகியோரும் பலர் இங்குள்ளனர்.

பூரண பாதுகாப்பிலுள்ள இதே சிறையிலிருந்து பத்து வருடங்களுக்கு முன்னர் ஹெலிக்கொப்டர் மூலம் பாதாள உலகைச் சேர்ந்த கைதி ஒருவன் தப்பிச் சென்ற வரலாறுமுண்டு.



கார்லோஸ் மூன்றாவது மாடியில் 97 சதுர அடி பரப்புள்ள ஓர் அறையில் தனிமையில் விடப்பட்டுள்ளான். கார்லோஸைப் பார்ப்பதற்கு எவரும் அனுமதிக்கப்படுவதில்லை. வேளாவேளைக்கு உணவு வழங்குவோரும், அறையைத் துப்புரவு செய்வோரும் மட்டுமே இங்கு செல்வதுண்டு

பெரும்பாலும் தனிமையில் இருக்கும் கார்லோஸ் சில வேளைகளில், "நான்தான் கார்லோஸ்," "என்னைத் தெரியாதா? கார்லோஸ் நானே தான்!" என்று உச்சஸ்தாயியில் கத்துவானாம். இரண்டு வருடங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டு ஃபிரான்சின் பல சிறைகளில் வைக்கப்பட்டிருந்த கார்லோஸ், கடந்த 6 மாதங்களாக இங்கேதான் வைக்கப்பட்டுள்ளான்.

## பிரதமராவாரா பூலான் தேவி?

பாராளுமன்ற உறுப்பினராகிய பின்னர் படு பிஸியாக இருக்கிறார் பூலான் தேவி. பூலான்தேவியிடம் மனுக் கொடுத்தால் பிரச்சனை உடனே தீர்ந்துவிடும். பூலான்தேவி சொன்னால் அதிகாரிகளும் கேட்பார்கள் என்று அவரது தொகுதி மக்கள் நம்புகிறார்கள். அதனால் பூலான்தேவியைச் சந்திக்க ஒரே கூட்டம்.

சமீபத்தில் பூலானைச் சந்தித்தார் ஒருவர். தனது வீட்டுக்குப் ஃபோன் தேவை. பல வருடங்களுக்கு முன்னர் விண்ணப்பித்தும் இதுவரை ஃபோன் கிடைத்த பாடில்லை என்றார் அவர்.

உடனே தொலைபேசி இலாகாவை ஃபோனில் தொடர்பு கொண்டார் பூலான். இரண்டு நாட்களில் குறிப்பிட்ட நபரின் வீட்டுக்கு ஃபோன் கிடைத்துவிட்டது. 'ஃபோன் கிடைத்துவிட்ட விடயத்தையும் பூலான் தேவிக்கு சொல்லிவிடுங்கள்' என்று



கூறிவிட்டுப் போனார்களாம் அதிகாரிகள். எல்லாம் ஒரு மரியாதைதான்.

இந்தியப் பத்திரிகைகளில் பூலான்தேவியின் பேட்டிகளுக்கு மவுசு. அதனால் பத்திரிகையாளர்கள் மொய்க்கிறார்கள். ஒரு சில பத்திரிகைகளுக்கு மட்டுமே பேட்டி கொடுக்கிறார் பூலான்தேவி.

சமீபத்தில் இந்திய ஆங்கில சஞ்சிகையில் வெளியான பூலான்தேவியின் பேட்டி ஒன்றில் இருந்து இது:

**கேள்வி:-** **அரசியலில் நீங்கள் ஈடுபடக் காரணம் என்ன?**

**பூலான்தேவி:-** என்னிடம் மட்டும் ஏன் இப்படியொரு கேள்வி கேட்கிறீர்கள். சிலர் பணம் தேட அரசியலில் குதிக்கிறார்கள். நான் ஒடுக்கப்பட்ட ஜாதி மக்களை முன்னேற்றுவதற்காக அரசியலில் இறங்கி இருக்கிறேன்.

**கேள்வி:-** **பாரதிய ஜனதா கட்சி உங்களை அழைக்கவில்லையா?**

**பூலான்:-** என்னை அழைக்குமளவுக்கு அவர்களுக்கு துணிச்சல் கிடையாது.

**கேள்வி:-** **காங்கிரஸ் கட்சியில் சேரும் எண்ணம் இருக்கிறதா?**

**பூலான்:-** தற்போதுள்ள சூழலில் அவசியமில்லாத கேள்வி இது.

**கேள்வி:-** **சந்தனக் கடத்தல் வீரப்பன் பற்றி கேள்விப் பட்டிருக்கிறீர்களா?**

**பூலான்:-** சமீபத்தில்தான் கேள்விப் பட்டேன்.

**கேள்வி:-** **தேர்தலில் போட்டியிட அவர் விரும்பியதாகச் சொல்கிறார்கள். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

**பூலான்:-** வீரப்பன் முதலில் காட்டைவிட்டு வெளியே வரட்டும். பின்னர் மக்களுடன் வாழவேண்டும். காட்டுக்குள் இருந்து தேர்தலில் போட்டியிட முடியுமா?

**கேள்வி:-** **பொதுமன்னிப்புக் கொடுத்தால் சரண் அடைவேன் என்கிறார் வீரப்பன். அதற்கு உங்களைத்தான் முன்னுதாரணமாகச் சொல்கிறார்?**

**பூலான்:-** 11 வருடம் நான் சிறையில் இருந்தேன்.

**கேள்வி:-** **பெண்களுக்கு 35 சதவீத இட ஒதுக்கீடு தரப்போகிறார்களாமே?**

**பூலான்:-** எனது 'எகலைவ சேனா' மூலம் பெண்களுக்கு வேலை வாய்ப்பிலும், அரசியலிலும் 50 சதவீத இட ஒதுக்கீடு கேட்டிருக்கிறோம்.

**கேள்வி:-** **உங்கள் கோரிக்கை புதுமையானதா?**

**பூலான்:-** காலம் காலமாக இந்த நாட்டை ஆண்கள்தான் ஆண்டார்கள். அந்த ஆண்கள் பெரிதாக ஒரு நன்மையும் செய்யவில்லை.

**கேள்வி:-** **இந்திரா காந்தியும் ஆண்டாரே?**

**பூலான்:-** ஆம். அவர்கூட 50 சத வீத இட ஒதுக்கீட்டை கொண்டுவராமல் போய்விட்டார்.

**கேள்வி:-** **நீங்கள் பிரதமரானால் என்ன செய்வீர்கள்?**

**பூலான்:-** நான் பெரிய கனவெல்லாம் காண்பதில்லை.

**கேள்வி:-** **முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவின் மனைவி சோனியாவைச் சந்தித்தீர்களே?**

**பூலான்:-** அவரை எனக்குப் பிடிக்கும். அதுதான் சந்தித்தேன். அவர் பிரதமராக வரவேண்டும் என்று விரும்புகிறேன்.

**கேள்வி:-** **அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டனைச் சந்தித்தால் என்ன பேசுவீர்கள்?**

**பூலான்:-** நமது இந்தியா ஜனநாயக நாடு என்று சொல்லப்படுகிறது. ஆனால் ஜனநாயகம் என்பது ஒரு பெயருக்குத்தான் இருக்கிறது. நடப்பதெல்லாம் நேர்மாறு என்று சொல்லுவேன்.

**கேள்வி:-** **அதனால் இந்தியாவின் கௌரவம் கெடுமல்லவா?**

**பூலான்:-** நான் நரகத்தில் கிடந்து துடித்ததுதான் இந்த நாட்டின் கௌரவத்துக்கு உதாரணமோ?

இதுதான் பூலானின் பேட்டி.

பூலான்தேவி பிரதமராவாரா என்று நிருபர் கேட்டிருந்தார் அல்லவா? அப்படி நடந்தால்கூட அதில் என்ன ஆச்சரியம்? தேவகௌடா பிரதமராவார் என்று யாராவது நினைத்தது உண்டா? இல்லையே!


வாரமலர் தினமுரசு


செப்.22–28,1996

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# பன்றிகளுக்குப் புகலிடம்

குழந்தைகள் அநாதைகளானால் கூட கவனிக்க முடியாதளவுக்கு நாம் இருக்கிறோம். ஆனால் கனடாவில் முள்ளம் பன்றிக் குட்டிகள் அநாதைகளானதைக்கூட அங்குள்ளவர்களால் பொறுக்க முடியவில்லை. உடனே அபயக்கரம் நீட்டியிருக்கிறார்கள்.



படத்தில் இருப்பவையெல்லாம் அநாதைகளாகக் கண்டெடுக்கப்பட்டு உடனடியாக அடைக்கலம் வழங்கப்பட்ட முள்ளம்பன்றிக் குட்டிகள்.

கனடாவில் உள்ள 'கொப்ஹாம்' என்னும் ஊரில் தாய்களை இழந்து வாடிய சுமார் 45 முள்ளம் பன்றிக் குட்டிகள் காப்பாற்றப்பட்டன. வீட்டுப்புறத் தோட்டங்களில் புல்லுகள் உயரமாக வளர்ந்து விடுகின்றன. அவற்றை வெட்டிச் சுத்தப்படுத்த இயந்திரங்களை உபயோகப்படுத்துகின்றனர். இயந்திரங்கள் சுழலும் போது புல்லுகளுக்குள் உள்ள முள்ளம் பன்றிகள் வெட்டப்பட்டு செத்துவிடுகின்றன. தாய்கள் பலியாக குட்டிகள் அநாதைகளாகிவிடுகின்றன. அவ்வாறு அநாதையான 45 குட்டிகள் 'பார்த்திங் வூட் வைல்ட்லைஃப்' என்னும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளன.

இனிமேல் புல்லை வெட்டும்போது தடி ஒன்றினால் புல், பற்றைகளை விலக்கிப்பார்த்துவிட்டு வெட்டுமாறு வீட்டுத் தோட்டக்காரர்களுக்கு அறிவுறுத்தல் கொடுக்கப்பட்டுள்ளது. புல்லை வெட்டும்போது கூட மிருகாபிமானம் பார்த்து வெட்டுவது அங்கே. களைகள் என்று பயிர்களையே வெட்டும் மனிதாபிமானம் அற்ற முறை இருப்பது இங்கே.




# வாவ்! வைரம்

இதுவரை ஏலத்திற்காக வைக்கப்பட்ட வைரங்களில் மிகப்பெரிய வைரம் 1988 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் லண்டன் நகரில் நடந்த ஏலத்தில் வைக்கப்பட்ட வைரம்தான் மிகப்பெரியது. 407 கரட் அளவுள்ள இந்த வைரம் 25 மில்லியன் பவுன்ஸுக்கு ( 215 கோடி ரூபாய் ) ஏலம் விடப்பட்டது. துரதிஷ்டவசமாக இதை வாங்க யாரும் முன் வரவில்லை. இவ்வளவு விலை கொடுத்து வைரம் வாங்குவதா என்ற தயக்கமோ? இந்த வைரம் விற்கப்படாமலேயே மீண்டும் பழைய நபரிடமே சென்றடைந்தது.

# நேருக்கு நேர்

படத்தில் காணும் காட்சி அபூர்வமானதுதான். ஆனால் சோகமானது. சமீபத்தில் இலண்டன் நகரில் இரண்டு மின்சார ரெயில்கள் எதிரும் புதிருமாக ஒரே தண்டவாளத்தில் மோதிக்கொண்டன. மோதியதில் ஒரு ரயிலில் பயணிகள் எவரும் இருக்கவில்லை. மற்றொரு ரயிலில் பயணிகள் இருந்தனர். ரயில்கள் இரண்டும் முத்தமிட்டுகொண்டதால் ஒரு பெண் பலியானார். 100பேர் காயமடைந்தனர். 12 பேர் ஆபத்தான நிலையில் உள்ளனர். நல்லவேளையாக உயிர் இழப்பு அதிகமாகவில்லை என்பதுமட்டும் ஆறுதல்.




# படகு-படகு ஆசைப்படகு!

சென்சி ஹோரி என்பவருக்கு 57 வயது. ஜப்பான் நாட்டில் 57 வயதிலும் சுழன்று விளையாடுவார்கள். சென்சி ஹோரியும் புதுமையாக ஏதாவது செய்யும் ஆசையில் 'சூரியசக்கி' படகொன்றை தயாரித்தார். சூரிய ஒளி மூலம் இயங்கும் இப்படகு மூலம் ஈகுவடார் நாட்டில் இருந்து பசுபிக் கடல் வழியாக 16 ஆயிரம் கிலோமீட்டர்கள் பயணம் செய்து சாதனை படைத்துள்ளார். இந்த சூரியசக்தி படகின் நீளம் 30 அடி. இதற்கு சூட்டியுள்ள பெயர் 'மெர்மைய்ட்'

ஜப்பான் நாட்டில் அநேகமான சகல வயதினருக்கும் சுறு சுறுப்பு அதிகம். ஏதாவது புதிதாகச் செய்யவேண்டுமே என்ற குறு குறுப்பும் அதிகம்.

## தகவல் பெட்டி



# வளரும் வாலிபன்

உலகில் மிக உயரமான மனிதன் பாகிஸ்தானைச் சேர்ந்த முகமது ஆலம் சன்னா. அவர் முரசின் தகவல் பெட்டி பிரியர்களுக்கு நன்கு பரிச்சயமானவர். இந்தியாவில் உயரமான மனிதரையும் அறிமுகம் செய்து வைக்கிறோம். இவர் இந்தியாவில் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர். நண்பரோடு போஸ் கொடுக்கிறார் பாருங்கள்.

இவரது பெயர்தான் உறுத்தலாக இருக்கிறது. அதாவது நேர்மாறான பெயர். ஏழு அடி ஆறு அங்குல உயரமான இவரது பெயர் கட்டய்யா. பிறக்கும்போது இந்தமாதிரி வளர்ந்து தொலைப்பார் என்று தெரியுமா என்ன. அதுதான் கட்டய்யா என்று பெயர் வைத்துவிட்டார்கள்.

பதினொரு வயது வரை சாதாரணமாகத் தான் வளர்ந்து கொண்டிருந்தாராம். அதன் பின்னர்தான் நம்நாட்டு விலைவாசிமாதிரி கிடு கிடுவென்று வளரத் தொடங்கினாராம். பெற்றோர், உற்றார், ஊரவர் யாவரும் மலைத்துப் போனார்களாம்.

கட்டய்யாவுக்கு இப்போது இருபது வயது. மேலும் வளர்ந்து உலகில் உயரமான மனிதர் முகமது ஆலம் சன்னாவை முறியடிக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறதாம்.

எல்லோரையும் வியக்கவைக்கும் இந்த வாலிபரின் சொந்தக் கதை சோகமானது. வறுமையான குடும்பம். ஆள்வேறு உயரமாகி விட்டதால் உடை தைப்பதற்கும் அதிக துணி தேவை. அதற்கே வழியில்லையாம். கடந்த தேர்தலில் தேர்தல் பிரசாரத்துக்காக இவரைப் பயன்படுத்தி வாக்குக் கேட்டார்களாம். இவரது உயரத்தைப் பார்க்கவே கூட்டம் கூடியதாம். இவரைப் பயன்படுத்தி பிரசாரம் செய்தவர் எம்.பியாகிவிட்டார். பாவம் இந்தத் தம்பி தனிமரமாக நிற்கிறார்.




# உள்ளே ஜில், ஜில்

கட்டிடக்கலையில்தான் எத்தனை முன்னேற்றம். படத்தில் சர்க்கஸ் கூடாரம் போன்று இருப்பதும் கட்டிடம்தான். அமெரிக்காவில் புளோரிடா மாநிலத்தில் இந்த அழகான அதிசயமான கட்டிடம் இருக்கிறது. இதற்கு 'புளோரிடா ஸ்ட்ரக்கர்' என்று பெயர் சூட்டியுள்ளனர். இந்த கூடார வடிவ கட்டிடத்திற்குள் 40 வர்த்தக நிறுவனங்கள் உள்ளன. 106 அடி உயரமுள்ள ஒரு தூண், மற்றும் 62 அடி உயரமுள்ள மூன்று தூண்கள் ஆகியவை இக் கட்டிடத்தை தாங்கி நிற்கின்றன.

இக் கட்டிடத்தில் அழகு மட்டுமல்ல ஆரோக்கியமும் இருக்கிறது. நல்ல காற்றோட்டம் உண்டு. வெப்பகாலத்திலும் உள்ளே ஜில் என்று இருக்குமாம். மழை காலத்திலும் தண்ணீர் உடனே வடிந்துவிடும். உள்ளே கதகதப்பான வெப்பம் இருக்குமாம். கால மாற்றத்திற்கு ஏற்ப ஒத்துழைக்கும் கட்டிடம் இது.

உள்ள கட்டிடங்களையும் உடைத்துக் கொண்டிருக்கும் யுத்த பூமியில் வாழும் நாம் இதனைப் பார்த்து பெருமூச்சுவிடமட்டும்தான் முடியும்.





படிப்பகம்

www.padippakam.com

## அமிர்தராஜ் சகோதரர்களின் படம் அமெரிக்காவில் ஏ.ஆர்.ரகுமான்

காதலன், ஜென்டில்மேன், இந்தியன் போன்ற படங்களை இயக்கியவர் ஷங்கர். தற்போது அவர் இயக்க ஒப்பந்தமாகியுள்ள புதிய படங்களில் ஒன்றை பெரும்புள்ளி ஒருவர் தயாரிக்கிறார். அந்த பெரும் புள்ளியின் பெயர் அசோக் அமிர்தராஜ். இவர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர். முன்னாள் பிரபல டென்னிஸ் வீரர். டென்னிஸ் உலகில் கொடிகட்டிப்பறந்த அமிர்தராஜ் சகோதரர்கள் தற்போது படத் தயாரிப்பில் கொடிகட்டிப் பறக்கிறார்கள். அதுவும் எங்கே தெரியுமா? அமெரிக்க ஹொலிவுட்டில்!

வான் டாம் கதாநாயகனாக நடித்த 'டபுள் இம்பக்ட்' உட்பட பல ஹொலிவுட் படங்களை தயாரித்தவர்கள் இவர்கள்.

அமிர்தராஜ் சகோதரர்களில் ஒருவரோடு ஸ்ரீதேவி நெருக்கமாக இருந்தவர். இருவருக்கும் திருமணம் நடக்கப்போவதாகவும் பேச்சு இருந்தது. பின்னர் உறவில் கசப்பு. அதனால் விரிசல்.

ஆங்கிலப் படங்களை தயாரிப்பதோடு தமிழ்ப் படங்களையும் தயாரிக்க அமிர்தராஜ் சகோதரர்களுக்கு ஆசை வந்திருக்கிறது.

ஷங்கரின் திறமையில் நம்பிக்கை வைத்து அவரையே இயக்குநராக்கியுள்ளனர்.

ஷங்கரின் இயக்கம் என்றால் இசை ஏ.ஆர்.ரகுமான் என்பது மாற்றமில்லாத விஷயம். படத்திற்கு பெயர் சூட்ட முன்னரே ஷங்கரும், ஏ.ஆர். ரகுமானும் அமெரிக்கா சென்றனர். அங்குவைத்து புதிய படத்திற்கான பாடல்களுக்கு மெட்டமைத்துக் கொடுத்திருக்கிறார் ரகுமான்.

பத்து நாட்களில் பாடல்களுக்கான மெட்டுக்களை அசத்தலாக போட்டுக் கொடுத்து விட்டாராம் ரகுமான்.

## சுவாதியின் பெருமை

'வான்மதி' படத்தின் வெற்றியால் தயாரிப்பாளர்கள் படையெடுத்து வந்தார்கள். தான் மசியவில்லை. நல்ல படங்களாக தேர்ந்தெடுத்து நடித்து வருகிறேன் என்று சொல்பவர் சுவாதி. அதாவது அஜித்குமாரின் முன்னாள் காதலி.

'மாப்பிள்ளை கவுண்டர்' படத்தில் பிரபுவுடன் ஜோடியாக நடிப்பதை பெருமையாக நினைக்கிறாராம்.

நடிக்க வருவதற்கு முன்னர் 'மொடலிங்' செய்த அனுபவம் இருப்பதால் தனக்கு பொருத்தமான உடைகளைத் தானே தெரிவு செய்கிறாராம்.

சமீபத்தில் ஒரு பேட்டியில் சுவாதியை 'அவள் ஒரு நல்ல பெண்' என்று பாராட்டியிருந்தார் அஜித்குமார். அது குறித்து கேட்டபோது அபிப்பிராயம் சொல்ல மறுத்துவிட்டார் சுவாதி.

'சிவன்', 'மை இந்தியா', 'செல்வா', 'புதிய சக்தி' என்று பல படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

நெப்போலியன்
படம்:~ பகவத்சிங்
தேவயாணி



சரத்குமார்-லிசாரே
படம் நேதாஜி



நெப்போலியன்-ஊர்வசி
படம்: எட்டுப்பட்டி ராசா

## குஷ்புவின் சிபாரிசில் சு... ரஜினி படத்தை இயக்கும் அதி...

குஷ்பு வானத்தில் பறக்காத குறை அத்தனை மகிழ்ச்சி. பின்னே குஷ்புவின் சிபாரிசை ரஜினி தட்டவில்லையல்லவா. தனது புதிய படத்தி... இயக்குநராகப் போட்டுவிட்டார்.

'உள்ளத்தை அள்ளித்தா' படத்தை ரஜினிக்கு விசேஷமாகப் போட்டுக் கா... சிபாரிசு செய்தவர் குஷ்பு. இச் செய்தி சினிவிசிட் வாசகர்கள் அறிந்த செ... சுரேஸ் கிருஷ்ணா, 'இந்தியன்' பட இயக்குநர் ஷங்கர், சி.சுந்தர் என்... இயக்குநர்கள் பெயர்கள் பரிசீலனையில் இருந்தன. இறுதியாக சி.சுந்தரு... அதிஷ்டம் அடித்திருக்கிறது.

இதுவரை கமல் படங்களுக்கு வசனம் எழுதிய கிரேஸி மோகனையும் தனது புதிய படத்தில் பயன்படுத்தப்போகிறார் ரஜினி- 'அருணாச்சலம்' படத்திற்கு வசனம் கிரேஸிமோகன்தான்.

கமலின் 'அபூர்வ சகோதரர்கள்', 'மைக்கேல் மதன காமராஜன்', 'இந்திரன்-சந்திரன்', 'சதிலீலாவதி' போன்ற படங்களுக்கு வசனம் எழுதியவர் கிரேஸி மோகன். நகைச்சுவை வசனம் எழுதுவதில் ஸ்பெஷலிஸ்ட். எனவே 'அருணாச்சலம்' நகைச்சுவைக்கு முக்கியத்துவம் உள்ள படமாக இருக்கும்.

'அருணாச்சலம்' படம் மூலமாக வரும் லாபத்தை எட்டுப்பேருக்குப் பங்கிட்டுக் கொடுக்கப்போகிறார் ரஜினிகாந்த்.

பழம்பெரும் நடிகை பண்டரிபாய், வி.கே.ராமசாமி ஆகியோர் உட்பட எட்டுப் பேருக்கு இலாபத்தில் பங்கு கொடுக்கப்போகிறார் ரஜினி.

ரஜினியை முதன் முதலாக கதாநாயகனாக வைத்து 'பைரவி' படம் எடுத்தவர் கலைஞானம். அவரும் எட்டுப் பேரில் ஒருவர்.

தன்னைத் திரையுலகில் ஆதரித்தவர்களில் இப்போது கஷ்டப்படுகிறவர்களாக தெரிவு செய்து இலாபத்தை பங்கிட்டுக் கொடுக்கப் போகிறார் ரஜினி. நன்றி மறவாத ரஜினியின் குணம் பாராட்டப்படவேண்டியதுதான்.

குஷ்பு
படம்: கோபாலா கோபாலா

## தேவயாணி - ஹீரா மோதல்

'காதல் கோட்டை' படத்தின் வெற்றியால் தேவயாணியின் மார்க்கெட் உயர்ந்திருக்கிறது. ஆனாலும் தேவயாணிக்கு ஒரு மனவருத்தம். எல்லாம் காதல் விவகாரம்தான். தேவயாணியை எக்காரணம் கொண்டும் சந்திக்க வேண்டாம் என்று அஜித்குமாருக்கு உத்தரவு போட்டுள்ளார் ஹீரா.

'காதல் கோட்டை' படத்தின் பின்னர் அஜித்குமார் தேவயாணியிடையே எதையும் பகிர்ந்து கொள்ளக் கூடியளவுக்கு நட்பு வளர்ந்தது. இந்த விடயம் ஹீராவுக்கு தெரிய வந்துவிட விவகாரம் சூடு பிடித்தது.

'காதல் கோட்டை' பட வெற்றியால் சந்தோசமடைந்த தேவயாணி சமீபத்தில் அஜித்குமாருக்கு போன் செய்தார். அஜித் வீட்டில் இல்லை. ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டலின் பெயரைச் சொல்லி அங்கு இருப்பதாக வீட்டில் தகவல் சொல்லப்பட்டது.

குறிப்பிட்ட ஹோட்டலுக்குப் போன் செய்தார் தேவயாணி. மறுமுனையில் போனைத் தூக்கியவர் ஹீரா. தேவயாணியின் குரலை போனில் அடையாளம் கண்டு கொண்ட ஹீராவுக்கு மகா கோபம். ஆங்கிலத்தில் உள்ள சிறந்த கெட்ட வார்த்தைகளாக தெரிவு செய்து திட்டித் தீர்த்துவிட்டாராம். விடுவாரா தேவயாணி அவரும் பதிலுக்கு சள்புள்ளென்று பாய்ந்துவிட்டு போனை வைத்துவிட்டாராம்.

ஹீரா திட்டியதுகூட தேவயாணிக்கு வருத்தமில்லையாம். ஹீராவுக்கு அருகில் இருந்து அஜித் கேட்டுக்கொண்டுதானே இருந்திருப்பார். அவராவது குறுக்கிட்டுத் தடுத்திருக்கலாமே என்பதுதான் வருத்தம். பாவம் அஜித் தடுக்கக் கூடிய பக்குவத்தில் இருந்தாரோ இல்லையோ என்று யார் கண்டது.



## சிலம்புச் சண்டை

'எட்டுப்பட்டி ராசா' படத்திற்காக உண்மையாக சிலம்புச் சண்டை கற்றுவருகிறார் நெப்போலியன்.

குஷ்பு, ஊர்வசி இருவரும் தனக்கு ஜோடியாக நடிப்பதால் சற்றுப் பயப்படுகிறார் நெப்போலியன். இருவரையும் எப்படிச் சமாளிப்பது? "இருவருமே சிறந்த நடிகைகள். அதனால் மிகவும் சிரத்தையுடன் என் வேலையைச் செய்ய வேண்டியிருக்கிறது. அப்படியானால்தான் தாக்குப்பிடிக்க முடியும். என் நடிப்புக்குப் பாராட்டும் கிடைக்கும்" என்கிறார் நெப்போலியன்.

## பாட்டு ஓ.கே!

கார்த்திக்-நக்மா நடித்துள்ள படம் 'மேட்டுக்குடி' தற்போது வெளிவந்துவிட்டது. மேட்டுக்குடி படத்தில் நக்மாவுக்கு பின்னணி பாடியிருப்பவர் இஸ்ரத். யார் இந்த இஸ்ரத்? இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமானின் தங்கை.

அண்ணனிடம் வாய்ப்புக் கேட்பது நல்லாயிருக்காது என்பதால் இசையமைப்பாளர் சிற்பியிடம் வாய்ப்புக் கேட்டார். வாய்ப்பும் கிடைத்தது. பாடலும் ஓ.கே. பாடலைக் கேட்ட ஏ.ஆர்.ரகுமானும் பாராட்டினாராம்.

## வருகிறது சக்தி

குஞ்சுமோன் தயாரிப்பில் வினித், தபு, அப்பாஸ் நடித்துள்ள 'காதல் தேசம்' படம் தமிழ்நாட்டில் நன்றாகப் போய்க்கொண்டிருக்கிறது. வினித், தபு அப்பாஸ் மூவருமே போட்டி போட்டுக்கொண்டு நடித்திருக்கின்றனர்.

குஞ்சுமோன் தயாரிப்பில் வினித் நடித்துவரும் மற்றொரு படம் 'சக்தி' விரைவில் திரைக்கு வரப் போகிறது. 'சக்தி'யில் யுவராணியின் கவர்ச்சிக்கு உள்ள 'சக்தி'யையும் கண்டு களிக்கலாம். யுவராணியை நன்கு ரசித்து பயன்படுத்தி உள்ளார்களாம். தயாரிப்பாளர் குஞ்சுமோனுக்காக இயக்குநர் சொன்னபடியெல்லாம் நடித்துக் கொடுத்திருக்கிறார் யுவராணி.

'சக்தி' படமும் ஹிட்டானால் வினித் ஒரு ரவுண்ட் வருவது நிச்சயம்.

## மீண்டும் மழை

எப்படியோ தூதுக்கு மேல் தூதுவிட்டு ரஜினி மனதைக் கரைத்துவிட்டார் ஆச்சி மனோரமா.

தனது படத்தில் மனோரமா நடிப்பார் என்று ரஜினி அறிவித்தார். அடுத்த நிமிடமே மனோரமாவுக்கு மளமளவென்று பல புதிய படங்களில் நடிக்கும் வாய்ப்பு வீடுதேடி வந்துவிட்டதாம்.

"ஆச்சி மாதிரி ஒரு நடிகை கிடைப்பது அபூர்வம். ரஜினி வருத்தப்படுவாரோ என்றுதான் அவரை நடிக்க அழைக்காமல் இருந்தோம். இப்போது ரஜினியே பச்சைக்கொடி காட்டிவிட்டார். இனி என்ன?" என்கிறார் ஒரு தயாரிப்பாளர். ஆச்சியின் காட்டில் மீண்டும் மழை.

## மற்றுமொரு நடிகர்

சிவாஜி, கமல், கார்த்திக், ரஜினி என்று சொந்தக் குரலில் பாடிய நடிகர்கள் பட்டியலில் புதிதாக ஒருவர் சேர்ந்திருக்கிறார். அவர்தான் விஜயகுமார்.

பிரபு-நக்மா நடிக்கும் 'பெரிய தம்பி' படத்தில் விஜயகுமார் ஒரு பாடல் பாடியிருக்கிறார்.

"பூவுக்கொரு கல்யாணம். பூ முடிக்கும் கல்யாணம். புத்தம் புதுப் பாட்டுப் பாடுங்க." என்று தொடங்கும் பாடலை விஜயகுமார் பாடியிருக்கிறார். பாடலை எழுதியவர் வைரமுத்து. இசை: தேவா.

## தெலுங்கில் மாற்றம்

இந்தியில் பெரு வெற்றிபெற்ற ஹம் ஆப்கே ஹைன் கோன், தில்வாலே துல்ஹனியாலே ஜாயங்கே ஆகிய படங்கள் தெலுங்கில் மொழி மாற்றப்பட்டு அங்கும் பெருவெற்றி பெற்றன. இதைத்தொடர்ந்து இந்தியில் ஷாருக்கான்-பூஜாபட் இணைந்து நடித்து வெற்றிபெற்ற சாஹத் என்ற இந்திப்படமும் தெலுங்கு பேசவுள்ளது.

## மினி சினி

* கமல் நடித்த... பிரபு-நக்மா நடிக்... முடிந்ததும், கார்த்...
* டி. ராஜேந்தர் த... பிள்ளைகள் சிலம்ப... முக்கிய வேடம் ஒ...
* கே.டி. குஞ்சுமே... அப்பாஸ் கதாநா... இயக்கவுள்ளார். ந... பணிபுரிந்தவர்.
* இளையராஜா... மலையாளப் படவு... கார்த்திக்ராஜா. ...
* கடைசியாக '... சுபாஷ்கை இயக்... இந்தப்படத்திற்கு ...
* கமல்-மீனா ந... ரவிக்குமார் அடுத்... இவற்றைத் தொ... இயக்கவிருக்கிறார்...
* இந்தியில் ஜா... படப்பிடிப்புக்கள்... வில்லனாக நடிக்... நியூசிலாந்து செல்...
* பாரதிராஜாவில... படவாய்ப்புக்கள் இ... இவர் மீண்டும் பார...
* 'கொடி பறக்... இசையமைத்தவர்... முறையாக கன்ன... பிரகாஷ்ராஜ் கத...
* 'சின்ன புள்ள'... மன்னன்' என்ற ப... விட்டது. தற்போது... நடிக்கத் திட்டமிட்...

www.padippakam.com

# அவுட்-கெட் அவுட்

காந்த் கடந்த தேர்தலின் பின்னர் அரசியல் பேசுவதைக் குறைத்துக் ர். ஆனால் சரத்குமார் அரசியலுடன் தன்னை ஆழமாக ஐக்கியப் ருகிறார்.

ழ்நாட்டில் விரைவில் உள்ளூராட்சி தேர்தல்கள் நடைபெறவுள்ளன. ர்தலில் "தி.மு.க, தமிழக மாநில காங்கிரஸ் கூட்டணி வெற்றி ப்பாடுபடுவோம்." என்று அறிக்கை விட்டுள்ளார் சரத்.

அதுமட்டுமல்ல கலைஞர் கருணாநிதி போல 'ஆனந்தம்' படத்தில் டிக்கவும் மறுத்துவிட்டார் சரத்குமார்.

மணிரத்னம் 'ஆனந்தம்' படத்தில் கலைஞரை இழுப்பது தி.மு.க. வட்டாரத்திலும் பிடிக்கவில்லை. அதனை அறிந்த பின்னர்தான் இயக்குநர் மணிரத்னம்மீது பாய்ந்து கண்டனப் பேட்டி கொடுத்தார் சரத்குமார்.

"மணிரத்னம் திமிர் பிடித்தவர். மற்றவர்களை மதிக்கத் தெரியாதவர். தான் கூப்பிட்டா எந்த நடிகரும் உடனே ஓடி வந்திடவேணும் என்று நினைக்கிறார் மணிரத்னம்." என்றெல்லாம் தமிழக பிரபல சஞ்சிகை ஒன்றுக்கு பேட்டி கொடுத்திருந்தார் சரத்.

தற்போது சரத் நடித்துவரும் 'நேதாஜி' படத்திலும் அரசியல் வெடிகளை வீசுகிறார் சரத்.

நேதாஜி படத்தில் ஒரு காட்சி. பெண்மந்திரியும் அவரது உயிர்த்தோழியும் பொலிஸ் படையுடன் வருகின்றனர். தொழிலாளர் சார்பாக நீதி கேட்க வருகிறார் சரத். பெண் மந்திரியைப் பார்த்து சவால்விடும் பாணியில் சரத்குமார் வசனம் பேசுவார். "உங்களுக்கு கட்-அவுட் வைத்த ஜனங்களை வைத்தே உங்களை கெட்-அவுட் சொல்ல வைக்கிறேன்" என்று பேசுவார் சரத்.

சரத்குமாரின் அரசியல் ஈடுபாடு எதிர்காலத்தில் அவர் தேர்தலில் குதிக்கு மளவுக்கு செல்லலாம் என்று சொல்லப் படுகிறது.

# டாக்டர் சாந்தி

அடிதடிப் படங்களில் நடித்துப் பழக்கப்பட்டவர் விஜயசாந்தி. இப்போது இந்தியில் அமிதாப்பச்சனுடன் நடித்துக் கொண்டிருக்கும் படத்தில் விஜயசாந்திக்கு ஒரு மாறுதலான பாத்திரம். டாக்டராக நடிக்கிறார்.

"அமிதாப்பச்சனுடன் நடிக்க வேண்டும் என்பது தான் நீண்ட நாள் கனவு. கனவு கைப்பட்டதில் உலகில் மிக சந்தோசமான பெண்ணாக மாறிவிட்டேன்." என்கிறார் விஜயசாந்தி. அமிதாப்புக்கு ஐஸ்.

# 'சுபாஷ்' ரெடி

விரைவில் திரைக்கு வரவுள்ள படம் 'சுபாஷ்.' அர்ஜுன்-ரேவதி நடிக்கும் சுபாஷ் படத்தின் படப்பிடிப்புக்கள் யாவும் முடிவடைந்துவிட்டன.

மென்மையான காதல், வன்மையான மோதல் 'சுபாஷ்' படத்தின் கதை அதுதான் என்கிறார் இயக்குநர் ஆர்.வி. உதயகுமார்.

அர்ஜுன்-ரேவதி காதல் காட்சிகள் நயமாகப் படமாக்கப்பட்டுள்ளதாம்.

# புதிய படம் செந்தூரம்

'காதல் கோட்டை' படத்தில் ரசிகர்களின் அமோக ஆதரவு வாக்குகளை பெற்றவர் தேவயாணி. ஆனால் 'சிவசக்தி' படத்தில் கவர்ச்சி காட்டி ஜொள்ளுப் பிரியர்களின் பேராதரவையும் பெற்றிருக்கிறார்.

சத்யராஜ், பிரபு நடித்த படம் 'சிவசக்தி' என்பதால் தாராளமாக நடிக்க ஒப்புக்கொண்டாராம் தேவயாணி.

தேவயாணி புதிதாக ஒப்பந்தமாகியுள்ள படம் 'செந்தூரம்'. மூன்று பெண்களுக்குள் ஏற்படும் போராட்டம்தான் கதை. தேவயாணிக்கு ஜோடியாக தினேஷ் என்னும் புது முகம் நடிக்கிறார். அவருக்கு தேவயாணிதான் கற்றுக் கொடுக்க வேண்டும்.

'செந்தூரம்' படத்தை இயக்குபவர் 'சங்கமன்.' இவர் பாரதிராஜாவின் உதவி இயக்குநர்களில் ஒருவராக இருந்தவர்.

இசை; இளையராஜா. பாடல்கள்: வாலி, பழநிபாரதி. கங்கை அமரன்.



# இந்தியில் ரகு

போதை மருந்து பழக்கத்தை சற்றே நிறுத்தியுள்ளார் ரகுவரன். இந்தியில் ஜாக்கி ஷெராப் தயாரிக்கும் படமொன்றில் நடித்துவருகிறார். இந்தியில் வரவேற்பு இருந்தால் அங்கு கால் பதித்துவிடுவார். இரண்டே இரண்டு விஷயங்களால்தான் ரகுவரன் அடிக்கடி கீழே விழுகிறார். போதை, மாது, அவைதான் அந்த இரண்டு.

# கோவிந்தா

'காதல் கோட்டை' படம் இந்தியில் தயாராகிறது. அஜித் நடித்த பாத்திரத்தில் கோவிந்தா நடிக்கிறார். தேவயாணிக்குப் பதிலாக கஜோல் நடிக்கிறார்.

சத்யராஜின் மனேஜர் ராமநாதன்தான் இந்தியில் தயாரிக்கிறார். முதலில் இந்தி உரிமையை சிவாஜியின் பட நிறுவனமே வாங்கியிருந்தது. பின்னர் அதனை ராமநாதனிடம் கைமாற்றிவிட்டனர்.



தர்

டம்

...க்காதா?

...சுந்தரை

...து பலமாக

# நடிகைகளுக்குப் பாதுகாப்பு

மும்பாய் நடிகைகள் சிலர் தங்கள் பாதுகாப்புக்கு வாட்டசாட்டமான இளைஞர்களை நியமித்திருக்கிறார்கள். பொது இடங்களில் ரசிகர்களின் தொல்லைகளில் இருந்து தப்புவதற்காகத்தான் இந்த ஏற்பாடு.

நடிகைகளைக் கண்டால் போதும் பலாப்பழத்தில் ஈ மொய்ப்பதுபோல ரசிகர்கள் கூடிவிடுகிறார்கள். சும்மா பார்ப்பதோடு நிறுத்திக் கொண்டால் பரவாயில்லை. கிள்ளுவது, தொடுவது என்று திணறவைத்து விடுகிறார்களாம்.

நடிகை ஊர்மிளாவுக்கு சமீபத்தில் ஒரு அனுபவம். தனது காரில் தனியாக கடைத்தெருவுக்கு போயிருக்கிறார். கண்களில் குளிர் கண்ணாடி மாட்டியிருந்தார். அப்படியிருந்தும் அவரை அடையாளம் கண்டு கொண்ட ரசிகர்கள் சூழ்ந்துவிட்டனர். சில துணிச்சலான ரசிகர்கள் அங்கே இங்கே தொட்டுப் பார்த்திருக்கிறார்கள். தப்பித்து வீடு போய் சேருவதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டதாம்.

இப்போது ஊர்மிளாவுடன் ஒரு இளைஞர் பாதுகாப்புக்குச் செல்கிறார். படப்பிடிப்பிலும் கூடவே இருக்கிறார்.

மும்பாய் நடிகர்களின் சோகம் என்ன தெரியுமா? நடிகைகளுக்கு ரசிகர்களால் தொல்லை. அதேயளவு தொல்லை ரசிகைகளாலும் ஏற்படுகிறது. 'ரசிகைகளும் கிள்ளுகிறார்களே. நாங்கள் எப்படிச் சமாளிப்பதாம்?' என்று கேட்கிறார்கள். நல்ல வாட்ட சாட்டமான பெண் பாதுகாவலர்களை நியமித்துப் பார்க்கலாமே!

# இலங்கைப் பிரதமரின் மகள் கடத்தல்!

தலைப்பைப் பார்த்ததும் உங்கள் புருவங்கள் உயர்ந்திருக்குமே! 'செல்வா' படத்தில் அப்படி ஒரு காட்சி வருகிறது. இலங்கைப் பிரதமரின் மகளாக ரீவா நடிக்கிறார்.

200 அடி நீர்வீழ்ச்சியில் இரண்டு மலைகளுக்கிடையில் கயிறு அமைத்து, அதன் நடுவே ஒரு கண்ணாடிக் கூண்டில் பிரதமரின் மகளை அடைத்து வைக்கிறார்கள்.

பிரதமரின் மகளை மீட்கப் புயலாகப் புறப்படுகிறார் கதாநாயகன் விஜய். வில்லன் கோஷ்டியோடு பயங்கரமாக மோதுகிறார் விஜய்.

இந்திய அரசியல் தலைவர்களை விட்டுவிட்டு, ஒரு வித்தியாசமாக இருக்கட்டுமேன் என்று இலங்கைப் பிரதமரின் மகள் என்று கதை பண்ணியிருக்கிறார்கள்.

# கஸ்தூரியின் விசிட்

எங்கே, எந்த சினிமா விழா நடத்தாலும் கூப்பிடாமலேயே தானாகவே போய் கலந்து கொள்கிறார் கஸ்தூரி. படுபயங்கரக் கவர்ச்சி உடையில் தான் செல்கிறார். தெரியாத வி.ஐ.பிக்களிடம் கூட தெரிந்தவர் போல பேச ஆரம்பித்து விடுகிறார். சமீபத்தில் 'இந்தியன்' படவிழாவில் அமிதாப்பச்சனைப் பார்த்ததும் ஓடிச்சென்று கால்மணி நேரத்திற்குமேல் அறுத்தார் கஸ்தூரி. பொறுமையிழந் அமிதாப், "உங்க பெயர் என்ன?" என்று கேட்க வேறு வழியில்லாமல் அங்கிருந்து நழுவினார்.

# வில்லனிக் ஹீரோ

சத்யராஜ்-ரம்பா நடிக்கவிருக்கும் 'உன்னை விடமாட்டேன்' என்ற படம் சமீபத்தில் பூஜை போடப்பட்டது. இந்தியில் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் 'அக்னி சாட்சி' என்ற படத்தின் ரீ-மேக்தான் இது. இந்தியில் நானா பட்டேகர் நடித்த வேடத்தில் சத்யராஜும், மனிஷா கொய்ராலா நடித்த வேடத்தில் ரம்பாவும் நடிக்கின்றனர். இதில் சத்யராஜிற்கு வில்லனிக் ஹீரோ வேடம்.



வினீத்-யுவராணி
படம் சக்தி

...ரசம்ஹாரம்' படத்தை இயக்கிய சித்ராலட்சுமணன், ...பாரிய தம்பி' படத்தை இப்போது இயக்கி வருகிறார். இது ...த்யராஜ் நடிக்கும் இரண்டு படங்களை இயக்கவுள்ளார்.

...ந்து இயக்கி வரும் 'இளங்காதலர்கள்' படத்தில் டி.ஆரின் ...குறளரசன் நடிக்கிறார்கள். இவர்களுடன் டி.ராஜேந்தரும் நடிக்கிறார்.

...தயாரிக்கும் 'கோடீஸ்வரன்' படத்தில் 'காதல் தேசம்' ...க நடிக்கவுள்ளார். இப்படத்தை நந்தகுமார் என்பவர் ...ார், நட்சத்திர இயக்குநர் பி. வாசுவிடம் உதவியாளராகப்

...தொடர்ந்து அவரது மகன் கார்த்திக் ராஜாவும் ...நுழைகிறார். 'வசந்தசேனா' என்ற மலையாளப்படத்திற்கே ...முறையாக இசையமைக்கிறார்.

...' என்ற இந்திப்படத்தில் நடித்த நக்மா இப்போது 'ஷிக்கார்' என்ற இந்திப்படத்தில் நடிக்கவுள்ளார். ...ரகுமான் இசையமைக்கிறார்.

... 'அவ்வை சண்முகி' படத்தை இயக்கிவரும் கே.எஸ். ...யகாந்த் நடிக்கும் 'தர்மச் சக்கரம்' படத்தை இயக்குவார். ...து அர்ஜுன் நடிக்கும் புதிய படமொன்றையும்

...ஷெரப் தயாரித்து நடிக்கும் 'க்ரஹன்' படத்தின் ...ம் நியுசிலாந்து நாட்டில் படமாக்கப்படவுள்ளன. இதில் ...குவரன் இப்படத்தின் படப்பிடிப்பிற்காக அடுத்தமாதம் ...ளார்.

...கருத்தம்மா' படத்தில் அறிமுகமானவர் ராஜஸ்ரீ. தமிழில் ...த இவர் சில தெலுங்குப் படங்களில் நடித்து வருகிறார். ...ஜாவின் இயக்கத்தில் புதிய படமொன்றில் நடிக்கவுள்ளார்.

... 'நாட்டுக்கொரு நல்லவன்' போன்ற படங்களுக்கு ...ட இசையமைப்பாளரான ஹம்சலேகா, இவர் முதன் ...ல் 'சக்கி' என்ற படத்தைத் தயாரிக்கிறார். இதில் ...னாக நடிக்கிறார்.

...ல் கதாநாயகனாக நடித்த சின்னி ஜெயந்த், 'பலகுரல் ...த் தொடங்கினார். படம் தொடங்கியவுடனேயே நின்று ...னி ஜெயந்த் மீண்டும் ஒரு படத்தில் கதாநாயகனாக ...ார்.

# 'வீரமடி நீ எனக்கு'

திட்டமிட்டு வெற்றிப் படங்களை தயாரிப்பதில் ஆர்.பி.சவுத்ரி கெட்டிக்காரர். சரத்குமார் நடிக்கும் 'சூர்ய வம்சம்' என்னும் புதிய படத்திற்கு பூஜை போட்டுள்ளார் ஆர்.பி.சவுத்ரி. 'சூர்ய வம்சம்' படத்தை இயக்கப் போவது விக்ரமன்.

அதுதவிர கார்த்திக்-தேவயாணி நடிக்கும் படம் ஒன்றுக்கும் சூட்டோடு சூடாக பூஜை போட்டுள்ளார் சவுத்ரி. படத்தின் பெயர்; 'வீரமடி நீ எனக்கு'. இதனை இயக்குபவர் சண்முகவேலு. இவர் இயக்குநர் பாக்யராஜின் சீடர்.

# ரஜினிக்குப் பிடிக்காதது

ரஜினியின் 'முத்து' படத்தை கே.எஸ்.ரவிக்குமார் இயக்கியதற்கும், இப்போது கமல் நடிக்கும் 'அவ்வை சண்முகி' படத்தை இயக்குவதற்கும் நிறைய வித்தியாசங்கள். படப்பிடிப்புத் தளத்தில் யாரையாவது கெட்ட வார்த்தையால் ரவிக்குமார் திட்டினால் ரஜினிக்குப் பிடிக்காது. ரஜினி அழைத்து கண்டித்து விட்டதால் கப்சிப்பென்று இருந்தார் ரவிக்குமார். ஆனால் 'அவ்வை சண்முகி' படப்பிடிப்பில் சரமாரியாக ரவிக்குமார் கெட்ட வார்த்தைகளால் உதவியாளர்களைத் திட்டிக் கொண்டிருக்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com

# மூக்கில் குணம் காணலாம்

ஒருவருடைய மூக்கைப் பக்கவாட்டில் பார்த்து அவருடைய குணம் இன்னவிதமாக இருக்கும் என்பதைக் கூறலாம். குறுகியும், நீண்டும், குட்டையாகவும் பலவிதங்களில் மூக்கு அமைந்திருக்கும்.

சிலையில் செதுக்கியது போன்ற நீண்ட மூக்கினைக் 'கிரேக்கர்கள் மூக்கு' என்று கூறுவார்கள். இத்தகைய அமைப்புக் கொண்டவர்கள் செய்கின்ற எல்லாக் காரியத்திலும் நேர்த்தி காணப்படும். ஆனால் இவர்கள் மற்றவர்களை மதிக்காதவர்கள். யாருடனும் நெருக்கமாகவும், நட்புறவுடனும் இருக்க முடியாதவர்கள். ஆயினும் அவருடன் தொடர்பு கொண்டவர்களின் மதிப்பைப் பெற்றவர்களாக இருப்பார்கள்.

வளைந்து அமைந்த மூக்கினை 'ரோமானியர் மூக்கு' என்று சொல்வதுண்டு. இத்தகைய மூக்கைக் கொண்டவர்கள் அதிகார முறைக்கு ஆசைப்படுபவர்களாக இருப்பார்கள். தங்களுடைய பொறுப்பைத் தட்டிக் கழிக்க மாட்டார்கள். இதன் காரணமாக தன்னுடன் இருப்பவர்களின் உணர்வுகளைக் கூட மதிக்க மாட்டார்கள்.




சிலருக்குப் பெரியதாகவும், தொங்குவது போலும் மூக்கு இருக்கும். இவர்கள் எல்லோராலும் வெறுக்கப்படுபவர்கள். கசப்பு உணர்வு மிக்கவர்கள்.

தூக்கலாக மூக்கு அமைந்திருப்பவர்கள் இதற்கு நேர் மாறானவர்கள். இவர்கள் எல்லோராலும் விரும்பப்படுகிறவர்கள். பிறருக்கு மகிழ்ச்சி ஊட்டக் கூடியவர்கள். தமக்குத் தோன்றியபடி செயற்பட்ட போதும், பிடிவாத குணம் இராது. கட்டை குட்டையான மூக்கு கவிதா மனப்போக்கை வெளிப்படுத்துகிறது. நடைமுறை வாழ்க்கையின் தன்மையை இவர்கள் அறியாதவர்கள் அல்ல. ஆயினும் கற்பனையில் மிதந்து கொண்டிருப்பார்கள். நல்ல நகைச்சுவை உணர்வு கொண்டவர்கள். ஆனால் கேலி செய்து பிறர் மனதைப் புண்படுத்த மாட்டார்கள். எந்தக் கஷ்டத்தையும் சமாளிக்கக் கூடியவர்கள். எப்போதும் நண்பர்களுக்கு உதவியானவர்களாக இருப்பார்கள்.

மூக்குத் துவாரங்கள் நன்கு திறந்திருக்கிறதா அல்லது மூடியவாறு இருக்கிறதா என்பதும் ஒருவருடைய குணத்தை வெளிப்படுத்தும். திறந்தவாறு இருந்தால் அவர்கள் உணர்ச்சி மிக்கவர்கள். மற்றவர்கள் இதற்கு மாறானவர்கள். தனிமையை விரும்புபவர்கள்.

# அழகு + ஆரோக்கியம்

## வெள்ளரிக்காயின் விசேஷம்



வெள்ளரிக்காய்-பச்சையாகவும், பக்குவப்படுத்தியும் சாப்பிடக் கூடியது. கோடை காலத்தில் உடலில் ஏற்படும் உஷ்ணத்தைத் தணித்து, குளிர்ச்சியைத் தருகின்ற வெள்ளரிக்காயில், பிஞ்சுவெள்ளரி மிகவும் சிறந்தது எனலாம். உணவாக உட்கொண்டாலும் சரி, அழகுக்காக மேனியில் பயன்படுத்தினாலும் சரி, மிக எளிதில் அதன் நன்மைகளைப் பெறலாம். வெள்ளரி பிஞ்சாக, நல்ல பச்சை நிறத்துடன் வாடாமல் இருக்க வேண்டும். அதைத் தோலோடு சிறு சிறு வில்லைகளாக நறுக்கி அப்படியே சாப்பிடலாம். சிறுகுழந்தைகள்கூட இதை விரும்பி உண்பார்கள். நீர்ச்சத்து நிறைந்த வெள்ளரிக்காயை விதம் விதமாகப் பயன்படுத்தலாம்.

**வெள்ளரி யோகட் சாலட்:**

வெள்ளரிக்காயைச் சிறு துண்டுகளாகவோ அல்லது துருவலாகவோ செய்து கொள்ள வேண்டும். கெட்டித் தயிரைத் தண்ணீர் விடாமல் நன்றாகக் கடைந்து வைத்து அதில் சிறிதளவு தேங்காய், ஒரு பச்சைமிளகாய், சிறிது கடுகு இவற்றை நைசாக அரைத்துக் கலக்கவும். வெள்ளரிக் காய்த்துண்டுகளில் உப்புத் தடவி சிறிது நேரம் ஊறிய பின்பு, இதையும் தயிரில் கலக்கவும். இந்த சாலட்டைத் தினமும் ஒரு வேளை பெரியவர், குழந்தைகள் அனைவரும் 50 கிராம் சாப்பிட்டால் உடல் உஷ்ணம் தணிந்து, உஷ்ணம் தொடர்பான நோய்கள் வராமல் காக்கும். வயிறு சுத்தமாகும்.

**வெள்ளரி டேட்ஸ்:**

வெள்ளரியின் முழுப் பயனையும் பெற அதனைப் பேரீச்சம்பழத்துடன் சாப்பிட வேண்டும். வெள்ளரித் துண்டுகளுடன் பேரீச்சம்பழத்தின் கொட்டைகளை நீக்கி, சிறு துண்டுகளாக்கிக் கலந்து சாப்பிடலாம். பேரீச்சம்பழத்தைச் சிறு அளவு உப்புச் சேர்த்து நைசாக அரைத்து அத்துடன் சிறிது எலுமிச்சைச் சாறு கலந்து வெள்ளரித் துருவல் சேர்த்தும் சாப்பிடலாம். வெள்ளரியை நறுக்கியவுடன் சாப்பிட வேண்டும். கண்கள் ஒளி பெறும், தலை முடி செழித்து வளரும்.

மேனியின் பளபளப்புக்கும், வெளுப்புக்கும் கூட வெள்ளரி துணை செய்கிறது. சற்று மாநிறமாக உள்ள பெண்கள் தினந்தோறும் வெள்ளரியின் சாற்றை எடுத்து முகத்தில் தடவி வர வேண்டும். முகத்தில் ஈரப்பசை காயக் காய, சாற்றை மேலும் மேலும் தடவி அரைமணி நேரம் போல ஆனதும், பயத்தம் மாவு கொண்டு குளிர்ந்த அல்லது வெதுவெதுப்பான நீரில் கழுவினால், மாநிறம் பொலிவு பெற்றுச் சற்றுச் சிவக்கத் தொடங்கும். வெள்ளரிச்சாற்றைப் பாலுடன் கலந்தும் பருகலாம்.

அதிக செலவில் அழகு சாதனப் பொருட்களை வாங்கிப் பயன் படுத்துவதை விடவும், பச்சை வெள்ளரி அதிக பயனைத் தரும்.

# வாரம் ஒரு இயற்கை வைத்தியம்

## காய்ச்சல்

பொதுவாகக் காய்ச்சல்- அஜீரணம், உடலில் அதிக சூடு, அந்நியப் பொருட்கள் உடலில் அதிகத் தேக்கம் ஆகிய காரணங்களால் ஏற்படுகிறது.

__காலை 5 மணி:__

மூன்று முதல் ஆறு தம்ளர் நீர் அருந்தலாம்.

__காலை 6 மணி:__

ஆவாரம் பூ சாறு, வல்லாரை இலைச் சாறு, இலந்தை வேர்க்கசாயம் ஏதேனும் ஒன்று அருந்தலாம்.

__காலை 9 மணி:__

தோடம்பழச்சாறு அருந்தலாம்.

__காலை 11 மணி:__

திராட்சைப் பழச்சாறு அருந்தலாம்.

__மதியம் 1 மணி:__

எலுமிச்சம் பழச்சாறு தேன்கலந்தோ அல்லது கலக்காமலோ அருந்தலாம்.

__மதியம் 3 மணி:__

மங்குஸ்தான் பழம் உண்ணலாம். அல்லது மங்குஸ்தான் பழச்சாறு அருந்தலாம்.

__மாலை 5 மணி:__

மாதுளம் பழம் உண்ணலாம். அல்லது மாதுளம்பழச்சாறு அருந்தலாம்.

__இரவு 7 மணி:__

வாழைப்பழம் அல்லது அப்பிள் உண்ணலாம். அல்லது பழச்சாறு அருந்தலாம்.

__பொது:__

காய்ச்சல் தணியும் வரை நாள்தோறும் எனிமா எடுத்தல் அவசியம். அடிவயிற்றிலும், நெற்றியிலும் ஈரக்களிமண் பட்டி, ஈரத்துணிப்பட்டி ஆகியவற்றைக் காய்ச்சல் குணமாகும் வரை மாற்றி, மாற்றிப் போட வேண்டும். இரண்டு அல்லது மூன்று நாட்களில் காய்ச்சல் தணிந்து விடும்.

இது போன்றே டைபோயிட் காய்ச்சல் முதலிய அனைத்துக் காய்ச்சல்களுக்கும் பின்பற்றினால், காய்ச்சல் சில நாட்களில் மருந்து, ஊசி இல்லாமல் தணிந்து விடும்.

# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது சுகந்தினி

## வெண்பொங்கல்

தேவையானவை:

| | |
|---|---|
| பச்சை அரிசி | - 1 1/2 ஆழாக்கு |
| பாசிப்பருப்பு | - 1/2 ஆழாக்கு |
| நெய் | - 2 கரண்டி |
| இஞ்சி | -1 சிறு துண்டு |
| முந்திரிப் பருப்பு | -8 |
| மிளகு, சீரகம் | - 1 கரண்டி |
| கறிவேப்பிலை | -1 சிறு நெட்டு |
| உப்பு | -அளவாக |

செய்முறை:

பாசிப்பருப்பு, அரிசி இரண்டையும் கலந்து நன்றாக தேய்த்துக் களைந்து கல் அரித்து நன்கு குழைய வேக வைக்கவும். கொஞ்சம் தளர குழைந்து இருக்க வேண்டும். மிளகு சீரகத்தை நெய்யில் வறுத்துப் பொடி செய்து, முந்திரிப் பருப்பை ஒன்றிரண்டாக ஒடித்து நெய்யில் வறுத்து, இஞ்சியைப் பொடிப்பொடியாக நறுக்கி, கறிவேப்பிலையையும் கிள்ளி, எல்லாவற்றையும் குழைந்த சாதத்தில் போட்டு, தேவையான உப்புப் போட்டுக் கிளறவும். அவரவர் தேவைக்கேற்ப நெய் சேர்த்துக் கொள்ளலாம்.

# லேடீஸ் ஸ்பெஷல்

## ஊறுகாய் கெடாமல் இருக்க

ஊறுகாயை அதிக அளவில் போட்டு வீட்டில் வைத்துக் கொள்வார்கள். கொஞ்ச நாட்கள் கழித்து ஊறுகாய் பூஞ்சனம் பிடித்து விடும். இந்தப் பூஞ்சனம் ஊறுகாயின் மேல் பகுதியை மட்டும்தான் பாதிக்கிறது. எனவே ஒட்டுமொத்த ஊறுகாயையும் தூக்கி எறிய வேண்டிய அவசியம் இல்லை. பூஞ்சனம் பிடித்த பகுதியை மட்டும் எடுத்து எறிந்து விட்டு மீதமுள்ள பகுதியை அடுப்பில் வைத்துக் கொஞ்சம் எண்ணெய் ஊற்றி வதக்க வேண்டும். சிறிது நேரம் கழித்து வெளியே எடுத்துக் கண்ணாடிப் போத்தலில் போட்டு வைத்தால் ஊறுகாய் கெட்டுப் போகாது.

# இந்தியாவில் அவுஸ்திரேலிய அணி



அடுத்த மாதம் இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணிக்கு மார்க் டெய்லர் மீண்டும் கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். அவுஸ்திரேலிய அணியில் ஷேன் வோணும் சேர்க்கப்பட்டுள்ளார்.

இலங்கையில் நடைபெற்ற சிங்கர் கோப்பைப் போட்டியில் கலந்து கொண்ட அவுஸ்திரேலிய அணியில் காயம் காரணமாக இவர்கள் இருவரும் விளையாடவில்லை. இதனால் சிங்கர் கோப்பைப் போட்டிக்கு மார்க் டெய்லருக்குப் பதிலாக விக்கெட் காப்பாளரான இயன் ஹீலி தலைமை தாங்கினார்.

முதுகுவலி காரணமாக அறுவைச் சிகிச்சை மேற்கொண்ட மார்க் டெய்லரும், வலது கை விரலில் ஏற்பட்ட காயம் காரணமாக சுழற் பந்து வீச்சாளர் ஷேன் வோணும் ஓய்வில் இருந்தனர்.

14 பேர் அடங்கிய அவுஸ்திரேலிய அணி ஒக்டோபர் மாதம் 1ம் திகதி இந்தியா செல்கிறது. அங்கு ஒக்டோபர் 10ம் திகதி முதல் 14ம் திகதி வரை நடைபெறும் 'போடர்-கவாஸ்கர்' கிண்ணத்திற்கான ஒரு டெஸ்ட் போட்டியிலும் இந்தியா, தென்ஆபிரிக்கா அணிகளுடன் தென்னாபிரிக்காவில் நவம்பர் மாதம் நடைபெறும் சர்வதேச ஒரு நாள் போட்டிகளிலும் கலந்து கொள்கிறது.

# ஸ்போர்ட்ஸ்

## பட்டியலில் முதல் பத்துப்பேர்

அமெரிக்க ஓப்பன் டென்னிஸ் போட்டி முடிவுகளைக் கணக்கில் கொண்ட புதிய டென்னிஸ் வீரர்கள் வரிசைப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. உலக டென்னிஸ் சங்கம் வெளியிட்டுள்ள அந்தப்பட்டியலில், ஆடவர் பிரிவில் பீட் சாம்பிரஸும் மகளிர் பிரிவில் மோனிகா செலஸ்- ஸ்டெபி கிராஃப் இருவரும் கூட்டாகவும் முதல் இடத்தில் இருக்கின்றனர்.

முதல் 10 வீரர், வீராங்கனைகளின் வரிசைப்பட்டியல், பெயர் நாடு போன்ற விபரங்கள் வருமாறு:



பீட் சாம்பிரஸ்

__ஆண்கள்__

1. பீட் சாம்பிரஸ்- அமெரிக்கா
2. மைக்கல் சாங்- அமெரிக்கா
3. தோமஸ் மஸ்டர்-ஒஸ்ரியா
4. கோரன் இவானி செவிக்-குரோஷியா
5. கபெல் நிக்கோவ்- ரஷ்யா
6. போரிஸ் பெக்கர்-ஜெர்மனி
7. பெரைரா- தென் ஆபிரிக்கா
8. கிராவிசெவிக்-நெதர்லாந்து
9. ஆன்ட்ரே அகாசி- அமெரிக்கா
10. மார்செலோ ரியால்-சிலி



மோனிகா செலஸ்

__பெண்கள்__

1. மோனிகா செலஸ்- அமெரிக்கா
2. ஸ்டெபி கிராஃப்-ஜெர்மனி
3. அரன்ட்சா சாஞ்சஸ்- ஸ்பெயின்
4. கொன்ஜிதா மார்ட்டினஸ்- ஸ்பெயின்
5. இவா மஜோலி- குரோஷியா
6. ஆங்கே ஹுபர்-ஜெர்மனி
7. லின்ட்ரே லீவன்போட்- அமெரிக்கா
8. ஜனா நவோட்னா- செக் குடியரசு
9. கிமிகோடட்-ஜப்பான்
10. மேரிஜோ பெனான்டஸ்-அமெரிக்கா.

# டிப்ஸ்

மண்ணெண்ணெய் அடுப்பு (ஸ்டவ்) நன்றாகப் பிரகாசித்து எரிய வேண்டுமா? ஸ்டவ்வில் தேவையான அளவு மண்ணெண்ணெய் ஊற்றிய பிறகு, அதில் ஒரு சின்ன கற்பூரக் கட்டியைப் போட்டு விடுங்கள். பிறகு பாருங்கள் ஸ்டவ் எப்படிப் பிரகாசமாக எரிகிறது என்று.

* * *

அவசரமான வீட்டு உபயோகங்களுக்கு இரும்பு ஆணிகள், ஸ்குரு ஆணிகள், நட்டுக்கள் போன்றவற்றை ஒரு டப்பாவில் போட்டு வைத்திருப்பீர்கள். சில நாட்கள் கழித்து அதை, எடுத்துப் பார்த்தால் வெள்ளிக்கம்பிகளாக இருந்தவைகள் எல்லாம் துருப்பிடித்திருக்கும். இதைத் தவிர்க்க அந்த டப்பாவுக்குள் ஒரு சின்ன அடுப்புக் கரித்துண்டைப் போட்டு வைத்தால் போதும். துருப்பிடிக்காது.

* * *

சில நாட்கள் உபயோகிக்காத பூட்டுக்கள் திறக்க முடியாமல் மக்கர் பண்ணும். அப்பொழுது பொதுவாக எல்லோரும் பூட்டுத் துவாரத்தில் எண்ணெய் ஊற்றுவார்கள். அந்த எண்ணெய் ஊற்றிய அடுத்த நிமிடமே எண்ணெய்க் கீழே வழிந்து ஒழுகும். இதைத் தவிர்க்க, சாவியை எண்ணெயில் தோய்த்துப் பிறகு, மெதுவாக இரண்டு மூன்று முறை பூட்டுத் துவாரத்திற்குள் செலுத்திப் பாருங்கள். சுலபமாகத் திறக்கும் எண்ணெயும் சிந்தாது.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்



மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

வாரம் ஒரு பட்டுச் சேலை AI

பெயர்:..........................

முகவரி:..........................

..........................

கையொப்பம்:..........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 28-09-1996

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

## களுத்துறை வாசகிக்கு அதிஷ்டம்

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

**பாத்திமா பஜீலா**
32 கலீல் பிளேஸ், களுத்துறை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


# பரிசு 50 இலட்சம்

ஜெர்மனியில் உள்ள கோப்லன்ஸ் என்ற இடத்தில், உலகிலேயே சிறந்த மொடல் அழகியைத் தேர்ந்தெடுக்கும் போட்டி நடந்தது.

இதில் தேர்வு பெற்றவர் டொமினிக்கன் குடியரசைச் சேர்ந்த செல்னிஸ் மென்டஸ் என்ற அழகி. சிறந்த மொடல் அழகியாகத் தெரிவு செய்யப்பட்ட இவருக்கு ரூபாய் 50 இலட்சம் பரிசாகக் கிடைத்தது.



50 இலட்சம் வென்ற பூரிப்பில் வெற்றிக் கிண்ணத்துடன் உற்சாகமாகக் காட்சி அளிக்கிறார் செலினிஸ் மென்டஸ்.



படிப்பகம்

www.padippakam.com

## யாருக்கு என்ன கவலை.....?

பரந்தன் நகரின்
காய்ந்த சாலைகளில்
கானல் நீருக்கிடையில்
அவளைக்
க்டைசியாய்க் கண்ட ஞாபகம்!
••
கிளிநொச்சி ஷெல் மழையில்
அகப்பட்டுத் தப்பியதாய்
யாரோ சொன்னார்கள்!
••
வவுனியா அகதிகளுள்
சோமாலியாத் தோற்றத்தோடு
அவள் ஒடுங்கிப்போய்
நின்றதாக முருகேசு சொன்னார்!
••
காக்கிகளின் கேள்விகளைக் கேட்டு
பயத்தில் நடுங்கியதாகவும்
நிருபர்களின் கேள்விகளைக் கேட்டுக்
கவலையில் அழுததாகவும்
கதை வந்தது.
••
இருப்பினும்,
நான் அவளை
இன்றுவரை காணவில்லை.....
••
ஒரு காலத்தில்
வீட்டு முற்றத்திற்குக்கூட
அவளைத்
தனியாக அனுப்பாத நான்,
இன்று இதயத்திற்குத்
தீவைத்துவிட்டு
விழிகளால் கதறிக்கொண்டிருக்கிறேன்!
••
எனக்கு வரும்
கடிதங்களில்கூட
அவளைப் பற்றி
ஒரு வரி எழுத யாரும் இல்லை.
அவள் எனது
தாயாகவோ, மனைவியாகவோ
அல்லது என் தங்கையாகவோ
இருக்கலாம்;
இதில்
யாருக்கு என்ன கவலை இருக்கிறது?

எம். சுரேஷ்.

## இன்றேனும் நிகழ்ந்திட...

முன் நூறு மைல் கடந் தென்
மண் மீது தடம் பதித் தோர்
பண் பாடி மகிழ்ந் திடவும் ஆசை! –அது
இன் றேனும் நிகழ்ந் திடவும் ஆசை!

செம் பாட்டுத் தரை பிளந் தோர்
நெம் போட்டிப் பயிர் விளைத் தார்
அம் மானைப் பணிந் திடவும் ஆசை!–பாடி
எம் பாவம் களைந் திடவும் ஆசை!

காற் றாடக் கால் மிதித் தூர்
பார்ந் தோடி சைக்கிளில் நான்
வேர்த் தாழிக் கரையிறங்க ஆசை! –நண்பர்.
சேர்த் தாடிக் குளித் திடவும் ஆசை!

கொல் கின்ற அணி மாந்தர் யாரும்
இல்லா அந் தேசத்தில் நானும்
சில் வண்டாய்ப் பிறந்திடவும் ஆசை!–பூவில்
செல் வங்கள் பருகிடவும் ஆசை!!

மாவை வரோதயன்

## செப்டம்பர்

உன்–
துளிர்த்த இளமையில் இருந்து,
ஒரு பூ விழுகிறது
இன்று.
•••
முன்பு மரணித்த காலங்களில்,
நீ எனக்குரியவள்,
என்ற கரிப்பு;
தொண்டைக்குள் கிடந்தது
மீன் முள்ளாய்!
•••
வரும் ஆண்டில்
நீ மதர்ப்புடன்
பூத்திருப்பாய்
ஒரு புதுத் தண்டில்.
•••
எனினும்,
'செப்டம்பர்'கள்
இனியும் வரும்,
உனக்கு வாழ்த்துக்கள் இருக்காது.
•••
ஏற்றுக் கொள்!
"வாழ்த்துக்கள்" என்பது–
பிறந்ததற்கு மட்டுமல்ல;
நீ–"வாழ்வத"ற்கும் சேர்த்துத்தான்!

கயா

## தீராத தி.ட்.ட.ம்

கட்டி முடிக்கத்
தெரியாத காதலுக்காய்
அத்திவாரம் இட்ட
காதலன் நான்!!
இடிக்கவும் இஷ்டமில்லாமல்
முடிக்கவும் வக்கில்லாமல்
வாய் புலம்பிக் கொண்டலையும்
காதல் வயோதிபன் நான்!

சபா–செல்வஜோதி, பொத்துவில்.

## ஓ... இதயமே!

உதிரம் உறைந்திற்று!
கோரமுகச் சாயல்
குறிபார்த்து
குதறியது.
**
என் சோகம்
அழுத இரவில்
நானும் எழுந்து
உட்கார்ந்தேன்.
**
பெரிய ஆலமரம்
முறிந்து விழுந்தது;
என்னிதயத்தில்
ஓங்கி ஒரு
கொப்பு குத்திக் கிழித்தது.
**
கறுத்த வைரவர்
நாயேறி வந்தென்
அடிவயிற்றில்
சூலாயுதம் எறிந்தார்.
**
பனை முறிந்தது;
மண் கிளம்பிற்று;
தொண்டமானாற்று
விஞ்ஞான கூடத்தில்
அணு ஆயுதம்
வெடித்தோய்ந்தது.
**
என் வீடே
அலைக்கழிந்து போனது;
கண்ணரித்த இரவில்
கசக்கி ஒளிபார்த்தேன்!
நிலா காய்ந்தது,
மனைவி இருமினாள்,
கனவு வந்து போனது.

மானுடபுத்ரன்.

## நெஞ்சுக்குள் நீ

காதலிக்க எங்கே
கற்றுக் கொண்டது
இந்தக்
கள்ள மனம்....?
**
பொந்துக்குள் புகுந்த
உடும்பாய்......
நெஞ்சுக்குள்....நீ
**
உனக்கென்ன ஒய்யாரி....!
அக்கினியை 'வார்த்துவிட்டுப் போவாய்!
வேகித் தவிக்கும்
வேதனைகளை;
விழி வீச்சால் விசாரிப்பாய்.....!
ஓரக்கண்ணால்;
உலகையும் உருட்டுவாய்...!
**
உதைபட்டும் மிதிபட்டும்
உன் பாட்டுக்குத்தானே
இன்னமும் ஆடுகிறது
என் இதயம்....?

மண்டூர்தேசிகன்.

## தேன் கிண்ணம்

### காதலித்ததன் பின்னால்....

காத்திராமல்
கால் வலிக்கும்...
0•0
கதைத்திராமல்
கண்கள் பேசும்.....
0•0
தூக்கம்...
தூரத்திலிருக்கும்....
0•0
நினைவுகள்
மலர்ந்திருக்கும்....
0•0
தேங்கித் தேங்கி
அன்பு ஊற்றெடுக்கும்....
0•0
வானம் வெளுத்திருக்கும்
பூமி நனைந்திருக்கும்....
0•0
தினம் தோறும்
ஆவாரம் பூ மலரும்.....
0•0
காணும் முகமெல்லாம்
காதலியைப் போலிருக்கும்.....
0•0
பொல பொல வென்று
பாசம் பெருக்கெடுக்கும்.....
0•0
தூங்காமல்
கனவு வரும்....
0•0
ஆக மொத்தத்தில்
பைத்தியம் பிடித்துவிடும்....

என். சஹாப்தீன்- ஓட்டமாவடி.

## சிக்கல்

இது
யாருக்கு யார்
போட்ட முடிச்சு?
**
உனக்கு நான்
எனக்கு நீ
அல்லது
எனக்கு நான்
உனக்கு நீ....!
**
எம்மை அறியாது–
அறிவிக்கப்படாது
முடிச்சு
மெல்ல இறுகும்;
இறுக்கப்படும்!
**
என்ன நடந்தது...?
நடக்கிறது....?
நடக்க போகிறது...?
யாருக்கு யார்
சொல்வது....?
**
முகம் பார்த்ததிற்காய்
சிரித்துக் கொள்வோம்.
**
கனவுகளில்
அமுதமழை
பொழிவதாக
பேசிக் கைகுலுக்கி
கொள்வோம்.
**
வார்த்தைகள்
விஷம் கொட்டும்!
**
ஏன் என்றால்,
இது
நடைமுறை
உலகம்.
**
நாங்கள்
மகாத்மாக்கள் அல்ல;
மனிதர்கள்!


சுபா வரன், கண்டி.

## அந்த நாள் ஞாபகம்



↑ சிவாஜிகணேசனின் இளமைத் தோற்றம். என்ன ஒரு அழகு! சிவாஜிக்கு தமிழ்நாட்டுக்கு நிகராக இலங்கையிலும் இரசிக, இரசிகைகள் ஏராளம். இங்குள்ள படத்தில் சிவாஜியின் அணைப்பில் இருப்பவர்களில் முரசு வாசகர்களுக்கு வேண்டப்பட்டவர்- அதாகப்பட்டது, முரசின் உதவி ஆசிரியர் இரா. பத்மநாதன் (இடதுபுறம் கையில் பையுடன்) வலதுபுறம் இருப்பவர் மட்டக்களப்பு முன்னாள் எம்.பி.இராசதுரை.

↓ புகழ்வாய்ந்த மன்னர்கள் சேர, சோழ, பாண்டியர்! மூவேந்தர்கள் என்றும் சொல்வார்கள். அதுபோல தமிழ் சினிமா வரலாற்றில் மூவேந்தர்கள் எம்.ஜி.ஆர்., சிவாஜி, ஜெமினி. மூவரும் ஒரே படவிழாவில் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்தான் இது.





← உலகப் பத்திரிகைகளிலும் சமீபத்தில் புகழ்ந்து பேசப்பட்ட நம்நாட்டு விளையாட்டு வீரர் அரவிந்த டி சில்வா. சிறுவயதில் அரவிந்த டி சில்வாவின் அழகிய தோற்றம் அசத்தலாக இருக்கிறதல்லவா?



## இந்த வாரம் உங்கள் பலன்

(22.09.96 தொடக்கம் 28.09.96 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 மணி |
| திங்கள்- கடன் தொல்லை, மனக் கலக்கம். | பகல் | 12 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, மனக் கிலேசம். | பி.ப. | 4 மணி |
| புதன்- பெரியோர் பகை, தேகசுகம் பாதிப்பு. | மு.ப. | 10 மணி |
| வியாழன்- உறவினர் பகை, மனப் பயம். | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- பொருள் விரயம், காரிய சித்தி. | பி.ப. | 3 மணி |
| சனி- தொழில் சிறப்பு, காரிய சித்தி. | மு.ப. | 10 மணி |

அதிஷ்டநாள்- வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-2

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | மு.ப. | 9 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, பணவரவு. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, காரியானுகூலம். | பகல் | 11 மணி |
| புதன்- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பி.ப. | 2 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | மு.ப. | 10 மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, தேகசுகம் பாதிப்பு. | மு.ப. | 9 மணி |
| சனி- உறவினர் பகை, மனக் கிலேசம். | காலை | 8 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, இனசன நன்மை. | பகல் | 12 மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், பொருள் வரவு. | மு.ப. | 10 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, தொழில் விருத்தி. | பகல் | 11 மணி |
| புதன்- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. | 2 மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், அந்நியர் உதவி. | பி.ப. | 1 மணி |
| வெள்ளி- பெரியோர் பகை, மனக் கசப்பு. | காலை | 10 மணி |
| சனி- பயனற்ற செயல், மனக் குழப்பம். | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. | 2 மணி |
| திங்கள்- வீண் குறை கேட்டல், மனக் கலக்கம். | மு.ப. | 10 மணி |
| செவ்வாய்- பொருள் வரவு, காரியானுகூலம். | பகல் | 1 மணி |
| புதன்- முயற்சி பலிதம், அந்நியர் உதவி. | பகல் | 11 மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும். | பகல் | 12 மணி |
| வெள்ளி- மன மகிழ்ச்சி, காரியானுகூலம். | பி.ப. | 2 மணி |
| சனி- தொழில் விருத்தி, அந்நியர் உதவி. | மு.ப. | 10 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, காரிய சித்தி. | பி.ப. | 2 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, கௌரவம். | மு.ப. | 9 மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 மணி |
| புதன்- தொழில் மந்தம், அந்நியர் உதவி. | மு.ப. | 10 மணி |
| வியாழன்- மன மகிழ்ச்சி, புதியதொழில் முயற்சி. | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- காரியானுகூலம், தொழில் விருத்தி. | பி.ப. | 2 மணி |
| சனி- பொருள் விரயம், மனப் பயம். | பி.ப. | 1 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-7

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கன்னி | - சூரியன், இராகு. |
| தனு | - வியாழன். |
| மீனம் | - சனி, கேது. |
| கர்க்கடகம் | - செவ்வாய், வெள்ளி. |
| சிம்மம் | - புதன். |

சுபநேரம் புதிய நேரப்படி கணிக்கப்படுகிறது

சந்திரன்- மகரம், கும்பம், மீனம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பொருள் நஷ்டம், வீண் கலக்கம். | பி.ப. | 1 மணி |
| திங்கள்- அந்நியர் சகவாசம், மன மகிழ்ச்சி. | பகல் | 11 மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, செய்தொழில் நஷ்டம். | பகல் | 12 மணி |
| புதன்- கடன் தொல்லை, நிலைப் பிரிவு. | பி.ப. | 2 மணி |
| வியாழன்- வீண் அலைச்சல், மன அமைதி குன்றும். | பகல் | 11 மணி |
| வெள்ளி- மனக் கலக்கம், தொழில் மந்தம். | பி.ப. | 1 மணி |
| சனி- புதிய முயற்சி, பெரியோர் உதவி. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- உறவினர் பகை, காரியக் கேடு. | பி.ப. | 3 மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, காரியானுகூலம். | பகல் | 12 மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், பொருள் வரவு. | பி.ப. | 2 மணி |
| புதன் - வீண் தொல்லை, மனக் கலக்கம். | மு.ப. | 10 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. | 3 மணி |
| வெள்ளி- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | மு.ப. | 9 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- வெளியிட வாழ்க்கை, மனக்குறை நீங்கும். | பி.ப. | 2 மணி |
| திங்கள்- அந்நியர் சகவாசம், புதிய முயற்சி. | மு.ப. | 10 மணி |
| செவ்வாய்- மனக் கலக்கம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 1 மணி |
| புதன்- காரியானுகூலம், பொருள் வரவு. | காலை | 8 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பகல் | 12 மணி |
| வெள்ளி- வீண் பகை, அந்நியரால் தொல்லை. | மு.ப. | 9 மணி |
| சனி- பிரயாணக் கஷ்டம், மனக் கலக்கம். | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. | 3 மணி |
| திங்கள்- இனசன நன்மை, அந்நியர் உதவி. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- வீண்குறை நீங்கும், முயற்சி பலிதம். | மு.ப. | 10 மணி |
| புதன்- தொழில் விருத்தி, பயனுள்ள செயல். | பி.ப. | 3 மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 மணி |
| வெள்ளி- உறவினர் உதவி, கௌரவம். | பகல் | 12 மணி |
| சனி- பெரியோர் உதவி, காரியானுகூலம். | பி.ப. | 2 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், வீண் கலக்கம். | பி.ப. | 2 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, உறவினர் உதவி. | பகல் | 12 மணி |
| புதன்- மனக் கலக்கம், வீண் தொல்லை. | பி.ப. | 3 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, செலவு மிகுதி. | மு.ப. | 10 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, பொருள் வரவு. | பகல் | 12 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பகல் | 11 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- இனசன மகிழ்ச்சி, காரியானுகூலம். | பி.ப. | 1 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| புதன்- வீண்குறை கேட்டல், அந்நியர் உதவி. | மு.ப. | 10 மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், கௌரவக் குறைவு. | பகல் | 11 மணி |
| வெள்ளி- உறவினர் பகை, மனஅமைதி குன்றும். | பி.ப. | 2 மணி |
| சனி- வெளியிட வாசம், செலவு மிகுதி. | பி.ப. | 1 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. | 2 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, காரிய சித்தி. | பகல் | 11 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. | 1 மணி |
| புதன்- வீண் பிரயாணம், செலவு மிகுதி. | மு.ப. | 9 மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், பொருள் வரவு. | பகல் | 12 மணி |
| வெள்ளி- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| சனி- சுபகாரிய நன்மை, செலவு மிகுதி. | மு.ப. | 9 மணி |


அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5



படிப்பகம்

www.padippakam.com





## வீட்டுத் தோட்டம்

வீட்டின் முன்னே பூந்தோட்டம்
விரும்பிப் பார்த்திடக் கொண்டாட்டம்!
நீட்டமாய் வளரும் செடி கொடிகள்,
நிறம் பல கொண்ட மலர் வகைகள்!

பாட்டுப் பாடி வரும் வண்டு,
பறந்தே செல்லும் தேனீ உண்டு.
ஆட்டி மகிழ வரும் காற்றும்:
அதன் மேல் பூக்கள் மணம் ஏற்றும்.

காற்றும் மழையும் உண்டாகக்
காரணம் கூடத் தாவரமாம்;
நேற்றே சொன்னார் ஆசிரியர்
நினைவில் வைத்துக் கொண்டோமே!

நிலத்தைக் கொத்திப் பயிர் செய்தால்
நிறையப் பலமாம் உடலுக்கும்:
பலனும் உண்டாம் வீட்டுக்கே!
பயனும் உண்டாம் நாட்டுக்கே!

-அமுதன்-

சாதிக் கொடுமைகள் வேண்டாம்- அன்பு
தன்னில் செழித்திடும் வையம்:
ஆதரவுற்றிங்கு வாழ்வோம்:- தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்!

-சுப்பிரமணிய பாரதியார்.

### பாப்பா முரசு சிறுகதை

## கேள்வியும் பதிலும்

ஓர் ஊரில் இருந்து ஒருவன் வேலை தேடிப் பட்டணத்திற்கு வந்தான். அவன் பட்டணத்திற்கு வந்தபோது இரவாகி விட்டது. முதலில் எங்காவது தங்கி ஓய் வெடுத்துக்கொள்ள விரும்பினான்

ஒரு வீட்டைக் கண்டதும் அதன் கத வைத் தட்டினான். வீட்டுக்காரன் கதவைத் திறந்தான். அவனைப் பார்த்து அந்தப் பிரயாணி,

"பட்டணத்தில் வேலை தேடுவதற் காகக் காலையில் ஊரில் இருந்து புறப் பட்டு வந்தேன். மிகவும் களைப்பாக இருக்கிறது. இன்றிரவு மட்டும் தங்கு வதற்கு ஒரு இடமும், சாப்பாடும் கொடுத் தீர்கள் என்றால் நீங்கள் கேட்கும் பணத் தைக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்" என்றான்.

அதற்கு வீட்டுக்காரன், உனக்குச் சாப்பாடு போட்டுத் தங்க வைப்பதில் எனக்கு எவ்வித ஆட்சேபனையும் கிடையாது. ஆனால் சாப்பிட்டு முடிந்த பின்னர் நான் கேட்கும் கேள்விகளுக்கு நீ சரியான பதிலைச் சொன்னால் எனக்குப் பணம் தேவையில்லை. பிழையாகப் பதில் சொன்னால் கன்னத்தில் ஓர் அறை விடுவேன்." என்றான்.

சரி என்று ஒப்புக்கொண்டு பிரயாணியும் உள்ளே சென்றான்.

வீட்டில் இருவரும் ஒன்றாகச் சாப்பிட்டார்கள். பிறகு இருவரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கையில், வீட்டுக்காரன் வீட்டின் மூலையில் படுத்திருந்த ஒரு வெள்ளை நிறப் பூனையைச் சுட்டிக்காட்டி,

"அது என்ன?" என்று கேட்டான்.

"அது பூனை" என்றான் பிரயாணி.

உடனே வீட்டுக்காரன் பிரயாணியின் கன்னத்தில் ஒரு அறை அறைந்து விட்டு, "உன் பதில் பிழை. அது பூனை அல்ல. வெண்மை" என்றான்.

சிறிது நேரத்திற்குப் பின் குடத்தில் இருந்த தண்ணீரைக் காண்பித்து "அது என்ன?" என்று கேட்டான் வீட்டுக்காரன்.

"தண்ணீர்" என்று பதிலளித்தான் பிரயாணி.

உடனே வீட்டுக்காரன் பிரயாணியின் கன்னத்தில் அறைந்து விட்டு "அது தண்ணீர் இல்லை, சுத்தம்" என்றான்.

பின்னர் அடுப்பில் எரிந்து கொண்டிருந்த நெருப்பைச் சுட்டிக்காட்டி, "அது என்ன" என்று கேட்டான்.

"நெருப்பு" என்றான் பிரயாணி.

உடனே பிரயாணியின் கன்னத்தில் மறு படியும் ஒரு அறை விட்டான் வீட்டுக்காரன், "அது நெருப்பு அல்ல சுகம்" என்றான்.

சிறிது நேரத்தின் பின்னர் வீட்டுக்காரன் பரணைச் சுட்டிக்காட்டி, "அது என்ன?" என்று கேட்டான்.

"பரண்" என்றான் பிரயாணி.

"உன் பதில் பிழை. அது உயரம்" என்ற வீட்டுக்காரன் பிரயாணியின் கன்னத்தில் ஒரு அறை அறைந்தான்.



பாவம், பிரயாணிக்கு வலி பொறுக்க முடியவில்லை. அவன், வீட்டுக்காரரைப் பார்த்து.

"என் மூளை சற்று மழுங்கி விட்டது என்று நினைக்கிறேன். எனவே சற்றுத் தூங்கிவிட்டுக் காலையில் உங்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்கிறேன்," என்றான்.

வீட்டுக்காரனும் சரியென்று சொல்லவே, பிரயாணி பாயைப் போட்டுப் படுத்தான். ஆனால் தூக்கம் வரவில்லை. எப்படியாவது அந்த வீட்டுக்காரனை மடக்க வேண்டும் என்று நினைத்தான்.

அருகில் வீட்டுக்காரன் குறட்டை விட்டபடி நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தான்.

உடனே படுக்கையிலிருந்து எழுந்த பிரயாணி, வீட்டின் மூலையில் படுத்திருந்த பூனையைப் பிடித்து, அதன் வாலில் சில சுள்ளிகளைச் சேர்த்துக்கட்டி விட்டு அதில் நெருப்பைப் பற்ற வைத்தான்.

நெருப்பைக் கண்டு பயந்த பூனை பரண் மீது தாவி ஏற, பரணில் தீப்பிடித்தது.

உடனே பிரயாணி, வீட்டுக்காரனைத் தட்டி எழுப்பி,

"வெண்மை சுகத்தை எடுத்துக் கொண்டு உயரத்திற்குப் போய் இருக்கிறது. எனவே சுத்தத்தைக் கொண்டு சுகத்தை அணைத்துக் கொள்" என்றான்.

வீட்டுக்காரன் ஒன்றும் புரியாமல் திகைத்து,

"என்ன சொல்லிக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டான்.

அதற்குப் பிரயாணி, வீட்டுக்காரனின் கன்னத்தில் 'பளார்' என்று ஒரு அறை விட்டு,

"இவ்வளவு தானா உன் புத்தி சாலித்தனம்? பூனை நெருப்பை எடுத்துக் கொண்டு பரணில் ஏறிவிட்டது. பரண் தீப்பிடித்து எரிகிறது. எனவே தண்ணீரை ஊற்றி நெருப்பை அணைத்து விடு." என்று சொல்லி அந்த வீட்டை விட்டு வெளியேறினான் பிரயாணி. ●

## வாரம் ஒரு நாடு

## பெரு



**தலைநகர்**- லீமா
**பரப்பு**- 12,81,215 சதுர கிலோமீட்டர்.
**மக்கள் தொகை**- 2.38 கோடி
**மொழி**- ஸ்பானிஷ், குவச்வா
**எழுத்தறிவு**- 85%
**சமயம்**- கிறிஸ்தவம்
**நாணயம்**- சோல்
**தனிநபர் வருமானம்**- 1070 டொலர்.

**அமைவிடம்:-**

தென் அமெரிக்காவின் பசுபிக் கரையில் பெரு அமைந்துள்ளது. அன்டீஸ் மலைகள் பெருவில் அமைந்துள்ளன. மிக அரிய விலங்குகளான விசுனா, இலமா, அல்பசா, ஆகிய விலங்குகள் இந்நாட்டில் உள்ள மலைப்பிரதேசங்களில் வாழ்கின்றன.


**வரலாறு:-**

பெரு அடிப்படையில் செவ்விந்தியர்களின் இடமாக இருந்தது. 1821 ஜூலை மாதம் 28ம் திகதி ஸ்பெயினின் ஆதிக்கத்தில் இருந்து சுதந்திரமடைந்தது. 1968ல் இருந்து 1980 வரை இராணுவ ஆட்சி. 1980ல் பொதுத் தேர்தல் நடந்தது. பாராளுமன்றம் இரண்டு சபைகளைக் கொண்டது.

**பொருளாதாரம்:-**

கனிமப் பொருட்கள் அதிகமாகக் கிடைக்கின்றன. எழுபதுகளில் உலகத்தின் மிகப் பெரிய மீன் உணவு தயாரிப்பு நாடாக இருந்தது. ஒரு வரையறைக்குள் அமையாத காரணத்தால் இத்தகுதியை இழந்தது. பருத்தி, கம்பளி, சீனி ஆகியன முக்கிய உற்பத்திப் பொருட்கள். செம்பு, வெள்ளி அதிகளவில் ஏற்றுமதி செய்யப் படுகிறது. ■

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 28.09.1996.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 159**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.


### வர்ணம் தீட்டும் போட்டி இல: 157

**பரிசுக்குரியவர்:**
வி. கௌரிசங்கர்.
பிள்ளையார் கோவிலடி, குருமன்காடு, வவுனியா.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| வி. வீணாப்ரசானி, நு/ஸ்டோனிகிளிப் த.வி., கொட்டகலை. | எம்.ஜே. அமீனுல்லா, மருதமுனை, கல்முனை. |
| எஸ். விதூஷணன், வெஸ்லி கல்லூரி, கொழும்பு-9. | எஸ். சுகன்யா, ரம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்,வவுனியா. |
| எம்.ஏ.என்.எம். முஸ்பிக், பிரதான வீதி, புத்தளம். | செல்வி குணாளினி முத்துலிங்கம், வின்சன் மகளிர் கல்லூரி, மட்டக்களப்பு. |
| பி. விதுரன், இந்துக் கல்லூரி, திருகோணமலை. | ஸஹானா நிஸா க்லீல், அல்ஹம்றா சிறுவர்பாடசாலை, நாச்சியாதுவ, அநுராதபுரம். |
| எச்.ஆர்.எப். ஹஸ்லா பானு, மன்னார் வீதி, புத்தளம். | எஸ். ரிஷாந்தன், மாத்தளை இந்துக் கல்லூரி, மாத்தளை. |

## பென்சில்



**பென்சில் எப்போது கண்டு பிடிக்கப் பட்டது?**
கி.பி.1565ம் ஆண்டில் கண்டுபிடிக்கப் பட்டது.

**பென்சிலை முதன் முதலில் கண்டு பிடித்தவர் யார்?**
ஜெர்மன்-சுவிஸ் இயற்கை ஆய்வாளரான கோனார்ட்வோன் கெஸ்ட்னர் என்பவரே முதலில் உருவாக்கினார்.

**பென்சில் என்ற பெயர் எப்படி வந்தது?**
பழங்கால ரோமானியர்கள் 'பென்சிலஸ்' எனப்படும் சிறிய தூரிகை மூலம் 'பேப்பிரஸ்' என்ற தாவரத்தின் கூழ் மூலம் தயாரிக்கப்பட்ட பட்டைகளில் எழுதுவார்கள். எனவே இதுவும் எழுதுவதற்குப் பயன்பட்டதால் பென்சில் என்ற பெயர் வந்தது.

**கிராஃபைட் மற்றும் ஒருவகை களி மண்ணால் செய்யப்படும் பென்சில் ஏன் 'லெட் பென்சில்' என்று அழைக்கப் படுகிறது?**
ரோமானியர்கள் எழுதும்போது, கோடுகள் போடுவதற்கு காரியத்தகடுகளைப் (லெட்டிஸ்க்) பயன்படுத்தினார்கள்: அதை 'லெட்டிஸ்க் பென்சிலஸ்' என்று அழைத்தார்கள். அதுவே பின்னர் லெட்பென்சில் என்று அழைக்கப்படுகிறது.

**பென்சில்கள் தயாரிப்பதற்கு வேண்டிய கிராஃபைட்கள் எங்கிருந்து முதலில் கிடைத்தன?**
இங்கிலாந்தில் இருந்து கிடைத்தன. 1564ம் ஆண்டு இங்கிலாந்தில் உள்ள பரோடல் என்னுமிடத்தில் பெரிய புயல்காற்று வீசியது. இதனால் பல மரங்கள் வேரோடு பிடுங்கப்பட்டன. அப்போது அதன் வேர்த்துவாரங்களில் அதிகளவு கிராஃபைட்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து அங்கு கிராஃபைட்கள் எடுக்கப்பட்டன.
கிராஃபைட் - காரீயம் இலங்கையிலும் கிடைக்கிறது.

## உயிர் அணுக்கள்




நம் உடலில் உள்ள இரத்தத்தில் சிவப்பு அணுக்கள், வெள்ளை அணுக்கள் என்று இருவகை உயிர் அணுக்கள் உள்ளன. நம் உடலில் இவை-தானாகவே அழிந்து, தோன்றிக் கொண்டிருக்கின்றன. இதனால் தான் உடல் வளர்கிறது; பெருக்கிறது.

சில உயிர் அணுக்கள் சில நாட்களே வாழக்கூடியவை. சில, பல வாரங்கள், மாதங்கள், வருடங்கள் என்று வாழக் கூடியவை. இரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்களின் வாழ்நாள் 4 மாதங்கள்.

வளர்ந்த, ஆரோக்கியமான மனிதனின் உடலில் 8 பைந்த் (5 லீட்டர்) இரத்தம் இருக்கும். 1 சிசி (சில துளிகள்) இரத்தத்தில் 5000 மில்லியன் சிவப்பு அணுக்களும், 11 மில்லியன் வெள்ளை அணுக்களும் இருக்கும்.

## முதலில் தோன்றியது எது?

மனிதன் சந்திரனில் கால்பதித்து இறங்குவதற்கு முன் விஞ்ஞானிகள், சந்திரன் தோன்றுவதற்கு மூன்று விதமான சாத்தியக் கூறுகள் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள்.

முதலாவது- பூமி தோன்றுவதற்குக் காரணமாக இருந்த வாயு மேகங்களே சந்திரன் தோன்றுவதற்குக் காரணமாக இருந்திருக்கிறது.


இரண்டாவது- பல கோடி ஆண்டுகளுக்கு முன் பூமியில் இருந்து பிரிந்த துண்டே சந்திரன்.

மூன்றாவது-விண்வெளியில் எங்கோ உருவான கோள் ஒன்று பூமியின் ஈர்ப்பு சக்தியினால் இழுக்கப்பட்டு சந்திரனாக, சூரியக் குடும்பத்தில் ஒன்றாகச் சுற்றி வருகிறது என்றும் கூறினார்கள்.

சந்திரனில் இறங்கியவர்கள் அங்கிருந்து எடுத்துவந்த கற்களை ஆராய்ந்தார்கள். அந்த ஆராய்ச்சியினால் பூமி உருவான அதே பொருட்களினால் சந்திரன் உருவாகவில்லை என்ற முடிவுக்கு வந்தார்கள்.

எனவே, சந்திரன் பூமியில் இருந்து பிரிந்து போன துண்டு அல்ல என்ற கூற்று உறுதியானது.

சந்திரனில் எடுத்து வந்த கற்களை ஆராய்ந்தபோது அவற்றின் வயது மூன்றரை பில்லியன் (பில்லியன்=100 கோடி) ஆண்டுகளுக்கும் மேலானவை என்பது விஞ்ஞானிகளின் கணிப்பு.




ஆனால் இதே வயதுடைய அல்லது இதிலும் வயது கூடிய பாறைகள் இன்னும் பூமியில் இருந்து கண்டுபிடிக்கப் படவில்லை. எனவே பூமியில் உள்ள பாறைகளை விட சந்திரனில் எடுத்து வந்த கற்களின் வயதுதான் அதிகம்.

எனினும் சந்திரன் எப்படித் தோன்றியது; எப்போது தோன்றியது என்று விஞ்ஞானிகளால் சரியாக நிர்ணயிக்க முடியவில்லை. ஆனால் பூமியை விட சந்திரன் வயதானது என்பது மட்டும் உண்மை. ●


படிப்பகம்

www.padippakam.com

"எட்டு மணிக்கு மேல எந்த கட்சிக்காரரையும் பார்க்க மாட்டாரே சார்."

"ரொம்ப அர்ஜெண்ட்டான விஷயம். இல்லைன்னா வரமாட்டேன். வக்கீல் சாருக்கு என்னை நல்லாத் தெரியும். ரவின்னு செஒல்லுங்க. மதனோட ஃபிரெண்டுன்னு சொல்லுங்க."

"சோபால உக்காருங்க. சொல்றேன்."

"சரிங்க."

"இன்றைய தேசிய நிகழ்ச்சிகளில் முதலாவதாக கதக், நடனம், பங்கு பெறுபவர் சியாமளா நரசிம்மன்."

"சார், உங்களை மாடிக்கு வரச் சொன்னார்."

"தாங்க்ஸ். செருப்பை இங்கேயே போட்டுட்டுப் போறேன்."

"வாப்பா ரவி. உக்காரு, என்ன இந்த நேரத்திலே?"

"சார், என் ஃபிரெண்டு மதன் மடத்தனமா ஒரு காரியத்தைப் பண்ணிட்டான்."

"பதறாதே. நிதானமா சொல்லு, என்ன செஞ்சான்?"

"ஜெயில்லேர்ந்து விடுதலையானதும் கீதாவுக்கு போன் செஞ்சி சாயங்காலம் சந்திக்க ஏற்பாடு செஞ்சிட்டு ஒரு கத்தியை வாங்கிட்டு என்கிட்டே கூட மறைச்சிட்டு, இப்போது ஒரு மணி நேரத்துக்கு முன்னாடி- அதே கடற்கரையிலே இருட்டிலே- மரிய கீதா கொலை செய்யப்பட்ட அதே மாதிரி கீதாவைக் கொலை செஞ்சுட்டான். "

"அடப்பாவமே!"

"கேளுங்க சார். என்கிட்டே வந்தான். கீதாவை கொன்னுட்டேன், போலீஸ்லே சரண்டர் ஆகப் போறேன்னு சொன்னான். கீதாவை இவன் காதலிச்சதுக்கு எந்த சாட்சியும் இல்லை. இப்போ கொன்னதுக்கும் எந்த சாட்சியும் இல்லை, அதனாலே நீ சரண்டர் ஆகாதேன்னேன்."

"வெளியூருக்கு ரயிலேத்தி அனுப்பிட வேண்டியதுதானே?"

"இல்லை சார். நான் எவ்வளவோ சொல்லியும் கேக்காம, மனசு உறுத்தும்னு சொல்லி போலீஸ் ஸ்டேஷன் போய்ட்டான் சார்."

"முடிஞ்சுது கதை. கொலை செஞ்சாச்சு. சரணடைஞ்சாச்சு. இப்ப எதுக்காக நீ என்னைத் தேடி வந்திருக்கேன்னு புரியலையே.... ஜாமீன்ல எடுக்கணுமா? அவனே குற்றத்தை ஒப்புக்கிறப்போ அதுக்கு அவசியம் இல்லையேப்பா...."

"இல்லை சார், ஜாமீன் எல்லாம் எடுக்க வேணாம். அவனைக் காப்பாத்துங்க சார்."

"புரியலையேப்பா."

"திட்டம் போட்டுக் கொன்னுருக்கான் சார், நிச்சயமா மரண தண்டனைதான். இல்லையா?"

"அஃப் கோர்ஸ்..."

"கூடாது சார். அவன் சாகக் கூடாது சார். ரொம்ப உன்னதமான மனுஷன் சார். அவன் செஞ்சதிலே தப்பே இல்லை சார். இந்த ராங்கிக்காரியை கொன்னது படு நியாயம் சார். அதுக்காக இவன் தன் உயிரையே பலி கொடுக்கிறது அநியாயம்."

"தெளிவா சொல்லுப்பா. நான் என்ன செய்யணும்?"

"மதன் இந்த கொலையை செய்யலைன்னு வாதாடி, அவன் உயிரைக் காப்பாத்தணும். அதுக்காக எவ்வளவு செலவானாலும் சரி, நான் தர்றேன்."

"அதெல்லாம் சரி. இவனே வாலண்டியறா போய் சரண்டர் ஆகித் தொலைச்சிருக்கானே...."

"எவ்வளவு எடுத்துச் சொல்லியும் கேக்கலை சார்."

"ரொம்ப கஷ்டம்பா, ஆமாம், எதால கொலை செஞ்சான்?"

"கத்தியால."

"அந்த கத்தியை என்ன செஞ்சான்?"

"ஒரு கர்ச்சீப்ல சுத்தி எடுத்துட்டு ஸ்டேஷனுக்குப் போயிட்டான்."

"போச்சுடா. ரவி, இப்போ நீ -".வனை மரண தண்டனையிலேர்ந்து ..ப்பாத்தத் துடிக்கிறே....அதானே?"

"ஆமாம் சார்."

"அந்த துடிப்பு மதனுக்கு இருக்கா?"

"இல்லை சார். நான் செஞ்சது தப்பு, அதுக்கான தண்டனையை நான் அடையணும், அதுக்காகத்தான் சரண்டர் ஆகறேன்னு சொல்லிட்டான் சார்."

"மதனோட ஒத்துழைப்பு இல்லாம எப்படிப்பா அவனை காப்பாத்த முடியும்?"

"அது எனக்குப் புரியலை சார். ஆனா.... எனக்காக நீங்க அவன் கேசை எடுத்துக்கணும் சார். அவனை எப்படியாச்சும் காப்பாத்திடுங்க சார்."

"இந்த மாதிரி ஒரு கேசை நான் முதல் தடவையா ஹேண்டில் பண்றேன். குற்றவாளிதன் குற்றத்தை சாட்சியத்தோட ஒத்துக்கறான். அதையும் மீறி அவன் குற்றத்தை செய்யலைன்னு எப்படி நிரூபிக்கிறது?"

"சார், யோசிங்க சார். மனசாட்சி அது இதுன்னு ஒரு வேகத்திலே அவன் போய் சரண்டர் ஆகிட்டான். ஆனா அவன் வாழ்க்கையே போயிடும் சார். இருபத்தேழு சாகற வயசா சார்? சாதிக்கிற வயசு!"

"எல்லாம் சரி, அவனை போலீஸ் ஸ்டேஷனுக்கு போறதுக்கு முன்னாடி இங்கே கூட்டிக்கிட்டு வந்திருக்கலாம் நீ."

"எனக்குப் புரியாமல் போச்சு சார்."

"இருப்பா. ஸ்டேஷனுக்குப் போறதா சொன்னான் போய்ட்டான்றது தெரியுமா?"

"தெரியாது சார்."

"தெரிஞ்சுக்கலாமா? அடையாறு ஸ்டேஷன்தானே?"

"ஆமாம் சார்."

"ஹலோ.... லாயர் கோபாலகிருஷ்ணன் பேசறேன். யார் பேசறது?"

"எஸ்.ஐ.சசிதரன் பேசறேன் சார்."

"என்ன சார். அதே பெஸண்ட் நகர்ல இன்னொரு மர்டர்னு கேள்விப்பட்டேன்."

"எப்படி தெரியும் சார் உங்களுக்கு?"

"எப்படியோ தெரியும். மரியகீதா மர்டரும் இதுவும் ஒண்ணா தெரியுதா சார்?"

"நோ. நோ. இது வேற கேஸ். அது வேற கேஸ். உங்க கிளையண்ட் மதன்தான் இந்த கொலையை செஞ்சது. நேரா இங்கே வந்து சரண் அடைஞ்சுட்டான். வி ஹேவ் ஸ்டார்ட்டட் பிரிபேரிங் த கேஸ்."

"ஐ. சி. அப்போ நானும் ஸ்டார்ட் பண்ணியாகணும்."

"என்ன சார் சொல்றிங்க?"

"மதனுக்காக மறுபடி டிஃபண்ட் பண்ணலாமான்னு ஒரு யோசனை!"

"என்ன சார் ஜோக்கடிக்கிறிங்க. மதன் இங்கே லாக்கப்ல இருக்கான். சுத்தமா வாக்குமூலம் தர தயாரா இருக்கான். வெப்பன் இங்கே இருக்கு. மோடிவ்லேர்ந்து எல்லாம் கச்சிதமா இருக்கு. எதுக்காக தண்டமா நீங்க தலையிடறீங்க?"

"சப்-இன்ஸ்பெக்டர், மைண்ட் யுவர் வர்ட்ஸ். எது தண்டம், எது உபயோகம்னு எனக்குத் தெரியும். ஐ ஹாவ் டிசைடட், நாளைக்கு பெயில் மூவ் பண்றேன்."

"ஒரு தடவை உங்ககிட்டே வழிஞ்சோம். அதுக்காக இந்த தடவையும் வழிவோம்னு எதிர்பார்க்காதீங்க. என்ன நோக்கத்திலே நீங்க இதிலே இறங்கறிங்கன்னு எனக்குப் புரியலை. எனி ஹௌ....நீங்க தோற்கப் போறதுக்கு என்னோட அட்வான்ஸ் அனுதாபங்கள். குட்நைட்."

"தேங்க் யு ரவி, நீ சொன்னதும் கொஞ்சம் சூடு பிடிச்சிது. எஸ்.ஐ.முழுசுமா பத்த வச்சிட்டார். பார்த்துடுவமே ஒரு கை. என்ன?"

"ரொம்ப நன்றி சார். நான் புறப்படறேன்."

"நல்ல கதை. உக்காருய்யா. எவ்வளவு தகவல்கள் எனக்குத் தேவைப்படுது அதெல்லாம் எவன் சொல்வான்?"

"என்ன தகவல் சார் வேணும்?"

"வரிசையா கேக்கறேன். நல்லா நினைவு படுத்தி சொல்லணும்."

"சரி சார்."

"மதன் ஜெயில்லேர்ந்து விடுதலையானதும் எத்தனை மணிக்கு ரூமுக்கு வந்தான்?"

"காலையிலே பத்தரை மணிக்கு?"

"என்ன சொன்னான்? நீ என்ன சொன்னே?"

"நீ மட்டும் வக்கீலை அமர்த்தி செலவு செய்யலைன்னா என்ன ஆகறதுன்னான். உன் கீதா சாட்சி சொல்லியிருந்தால் கேஸ் எப்பவோ முடிஞ்சிருக்கும்ன்னேன். அதுக்கு கீதா செஞ்சதை நியாயப்படுத்திப் பேசினான். அவளோட சூழ்நிலை அப்படின்னு சொன்னான். நான் மறுபடி மறுபடி சீண்டினேன். என்னை சூடாக்காதேடா நான் வெளில வந்ததுமே போன்செஞ்சு பேசினேன். போன்லயே அழுதா. நாங்க அதே இடத்திலே இன்னிக்கு ஈவினிங் சந்திக்கப் போறோம்- உன் புது டி ஷர்ட் கொடுன்னான்."

"வெய்ட். அப்போ கொலை செய்யப் போனப்போ உன்னோட சட்டையைத்தான் போட்டுட்டுப் போனானா?"

"ஆமாம். என் கர்ச்சீப்தான் வாங்கிக்கிட்டான்."

"கத்தியை சுத்தி எடுத்துட்டு வந்தான்னு சொன்னியே உன் கர்ச்சீப்லதானா?"

"ஆமாம் சார்."

"அப்படியே அதே டி ஷர்ட்டோட, அதே கர்ச்சீப்போடதான் போலீஸ் ஸ்டேஷன் போனானா?"

"ஆமா சார்."

"அந்த சட்டையை சலவைக்குப் போட்டிருக்கியா, இல்லையா?"

"சட்டை, கர்ச்சீப் ரெண்டுமே சலவையிலேர்ந்து வந்ததைத்தான் எடுத்துக் கொடுத்தேன்."

"ரெண்டுலயும் சலவைக்குறி இருக்குமா?"

"இருக்கும் சார்."

"என்ன குறி?"

"ஆர்."

"வெரிகுட். அப்புறம் சொல்லு."

"சாயங்காலம் புறப்பட்டுப் போய்ட்டான். இப்பதான் வந்தான்."

"எதிலே போனான்? எதிலே வந்தான்?"

"போனது பஸ்ஸிலே. வந்தது ஆட்டோல."

"காலையிலே ஜெயில்லேர்ந்து வந்ததும் உன் ரூமுக்கு வந்ததை யாராச்சும் பார்த்தாங்களா?"

"லாட்ஜ் மேனேஜர் பார்த்தார். என்னப்பா ரிலீஸ் பண்ணிட்டாங்களான்னு கேட்டார். அப்புறம் ரூமுக்கு டீ கொண்டு வந்த பையன் கூட, நல்ல வேளை, உங்களை விட்டுட்டாங்களா சார்ன்னு சந்தோஷப்பட்டான்."

"இப்போ சாயங்காலம் இவன் போனதையோ, ஆட்டோல வந்து இறங்கினதையோ யாராச்சும் பார்த்தாங்களா?"

"வாய்ப்பில்லை சார். மேனேஜர் ஆறு மணியோட வீட்டுக்குப்போய்டுவார். எல்லாமே மாத வாடகை ரூம்கள். யாரும்பார்க்கலைன்னு தான் நினைக்கிறேன்."

"வெரிகுட். புறப்படுவமா? நேரா ஸ்டேஷனுக்குப் போலாம். மதனை சந்திக்கலாம். நான் கொலை செய்யலைன்னு சொல்லுடான்னு சொல்லிப் பார்ப்போம். இல்லை நான் அரிச்சந்திரனோட அண்ணன் பிள்ளையாக்கும்னு பிடிவாதம் பிடிச்சா.... ஒரே ஒரு வரம் நீ கேக்கணும்ப்பா ரவி."

"வரமா?"

"ஆமாம். உன் இஷ்டத்துக்கு நீ எப்படி வேணும்னாலும் போலீஸ்ல வாக்குமூலம் கொடு. எந்த சந்தர்ப்பத்திலேயும் என் பேரைச் சொல்லாதே. ஜெயில்லேர்ந்து வந்தேன். அங்கே, இங்கே சுத்திட்டு கடற்கரைக்குப் போய் கொன்னுட்டு நேரா ஸ்டேஷனுக்கு வந்துட்டேன்னு சொல்லச் சொல்லு. ஏன்னு கேட்டா, என் ரூமுக்கு வந்ததை, கொலை செஞ்சிட்டு மறுபடி வந்ததை சொன்னா.... கோர்ட்ல என்னையும் விசாரிப்பாங்க, அதை நான் விரும்பலைன்னு சொல்லு, புரியுதா? இதை ஸ்ட்ராங்கா சொல்லிடு. மத்ததை நான் பார்த்துக்கறேன்."

"சரி சார்." **(தொடர்ந்து வரும்)**


**இதுவரை**

மதன்-கீதா காதலர்கள்.
கடற்கரையில் சந்திக்கின்றனர்.
அதே நாளில் கடற்கரையில்
மரிய கீதா என்னும் பெண்
கொலை செய்யப்பட்டு
பிணமாகக் கிடக்கிறாள்.
கொலைப் பழி மதன்மீது விழுகிறது.
காதலி கீதா சாட்சி சொன்னால்
மதன் விடுதலையாகிவிடலாம்.
கீதாவோ தந்தைக்குப் பயந்து
காதலை மறைக்கிறாள்.
சட்டத்தரணியின் திறமையால்
மதன் விடுதலையாகிறான்.

**இனி**

அதே கடற்கரையில்
காதலி கீதாவை அழைத்து
கொலை செய்கிறான்.
பொலிஸில் சரணடைகிறான்.






**தமிழக கிரைம் கதை மன்னன்**
**பட்டுக்கோட்டை பிரபாகர்**

## பேனா நண்பர் அரங்கம்








பெயர்: எல்.அப்துல் ரசீத்.
வயது: 28
முகவரி: வெள்ளை மணல் வீதி, 5ம் வட்டாரம், பொத்துவில்-2.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எம்.சந்திரகுமார்.
வயது: 18
முகவரி: 123/பி, எலன் கட்ட, பமுனுகம.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், வானொலி.

பெயர்: அஸ்வர் ஸலாம்.
வயது: 19
முகவரி: 67,பிரதான வீதி, ஜா-எல.
பொழுது போக்கு: சினிமா, வானொலி.

பெயர்: கே.குமார்.
வயது: 27
முகவரி: P.O.BOX-2630, DOHA, QATAR.
பொழுதுபோக்கு: பத்திரிகை.

பெயர்: எஸ். ரமணி.
வயது: 25
முகவரி: 36, சேனைத் தெரு, கோட்டைமுனை, மட்டக்களப்பு.
பொழுது போக்கு: ரீ.வி., கதைப்புத்தகம்.

பெயர்: எம்.நவ்பர்.
வயது: 27
முகவரி: 12, யட்டியாந்தோட்ட வீதி, அவிசாவளை.
பொழுது போக்கு: தையல், வானொலி, பத்திரிகை.

பெயர்: எவ்.அமீர்.
வயது: 24
முகவரி: P.O.BOX-33794, AL-ROWDHA, KUWAIT.
பொழுதுபோக்கு: பத்திரிகை, ரீ.வி.

பெயர்: ஏ.அம்ஜித்.
வயது: 19
முகவரி: 198 1/ஏ, ஜும்மா மஸ்ஜித் வீதி, மாளிகாவத்தை, கொழும்பு-10.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எஸ்.ரவிந்திரகுமார்.
வயது: 21
முகவரி: சாகாமம் வீதி, அக்கரைப்பற்று-8.
பொழுது போக்கு: பத்திரிகை.

பெயர்: எம்.நவக்குமார்.
வயது: 17
முகவரி: 555, காலிவீதி, கொழும்பு-6.
பொழுது போக்கு: நண்பர் தொடர்பு.

பெயர்: பி. விக்னேஸ்வரன்.
வயது: 29
முகவரி: AM JOSTEN HOF-27, ROOM NO.13, 47441 MOERS, GERMANY.
பொழுது போக்கு: சினிமா, உதைபந்து.

பெயர்: எம். இல்லியாஸ்.
வயது: 22
முகவரி: 8, வரக்காசின்ன, அக்குறணை.
பொழுது போக்கு: வானொலி, கதைப்புத்தகம்.



படிப்பகம்

www.padippakam.com

# தாய்

**மக்சீம் கார்க்கி**

**94**

"இப்போது என்னால் அவனுக்கு என்ன ஆகப்போகிறது?" என்று பெருமூச்சோடு சொன்னாள் தாய். "அவன் தப்பிவர எண்ணினால் நான் அவனுக்கு ஒரு தொல்லையாயிருப்பேன். அவனோடு நானும் போவதற்கு அவன் ஒருநாளும் சம்மதிக்க மாட்டான்."

சாஷா தலையை ஆட்டினாள்.

"நீங்கள் சொல்வது சரிதான். அவன் சம்மதிக்கத்தான் மாட்டான்."

"மேலும் எனக்கு இங்கு என் வேலையே சரியாயிருக்கிறது" என்று பெருமையோடு சொல்லிக் கொண்டாள் தாய்.


"ஆமாம். அதுவும் நல்லதுதான்" என்றாள் சாஷா.

திடீரென அவள் எதையோ விட்டெறியப்போவது மாதிரித் துள்ளியெழுந்தாள்; எளிமையோடும் அமைதியோடும் பேசத் தொடங்கினாள்:

"அவன் ஒன்றும் அங்கேயே வாழ்ந்து கொண்டிருக்க மாட்டான். எப்படியும் அவன் ஓடி வந்துவிடுவான்..."

"அப்படியானால் நீங்கள் என்ன செய்வீர்கள்? குழந்தை இருந்தால், அந்தக் குழந்தையின் கதி?"

"அதெல்லாம் சமயம் வரும்போது பார்த்துக்கொள்ளலாம். அவன் என்னை



ஒன்றும் பொருட்படுத்திக் கொண்டிருக்கக் கூடாது. அவனது போக்குக்கு இடையூறாக நான் என்றுமே இருக்கமாட்டேன். அவனைப் பிரிந்திருப்பது எனக்குச் சிரமம் தான். இருந்தாலும் நான் சமாளித்துக் கொள்வேன். அவன் வழியிலே நான் நிற்கவே மாட்டேன்."

சாஷா சொன்னபடியே செய்வாள் என்பதைத் தாய் உணர்ந்துகொண்டாள்; அந்தப் பெண்ணுக்காக அனுதாபப் பட்டாள்.

உங்களுக்கு ரொம்பச் சிரமமாயிருக்குமே, கண்ணு!" என்று அவளைத் தழுவிக் கொண்டே சொன்னாள் தாய்.

சாஷா மிருதுவாகச் சிரித்தாள்; தாயின் பக்கமாக நெருங்கிக் கொண்டாள்.

இந்தச் சமயத்தில் களைப்போடும் ஆயாசத்தோடும் நிகலாய் இவானவிச் உள்ளே வந்தான். தனது உடுப்புக்களை அவசரமாகக் கழற்றிக்கொண்டே அவன் பேசினான்:

"சாஷா! சந்தர்ப்பம் இருக்கிறபோதே நீங்கள் வெளியே தப்பிப் போய்விடுவது நல்லது. இன்று காலைமுதல் இரண்டு உளவாளிகள் என்னைப் பின்தொடர்ந்தே திரிகிறார்கள். என்னைக் கைது செய்யத்தான் இப்படி வருகிறார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. நான் நினைத்தது என்றும் தவறியதில்லை. ஏதோ நடந்து போயிருக்கிறது. இதற்குள், இதோ பாவெலின் பேச்சு இருக்கிறது; இதை அச்சிட்டு வழங்குவதெனத் தீர்மானித்து விட்டோம். இதை லூத்மீலாவிடம் கொண்டு போங்கள். இதை வெகு சீக்கிரம் அச்சடித்து முடிக்கும்படி வேண்டிக்கொள்ளுங்கள். பாவெல் மிகவும் அருமையாய்ப் பேசினான், நீலவ்னா!... போகிறபோது அந்த உளவாளிகளையும் ஒரு கண் பார்த்துக் கொள்ளுங்கள், சாஷா!..."

அவன் பேசிக் கொண்டே குளிர்ந்து விறைத்த தன் கரங்களைத் தேய்த்து விட்டுக் கொண்டான். மேஜையருகே சென்று டிராயரைத் திறந்து ஏதேதோ காகிதங்களை வெளியே எடுத்தான். சிலவற்றைக் கிழித்தெறிந்தான். சிலவற்றை ஒரு பக்கமாக ஒதுக்கிவைத்தான். அவன் மிகவும் கவலைப் பட்டுக் களைத்துப்போனவனாகத் தோன்றினான்.

"நான் இந்த டிராயர்களைச் சுத்தம் செய்து அப்படியொன்றும் நாட்களாகிவிட வில்லை. இந்தப் புதிய தாள்களெல்லாம் எப்படி இங்கு வந்தன என்பது சைத்தானுக்குத்தான் தெரியும். சரி. நீலவ்னா, நீங்கள் இன்றிரவு இங்கு தங்காமல் வேறெங்காவது போயிருப்பதே நல்லது. என்ன சொல்கிறீர்கள்? இங்கே நடக்கப்போகும் களேபரத்தைக் காண உங்களுக்குச் சகிக்காது. மேலும் அவர்கள் உங்களையும் கொண்டு போய்விடக் கூடும். பாவெலின் பேச்சுப் பிரதியை ஊர் ஊராய் விநியோகிப்பதற்கு நீங்கள் அவசியம் தேவை..."

"அவர்கள் என்னை என்ன செய்யப் போகிறார்கள்?"

நிகலாய் தன் கண்களுக்கு முன்னால் கையை உயர்த்தி வீசிக் கொண்டே, உறுதியோடு சொன்னான்:

"இந்த மாதிரி விஷயங்களையெல்லாம் மோப்பம் பிடித்து உணர எனக்குத் தெரியும். நீங்கள் லூத்மீலாவுக்குப் பேருதவியாய் இருக்க முடியும்; நாம் சந்தர்ப்பங்களை இழக்காதிருப்பதே நல்லது...."

தன் மகனது பேச்சை அச்சடிப்பதில் தானும் உதவ முடியும் என்ற எண்ணம் தாய்க்கு மனமகிழ்ச்சியைக் கொடுத்தது.

"அப்படியானால் நான் இதோ போகிறேன்" என்றாள்.

அவள் அத்துடன் வியப்புணர்ச்சி மேலிடப் பேசினாள்.

"நான் எதைக் கண்டும் இனிமேல் பயப்படவே போவதில்லை. எல்லாம் ஆண்டவன் அருள்!"

"சபாஷ்!" என்று அவளைப் பார்க்காமலேயே கூறினான் நிகலாய். "சரி, என் டிரங்குப் பெட்டியும் துண்டும் எங்கிருக்கின்றன என்பதைக் கொஞ்சம் சொல்லுங்கள். நீங்களோ எல்லாவற்றையும் சூறையாடி விட்டீர்கள்! எனவே என் சொந்தச் சாமான்களைக் கண்டுபிடிப்பது கூட எனக்குச் சிரமமாய்ப் போய்விட்டது!"

சாஷா ஒன்றுமே பேசாமல் கிழித்துப் போட்ட காகிதங்களை அடுப்பில் போட்டு எரித்துச் சாம்பலாக்கி, அந்தச் சாம்பலைக் கரியோடு சேர்த்து நிரவிக் கொண்டிருந்தாள்.

"போவதற்கு நேரமாய்விட்டது. சாஷா" என்று தன் கையை நீட்டிக் கொண்டே சொன்னான் நிகலாய். "போய் வாருங்கள். ஏதாவது சுவாரசியமான புத்தகங்கள் அகப்பட்டால் எனக்கு அனுப்பிவைக்க மறந்து விடாதீர்கள். போய் வாருங்கள். அருமைத் தோழியே, போய் வருக! ஜாக்கிரதை..."

"உங்களுக்கு என்ன நெடுங்காலச் சிறைவாசம் கிட்டும் என்று நினைக்கிறீர்களா?" என்று கேட்டாள் சாஷா.

"யாருக்குத் தெரியும்? ஒரு வேளை அப்படியே நேரலாம். எனக்கு எதிரான சாட்சியங்கள் பல அவர்களிடம் இருக்கின்றன. நீலவ்னா, நீங்களும் இவளுடனேயே போகலாமே. இரண்டு பேரையும் ஒரே சமயத்தில் பின் தொடர்வதென்பது அவர்களுக்குச் சிரமம். அதனால் இப்போதே போவது நல்லது."

"சரி" என்றாள் தாய். "இதோ நான் உடுப்புமாற்றிக் கொள்கிறேன்."

அவள் நிகலாயையே கவனத்தோடு பார்த்தாள். ஆனால் அவனது அன்பும் ஆதரவும் நிறைந்த முகத்தில் ஏதோ ஒரு ஆத்திரப் பதைபதைப்புத்தான் லேசாகத் திரையிட்டிருப்பதாக அவளுக்குத் தோன்றியது. அவனிடம் எந்தக் கலவரக் கலக்க உணர்ச்சியும் காணோம். மற்றவர்களையெல்லாம் விட, தனக்கு மிகவும் அருமையானவனாய்ப் போய்விட்ட அவனிடம் எந்தவித உத்வேகப் பரபரப்புக் குறிகளும் காணப்படவில்லை. அவன் எப்போதும் யாரிடத்திலும் ஒரே மாதிரியாகத்தான் பழகி வந்தான். எல்லோரிடமும் அன்போடும் நிதானபுத்தியோடும், ஒட்டாமலும் தான் பழகி வந்தான். மற்றவர்களது வாழ்க்கைக்கெல்லாம் மேலானதாக விளங்கும் ஏதோ ஒரு அந்தரங்க வாழ்க்கையை அவன் தனக்குத்தானே வாழ்ந்து வந்தான். இன்றும் அவன் அப்படியேதான் இருந்தான். மற்றவர்களிடம் அவன் பழகுவதை விட, தாயிடமே அவன் மிகவும் ஒட்டுறவோடு நெருங்கிப் பழகினான் என்பதும் தாய்க்குத் தெரியும். அவனை அவள் நேசித்தாள். தன்னைத் தானே நம்ப முடியாத ஒரு பாசத்தால் அவனை நேசித்தாள். இப்போதோ அவள் அவனுக்காக கொண்ட அனுதாப உணர்ச்சியை அவளால் தாங்க முடியவில்லை. ஆனால் அவள் அதை வெளிக்காட்டிக் கொள்ளவும் துணியவில்லை. வெளிக்காட்டிக் கொண்டால் அவன் ஒரு வேளை கலக்கமுற்றுக் குழம்பக் கூடும் என அஞ்சினாள். அப்படி அவன் குழம்பினால் அவன் வழக்கம் போலச் சற்று வேடிக்கையானவனாகத் தெரியக் கூடும், என்று அவளுக்குத் தோன்றியது. அவனை அந்தக் கோலத்தில் பார்க்க அவள் விரும்பவில்லை.

அவள் மீண்டும் அறைக்குள் நுழைந்தாள். நுழைந்த போது நிகலாய் சாஷாவின் கையைப் பற்றிப்பிடித்தவாறு பேசிக் கொண்டிருந்தான்:

"அபாரம்! அவனுக்கும் உங்களுக்கும் அது ஒரு நல்ல காரியம்தான் என்பது எனக்கு நிச்சயம். தனி நபரின் ஒரு சிறு சொந்தச் சுகத்தால், யாருக்கும் எந்தக் கெடுதலும் விளையப் போவதில்லை. தயாராகி விட்டீர்களா, நீலவ்னா?"

அவன் அவளருகே வந்தான். புன்னகை புரிந்தவாறே தன் மூக்குக் கண்ணாடியைச் சரியாக்கிக் கொண்டான்.

"நல்லது போய் வாருங்கள். மூன்று அல்லது நாலு மாசம், மிஞ்சிப் போனால் ஆறு மாசம். அதற்கு மேல் போகாது என நம்புகிறேன். ஆறு மாசங்கள்! வாழ்க்கையில் அது ஒரு பெரும் பகுதிதான்! சரி. ஜாக்கிரதையாக இருங்கள். சரி, கடைசி முறையாக நாம் தழுவிக் கொள்வோம்."

ஒல்லியாக மெலிந்த தனது உறுதி வாய்ந்த கரங்களை அவள்மீது இங்கிதத்தோடு மெதுவாகப் போட்டு அவளது கண்களையே பார்த்தான் அவன்.

"உங்கள் மீது நான் காதல் கொண்டு விட்டேன் போலிருக்கிறது." என்று கூறிச் சிரித்தான். "அதனால் தான் இப்படித் தழுவுகின்றேன்......"

அவள் அவனது நெற்றியையும் கன்னங்களையும் ஒன்றும் பேசாது முத்தமிட்டாள். ஆனால் அவளது கைகள் மட்டும் நடுநடுங்கின. அவன் அதைக் கண்டுவிடக்கூடாது என்பதற்காக அவள் கைகளை சட்டென்று விலக்கிக் கொண்டாள்.

"நாளைக்கு ஜாக்கிரதையாக இருங்கள். நீங்கள் செய்ய வேண்டியது இது தான். காலையிலே ஒரு சிறுவனை அனுப்புங்கள். அந்த மாதிரிச் சிறுவன் லூத்மீலாவிடம் இருக்கிறான். அவன் நான் இருக்கிறேனா போய்விட்டேனா என்று பார்த்து விட்டு வந்து சொல்வான். சரி, போய் வாருங்கள், தோழர்களே. எல்லாம் நல்லபடியாகவே நடக்கும்."

அவர்கள் வீட்டைவிட்டு வெளியேறித் தெருவுக்குள் வந்ததும் சாஷா அமைதியோடு கூறினாள்:

"அவன் சாகப் போவதென்றாலும் கூட, இப்படித்தான், இதே அவசரத்தோடு தான் நடந்து கொள்வான். அவனை மரணமே எதிர் நோக்கி வரும் போது கூட, அவன் தன் கண்ணாடியைச் சரி செய்து பார்த்துக் கொண்டே 'அபாரம்' என்று கூறிக் கொண்டே சாகத் துணிவான்."

"நான் அவனை நேசிக்கிறேன்" என்று மெதுவாகச் சொன்னாள் தாய்.

"நான் அவனை நேசிக்கவில்லை. ஆனால் அவனைக் கண்டு வியக்கிறேன். அவனைப் பிரமாதமாக மதிக்கிறேன். அவன் சில சமயங்களில் அன்போடும் ஆதரவோடும் இருக்கத்தான் செய்கிறான். இருந்தாலும் அவனிடம் ஏதோ ஒரு வறட்சி காணப்படுகிறது. அவன் போதுமான அளவுக்கு மனிதத் தன்மை பெற்றவனாக இல்லை... சரி. நம்மைப் பின் தொடர்ந்து ஆட்கள் வருவதாகத் தெரிகிறது. நாம் இருவரும் ஆளுக்கொரு திசையாகப் பிரிந்து போவதே மேல். யாராவது பின்தொடர்வதாகத் தெரிந்தால், லூத்மீலாவின் இருப்பிடத்துக்குப் போகாதீர்கள்."

"போவேனா?" என்று அதை ஆமோதித்தாள் தாய். சாஷாவோடு தான் கூறியதையே மீண்டும் அழுத்திக் கூறினாள்.

"போகவே போகாதீர்கள். என் இடத்துக்கு வந்துவிடுங்கள். சரி. நாம் தற்போதைக்குப் பிரிந்து விடலாம்."

அவள் விருட்டெனத் திரும்பி, வந்தவழியே நடக்க ஆரம்பித்தாள்.

சில நிமிஷ நேரம் கழிந்த பின்னர், தாய் லூத்மீலாவின் சிறிய அறைக்கு வந்து. அங்கிருந்த அடுப்பருகிலே குளிர் காய்ந்து கொண்டிருந்தாள். லூத்மீலா கறுப்பு உடை அணிந்திருந்தாள்; இடையிலே ஒரு தோல் பெல்ட் கட்டியிருந்தாள். அவள் அந்த அறைக்குள்ளே மேலும் கீழும் மெதுவாக நடந்து கொண்டிருந்தாள். உடையின் சரசரப்பும் அவளது கம்பீரமான குரலும் அந்த அறையில் நிரம்பியொலித்தன.

அடுப்பிலிருந்த தீ பொரிந்து வெடித்துக் காற்றை உள் வாங்கி இரைந்து கொண்டிருந்தது. அதே வேளையில் அவளது குரல் நிதானமாக ஒலித்துக் கொண்டிருந்தது.

"இன்று காலைமுதல் இரண்டு உளவாளிகள் என்னைப் பின் தொடர்ந்தே திரிகிறார்கள். என்னைக் கைது செய்யத்தான் இப்படி வருகிறார்கள்; நான் நினைத்தது என்றும் தவறியதில்லை." -நிகலாய்

(தொடர்ந்து வரும்)

# ஊனம்

**கனகசபை தேவகடாட்சம்**

ஒரு குறுகிய கால எல்லைக்குள் எத்தனை விதம் விதமான பிரச்சினைக்கு முகம் கொடுத்தாயிற்று.

அதனால் எப்பேர்ப்பட்ட மாறுபட்ட கோணங்களினை, அனுபவங்களினை, எல்லாம் அனுபவித்துக் கற்றறிந்தாயிற்று.

இவைகளிலெல்லாம் இது ஒரு புதுமையும்-புதியதும்!

உள்நாட்டிற்குள்ளேயே இப்படியொரு பயணம்,

சகலரின் முகத்திலும் ஏதோ சோகச் சுமைகள் தாண்டவமாடியவண்ணமே இருந்தது.

இத்தனை சுமை கொண்டவர்களையும் சுமந்து கொண்டு எதுவித சலனமோ, சலிப்போ இன்றி ஆயாசமாக ஆடி ஆடி யாழ்ப்பாணத்தில் இருந்து திருக்கோணமலையை நோக்கி பயணித்துக் கொண்டிருந்தது.- அந்த நரோமா கப்பல்.

ஆகா! எத்தனை ரம்மியமான அனுபவம்.

சோகங்களுக்கு இடையிலும் சுகங்கள்.

அந்தக் கப்பல் பயணிகள் எவரும் இக்கடல் பயணத்தை இரசிக்காமலும் இல்லை! அனுபவித்த இன்னல்களையும், வேதனைகளையும் தற்காலிகமாக மறக்காமலும் இல்லை.

இதுவும் இயற்கை எமக்குக் காட்டும் 'கண்ணா மூச்சி' விளையாட்டா?...... ஏதோ நடப்பது நடக்கட்டும் என எண்ணிப் பயணித்துக் கொண்டிருப்பவர்களில் சோமுவும் ஒருவன்.

அந்தக் கப்பல் சாரளங்களினூடாக சோமு தன் பார்வையையும், சிந்தனையையும் கடலின் அலைகளிலும் மலைகளிலும் மேயவிட்டாலும்,-

அவன் எண்ணமெல்லாம் தன் ஆசனத்திற்கு முன், மூன்று ஆசனங்களுக்கு அப்பால் அமைதியே உருவாய், அமர்ந்திருந்த அழகான அந்தக் கறுப்புக் கண்ணாடிக் கன்னி மீது பதிந்திருந்தது.

அவளின் இடக் கரத்தில் மடிக்கப்பட்ட வெள்ளைப் பிரம்பு, மறுகரம் அவளின் தாயாரின் கரத்துடன் இணைந்தவாறு கப்பலில் காலடி எடுத்து வைத்தது!



தன் இருக்கையின் வசதியை தொட்டுணர்வால் அடையாளப்படுத்தி அமர்ந்தது. அவன் பயண ஆரம்பத்தில் அவதானித்தவை.

சோமுவின் உணர்வுகள் அந்த ஆழியின் அலைகள் போன்று அசைந்தன.

'இறைவா! இது என்ன சோதனை! என்ன பரிதாபம்! காரிருள் தானா அவளின் வாழ்க்கை! இருளைவிட அவள் எதையுமே காண மாட்டாளே!'

சோமுவின் இதய வெதும்பலின் வெளிப்பாடு இது.

ஏதோ அவனுள் ஓர் உந்துதல்- அவளுடன் கதைத்தாக வேண்டும்! கப்பலின் அசைவுக்கு ஏற்றவாறு தன்னையும் அசைத்துக் கொண்டு, மேல் கம்பிகளில் கெட்டியாகப் பிடித்தவண்ணம் அவளின் ஆசனமருகே சென்றான். உலக மாயைகளுக்கு தன்னை அர்ப்பணிக்காத அந்த ஜீவன். எதையுமே சலாக்கியப் படுத்தாது, ஒரு தடித்த காகிதத்தை, தன் ஆட்காட்டி விரல்களால் தொட்டுணர்ந்தவாறு இருந்தாள்.

"மன்னிக்க வேண்டும், என்பெயர் சோமு, சொந்த ஊர் மானிப்பாய், நீங்க எவடம் போறியள்?" மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தான். "எங்கட ஊர் அச்சுவேலி, என்ர பேர் விஜித்திரா. திருக்கோணமலை மாகாண்சபையில் 'ரெலிஃபோனிஸ்ட்' ஆக வேலை செய்யிறன்." சுருக்கமாகக் கூறியவள் மீண்டும் அந்த காகிதத்தை புரட்டினாள். சோமு விடவில்லை, 'அறுவை' என்று எண்ணினாலும் பரவாயில்லை. அந்தக் கனிவுமிகு குரலை மீண்டும் கேட்கவேண்டும் போல இருந்தது அவனுக்கு!

ஒரு கணம் தாயாரை நோட்டம் விட்டான்..

மூலை ஆசனப் பலகையில் தன் தலையை அளவாகப் பொருத்தி ஆயாசமாக உறங்கிக் கொண்டிருந்தாள்.

"இந்த வெள்ளைப் பிரம்பைப் பற்றி சொல்லுங்களேன்!" என்றான் சோமு கெஞ்சலாக.

"நீங்கள் ஆமியோ, நேவியோ இல்லைத் தானே?" என்று சிரித்துக் கொண்டே கூறினாள் விஜித்திரா.

"இவங்கள் இந்தப் பிரம்பை பயங்கர ஆயுதம் என்றுதான் பார்ப்பானுகள். அதோட என்னைப் பற்றி பல சந்தேகக் கேள்விகள் வேற கேப்பானுகள். ஆனா, இதில ஒண்டும் பெரிதாக இல்ல. பிரம்பின்ர தொடுகையினால வழியையும், தடைகளையும் உணர்கிறதும், எங்களைப் பார்வையற்றவர்கள் என்று இனம் காட்டிக் கொள்கிறதும், அவ்வளவு தான். இதை நினைவு கூருவதற்காகவே ஒக்டோபர் 15 ஆம் திகதி வெள்ளைப் பிரம்பு தினம் ஏற்படுத்தப்பட்டது. அதில நான் பங்குபற்றத் தவறுவதில்லை"

"அன்றைய தினத்தில் உங்களுடைய பங்கு என்ன?" என்று சோமு வினவியபோது, விஜித்திரா தன் கையில் உள்ள அந்தக் காகிதத்தைக் காட்டி "கவிதை வாசிப்பது" என்றாள்.

சோமுவின் அன்பான வேண்டுகோளுக்கு இணங்கிய விஜித்திரா கவிதை மடையைத் திறந்து விட்டாள்.

*விழியில் ஒளியில்லை-ஆனால்*
*துளியும் பயமில்லை!*
*வாழ்வில் விருப்புண்டு-எமக்கு*
*வாழும் துணிவுண்டு!*
*வழியில் இருள் உண்டு-ஆனால்*
*ஒளிரும் வழி உண்டு!*
*மனதில் எண்ணம் வேண்டும்-எம்மை*
*முழு மானிடராய் மதிப்பதற்கு.*

அவளின் கவிதையும், அவனின் கண்ணீரும் அவன் உடலை நனைத்துக் குளிராக்கியது.

***

மறுநாள்....

காலைப் பொழுது கப்பலிலுள் விடிந்தது.

தரைதட்டும் நேரமும் அண்மித்துக் கொண்டிருந்தது.

'முடிவெடுத்தேயாக வேண்டும்'- எண்ணிக் கொண்டான் சோமு.

விஜித்திராவின் தாயார் தன் வயதொத்தவரோடு 'ஊர்க்கதைகளில்' தன்னை மறந்து உரையாடிக் கொண்டிருந்தார்.

தருணம் நல்லதெனக் கண்டு விஜித்திராவிடம் சென்று பேச்சைத் தொடங்கினான் சோமு.

"விஜித்திரா உங்களை ஒன்று நேரடியாகக் கேட்கப் போகிறேன்."

எதுவித சலனமுமின்றி மௌனமாக இருந்தாள்.

"நான் உங்களை விரும்புறன், கல்யாணமும் செய்யப்போறேன், உங்களின்ர முடிவு என்ன"?

எதையுமே அலட்டிக் கொள்ளாத அனுபவஸ்தர் போன்று விஜித்திரா பேசினாள்:

"என்னை விரும்புவதற்கு என்ன காரணங்கள்?"

சோமு அடுக்கினான்.

"உங்களிடமுள்ள திறமைகள், ஆழமான அறிவும் அடக்கமும்."

"அவை மட்டும்தானா?" சாதாரணமாகவே கேட்டாள்.

"உங்களின் மேல் ஏற்பட்ட பரிதாப உணர்வு-அதனால் ஏற்பட்ட அனுதாபம். எல்லாவற்றையும் விட உங்களை மணம் செய்வதால் என்ர 'தியாக உணர்வு' மற்றவர்களுக்கும் ஒரு எடுத்துக்காட்டாக அமைய வேணும்."

மனதுக்குள் எரிந்து கொண்டாள் விஜித்திரா: 'இவன் என்னை ஒரு அனுதாபப் பொருளாக்கி தன்னை ஒரு தியாகியாக்க முற்படும் ஒரு விளம்பரம் விரும்பி.'

"'காபர்' வரப்போகுது, என்ன பேசாம நிற்கிறீங்கள், முடிவைச் சொல்லுங்க" துரிதப் படுத்தினான் சோமு.

"நான் உங்களை விரும்பவில்லை! மன்னிச்சிருங்கோ." நறுக்கென்று விஜித்திரா முடிவு சொல்லவும்., கப்பல் இறங்குதுறை தட்டவும் சரியாக இருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

# ஏமாற்றம்!



**எஃப். லெனாட்குமார்**

இன்று வெள்ளவத்தை கடற்கரை காதலர்களால் நிரம்பிப்போயிருந்தது. அலைகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்து கரையைத் தொடுவதுமாய் இருக்க, இதமான தென்றல் காற்றொன்று என்னை மட்டுமல்ல, என்னோடு ஒரே குடையின் கீழ் அமர்ந்திருந்த சுகந்தியின் உடலையும் லேசாக தழுவிச் சென்றிருக்க வேண்டும்.

சுகந்தி!

இப்போதைக்கு அவள் எனது இரண்டாவது காதலி. என்னை விட பணத்தாலும், அழகாலும் உயர்ந்து நிற்பவள்.

நான் அலுவலகம் செல்லும் பஸ்ஸில் ஒன்றாக வந்தவள். இடைக்கிடை கண்கள் சந்திக்க, சிரிக்க, பேச, பழக என்று காதலாக மாறிய உறவு, இப்போது கடற்கரையில் ஒன்றாக ஒட்டி, அணைத்து, முத்தமிட்டு அவள் மடியில் சாய்ந்து இருக்குமளவுக்கு நெருக்கமாகியிருந்தது.

உண்மையைச் சொல்லப் போனால் சுகந்தியை விட எனது மாமியின் மகள் பவித்திராவைத்தான் நான் உயிருக்கு உயிராக நேசிக்கிறேன். அவளும் படித்தவள், பண்பானவள், பணத்தாலும் அழகாலும் சுகந்தியை விட குறைந்தவளில்லை.

ஆனால் இப்போதைக்கு இந்தக் கள்ள உறவுதான் எனக்குள் தேனாய் இனித்தது. பவித்திரா எப்போதும் என்னோடு ஒன்றாய் வருபவள். அவள் இந்த உலகில் எனக்காகவே பிறந்தவள்.

ஆனால் இப்போது எனக்கு சுகந்தி தேவை. பின் இவளிடம் ஏதாவது பொய்க் காரணம் சொல்லி லேசாக விலகிவிடலாம். இதுதான் எனது வருங்காலத்திட்டம்.

கலியாணமென்றால் அது பவித்திராவோடுதான். ஆனாலும் சுகந்தியோடு உள்ள தொடர்பை பவித்திரா அறியாதபடி மறைத்து வைத்துக் கொள்வது முக்கியம்.

"சுரேஷ்!"

"........"

"சுரேஷ்!" சிந்தனைக்கு சுகந்தியின் குரல் தடைபோட்டது.

"ம்?"

"அந்த அலைகள பார்த்தீங்களா?" நான் ஏதும் புரியாதவனாய் அவளை நோக்க, அவளிடமிருந்து மென்மையானதோர் சிரிப்பு.

"என்ன... சுரேஷ்? நான் அந்த அலைகள இரசிக்கிறேன். நீங்க...!" அவள் பேச்சை முடிக்கும் முன் குறிக்கிட்டு.

"நான் உன்ன இரசிக்கிறேன்!" என்றேன். அவள் கன்னம் சிவந்துபோனது. கையைப் பற்றி இதமாக முத்தமிட்டேன்.

"இல்ல.... சுரேஷ், நாங்களும் இந்த கடல் அலைகள போல எப்பவும் மாறாம, மறையாம இருக்கணும். எனக்கு காதலப் பற்றி சரியா தெரியாது. உங்கள நம்பித்தான் காதலிக்கிறேன். என்ன ஏமாற்றக் கூடாது. ஒரு பொண்ணு ஒருத்தன மனசார நினைச்சா பிறகு வெறொருத்தனுக்கு கழுத்த நீட்டவே முடியாது. சாகுறத தவிர! உங்கள பிரிஞ்சி என்னால வாழ முடியாது சுரேஷ்!"

அவள் கண்களில் இருந்து நீர் கசிந்தது. மெல்ல என் மார்போடு சாய்ந்தவளை அணைத்து உதட்டில் முத்தம் பதித்தேன்.

மனதுக்குள், நான் தவறு செய்கிறேன் என மனச்சாட்சி சொல்ல, நானே எனக்கு சமாதானம் கூறிக்கொள்கிறேன்.

நீண்ட நேரம் என் அணைப்பில் அவள் இருக்க, நேரம் மட்டும் போய்க்கொண்டேயிருந்தது.

எழுந்து கடற்கரையினூடாக பஸ் தரிப்பிடத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தோம்.

கண்ணுக்கெட்டிய தூரம்வரை ஆங்காங்கு காதலர்கள்தான். கரையை நோக்கி பார்த்துக்கொண்டு வந்த எனக்கு பட்டென மின்னல் தாக்கியதைப் போலிருந்தது.

இதயம் வெடித்து இரு துண்டுகளாகப் பிரிந்த உணர்வு. காரணம் கரையோரத்தில் ஒரு ஒதுக்குப் புறமாய் என் வருங்கால மனைவியான பவித்திரா வேறொருவனின் மடியில் சாய்ந்தபடி ஒரே குடையின் கீழ் இருந்தாள்.

# பயணங்கள் முடிவதெங்கே....!??

எந்த முரண்பாடும்
இல்லாமல் சந்தோஷமாய்
வாழ்ந்த காலங்கள்....
அந்த இனிதான காலங்கள்
இனிமேல் வருமா?



பஸ் கனவேகமாய் முன்னேறிக் கொண்டிருந்தது. காலைத்தென்றல் முகத்தில் மோதி விலகியது. நேரம் பார்த்தேன். ஆறுமணியில் முட்கள் துடித்துக் கொண்டிருந்தன. 'மதகுருமாருக்கு' என ஒதுக்கப்பட்ட சீற்றில் அமர்ந்து பயணிக்கும் எனக்கு எந்த நிமிடத்திலும் இருக்கை பறிபோகலாம் என்ற நிலை.

அநுராதபுரத்தின் எல்லைக்காற்று என் நாசித் துவாரங்கள் வழியே புகுந்து செல்களுக்குள் புத்துணர்வூட்டியது. பால்ய நினைவுகள் பளிச்சென்று மனதை ஆக்கிரமிக்க விழிகள் மரபுச்சுவடுகளைத் தேடிக்கொண்டிருந்தன.

"யாப்பனைய ஹந்தி பஹிண்ட... பஹிண்ட" (யாழ்ப்பாண சந்தி இறங்கு இறங்கு) கொட்டி அள்ளி வளைவில் திரும்பி வடக்கு நோக்கி வேகமெடுத்தது வாகனம். என் விழிகள் குத்திட்டுநோக்கி அவசரமாய் எழுந்தேன், அருகே ஒரு சாது நின்று கொண்டிருப்பது உணர்ந்து.

தலையசைத்து கையமர்த்தி என்னை அமரச்சொல்லி தன் கைப்பையை தந்தபோது என்னுள் ஒரு சிலிர்ப்பு. ஆசனப்பிடியில் இறுகியிருந்த வலது கரத்தில் ஒரு ஆழமான பதினைந்து சென்ரிமீட்டர் நீள வடு பளீரிட்டது... என்னுள் ஒரு தடுமாற்றம்... எங்கோ எப்போதோ சந்தித்த உணர்வு நினைவுச் சிமிட்டலின் எதிரொலியாய் மீண்டும் மீண்டும்.

பதின்மூன்று ஆண்டுகள்.. நான் இந்த மண்ணையும் மனிதர்களையும் பிரிந்து. ஆனாலும் நினைவு பிறாண்டியது. என் வயது இருக்கலாம் சாதுவுக்கு. வாழ்வின் பரிணாமங்களைப் புரிந்து தெளிந்த தீட்சண்யமான பார்வை, தொலைந்துபோன புன்னகை, வலுக்கட்டாய சாந்தம். நினைவு தாவியது.

ஷறணி, நில்மினி, ரவிதிலக், அனித், புபுத்தா, சஷிக்க, ஷம்பிக்கா எல்லோரும் ஸ்லோமோஷனில் மிதந்தார்கள். பன்னிரெண்டு வயது உருவங்களாய். அவர்களோடு நானும் கைகோர்த்து மிகுந்தலை, பொலன், திஸாவெவ, கதிரேசன் கோயில், விவேகானந்தா என்று அலைந்த காலங்கள்... சட்டெனக் கலைந்தேன்.

சாது என்னையே பார்த்துக் கொண்டிருப்பது உணர்ந்து... எப்போதோ எங்கோ சந்தித்த பார்வை.

எப்போது? எங்கு? இவர் யார்- ரவி திலக்கா? அனித்தா? புபுத்தாவா? யார் யார்? குழம்பிப் போனேன்.

சாது புருவம் நெரித்து ஆழ்ந்த சிந்தனை வயப்படுவது தெரிந்தது... இருவருடைய தேடல்களும் ஒரு பொது உண்மை சார்ந்ததாய் இருக்குமோ? பஸ் நின்றது. செக்கிங்! சாமான்ய பயணிபோலவே சாதுவும் நானும் இறங்கி சமாந்தரமாய் நடந்தோம்.

அரைமணிநேர மௌனத்தைக் கலைத்த சாது.. "நங்கி கொயத இந்தலா என்னே?" (துங்கச்சி எங்கேயிருந்து வாறீங்க.)

"மடக்களப்புவ" (மட்டக்களப்பு)

"ஓ..தனியமதாவே...? கொயதயண்ட யண்ணே?" (தனியாகவா வந்தீர்கள்? எங்கு போகப்போகிறீர்கள்?)

"யாப்பணய" (யாழ்ப்பாணம்).

"யாப்பாணய கொய்ஹரியத" (யாழ்ப்பாணத்தில எங்கே?)

"நல்லூர்!" மின்னலடித்தது விழிகளில்.. ஆழமான ஒரு நேர்பார்வை- ஒரு ஜென்மாந்திரத் தொடர்பு போல; அதே உச்சரிப்பு 'ஷந்திரீய்ய்' விதிர்த்துப் போனேன். சாது முகத்திலும் சந்தோஷக்களை.

சட்டெனத் தன் வலது கரம் உயர்த்தி வடு காண்பித்து.. "ஞாபகமில்லை?" என்றபோது சிலிர்த்துக் கொண்டேன். "அனித்.. அனித் ராஜபக்ஷ.." சாது முகத்தில் புன்னகை ஓடியது. "புளியங்குளம், அலபாற, நோனா கெதர ஞாபகமில்லே?" என்ற சாதுவின் விழிகளில் நீர்திரையிட்டது.

எந்த முரண்பாடுகளுமில்லாமல் சந்தோஷமாய் வாழ்ந்த காலங்கள்... சகோதரத்துவமாய் மலர்ந்த உறவுகள். அந்த இனிதான காலங்கள் இனிமேல் வருமா? இருவரிடையேயும் மௌனப் போராட்டம். ஜம்பு மரத்திலிருந்து காய் உதிர்த்த அனித்தை நான் தள்ளிவிட, தொபக்கட்டீர் என்று விழுந்து தொங்கி நீளமான கீறலோடு குருதி சொட்டச்சொட்ட ஓடிய அதே அனித். இருதுருவங்களாய் நிற்கிறோம்.

யாழ்ப்பாணம் போகிற பயணப்பை அணுவணுவாகச் சோதிக்கப்பட்டு முடிய சீருடை கம்பீரமாய் முன்னேற சாது சொல்கிறார்:

"இது புபுத்தா.. நம்ம புபுத்தா" திரும்பிப் பார்ப்பதற்கிடையில் கடந்து போகிறான் புபுத்தா, துப்பாக்கி மனிதனாய். சாதுவின் உரையாடல் பழைய வடபுலத்து நண்பர்களைக் கிளறுகிறது.

"ஆருரன் இப்போ என்ன செய்றான்?" என் விழிகள் கலங்கிற்று.

"ஆரூர் 'ஈ ஃபாக்கல்ரி' கிடைச்சுப் போய் நைன்ரீல மிஸ்ஸிங்."

"ஓ..!" சாதுவின் விழிகளில் நீர்த்திரையிட மெதுவான பெருமூச்சு வெளிக்கிளம்பியது.

"வாகீஷன்?"

"வாகீஷன் இயக்கங்களெண்டு ஓடி... இந்தியாக்குப் போனவன் இறந்துவிட்டதாக அறிந்தேன்!"

"ஓ.. ஜீவித்தங் அனியத்தங்." (ஓ! வாழ்க்கை நிரந்தரமில்லை) என்று பெருமூச்சு விட்டார்.

"ராகுலன்?"

"ராகுல் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத வேதனையில தற்கொலை."

"ப்ரவீணன்?"

"ப்ரவீண் பொலிஸ் இன்ஸ்பெக்டராக இருந்து... ஊருக்கு வர சுட்டுப் போட்டினம்."

சாது முகத்தில் ஈயாடவில்லை. அந்த மௌன அலறல் என்னுள்ளும் எதிரொலிப்பதாய்ப்பட்டது. மௌனமாக பஸ்ஸேறிக் கொண்டோம். சட்டென எனது வலதுகையில் சூடான கண்ணீர்துளிகள் விழுந்து தெறித்தன. நிமிர்ந்து பார்த்தேன்; சாதுவின் கண்ணீரூற்றுத் துவாரம் திறந்து பெருக்கெடுத்தோடியது... இறங்க வேண்டிய இடம் வந்தபோது.. வறட்சிப் புன்னகையோடு இறங்கி ஒற்றையாய் நடக்கிறார் சாது. நான் இன்னமும் இறங்குமிடம் வராத பயணியாய்.....

# போர்க்கால மேகங்கள்

**சிலாபம் பொ.புஷ்பராஜ்**

அந்த மாமரத்து நிழலில் கோபாலன் பெருமூச்சை வெளியேற்றியவாறு நிலத்தில் கயிற்றுச் சாக்கை விரித்து உட்கார்ந்தவன், தன் எதிரே திடீரென அவள் வருவதைக் கண்டதும் தயங்கிக் கொண்டே புன்னகை பூத்தான்.

அவனுக்கு அருகில் மனைவி சாரதா. அவளுக்கருகில் பதினைந்து வயதில் கோபாலனின் உயரத்திற்கு வளர்ந்து விட்ட மகன் மதிவாணன். இந் நாட்டில் செத்துப் போய் வெட்டிப் பேச்சாகி விட்ட சமாதானம் இன்றைக்குப் பிறக்குமா, குறை பிரசவமாக நாளைக்குப் பிறக்குமா என எதிர்பார்ப்பது போல இன்றைக்கோ, நாளைக்கோ பக்குவப்படுவதற்கு (குமரியாக) தயாராகிக் கொண்டிருக்கும் மகள் சுபத்திரா. இவர்களுடன் கோபாலனின் தாய் கண்பார்வை மங்கிய நிலையில் இருதய நோயாளியாக இருமியபடி. இவர்களுடன் ஒரு ட்ரங்கு



பெட்டி, இரண்டு அட்டைப்பெட்டி, அட்டைப் பெட்டிக்குள் இரும்பு கேத்தல் ஒன்று, தேங்காய் துருவி ஒன்று, கத்தி இரண்டு, மூன்று டம்ளர், இரண்டு தகர டப்பா. எல்லோருமாக வீதி ஓரத்திலிருந்த மாமரத்து நிழலில் உட்கார்ந்து வருங்காலத்தைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தனர்.

பல்வேறு பகுதிகளிலுமிருந்து சனங்கள் கூட்டம் கூட்டமாக சொந்த ஊர்களை விட்டு அல்லோல கல்லோலப் பட்டுக்கொண்டு நகர்ந்து வந்து கொண்டிருந்தனர். வந்தவர்களில் பலர் நல்லூர் தேர்த்திருவிழாப் பார்க்க வந்தவர் களைப் போல வீதியோரங்களிலும், மரநிழல்களிலும் தஞ்சமடைந்திருந்தனர். வீதியோரங்களில் மாட்டு வண்டில்களும், சைக்கிள்களுமாக, நிரம்பி வழிந்தன. இவர்கள் மத்தியில் பசி ஒரு புறம். உடலை எரிக்கும் வெயிலின் வியர்வையும், களைப்பும் மறுபுறம் போட்டி போட்டுக் கொண்டிருந்தன. அகதிகளாக சனங்கள் படும் கஷ்டத்தை பார்த்து கோபாலன் புலம்பிக் கொண்டிருக்கையில் தான் அவள் அவனின் பார்வையில் விழுந்து விட்டாள்.

அமுங்கிப் போயிருந்த பழைய நினைவுகள் ஓடிவந்து ஒட்டிக்கொண்டு உடலெங்கும் அவனுக்கு ஒரு சிலிர்ப்பை உண்டாக்கியது. கோபாலன் அவளை வெறித்துப் பார்த்தான். அவளுக்கும் கோபாலனைப் போல மனதிற்குள் ஒரு முனகல் உண்டாகி, மரத்துக் கிடந்த துருபடிந்த நினைவுகள் வெடித்துச் சிதறி விம்மியது. அப்போது அவளின் வதங்கிப் போன கண்களில் கண்ணீர் சொட்டுச் சொட்டாக கொட்டத் தொடங்கியது.

1971 ஏப்ரல் மாதம் 5ம் திகதி இந்நாட்டின் தெற்குப் பகுதிகளில் உண்டான இரத்தக்களரி மிகவும் பயங்கரமானது. அன்று நாடே கலங்கி நின்றது. அன்றைய தினம்தான் கோபாலனின் வாழ்விலும் கறை படிந்தது.

***

அமுதாவின் தகப்பனும் தாயும், கோண்டாவிலில் அம்மன் கோவிலுக்கு அருகில் உள்ள கோபாலனின் வீட்டிற்கு முறைப்படி மாப்பிள்ளை கேட்டு வந்தனர். படுத்த படுக்கையில் கட்டிலில் நோயாளியாகக் கிடந்த எண்ணெய் சட்டி பேரன் செல்லையா பேச்சை ஆரம்பித்தார். நோயாளியாக இருந்தாலும் அவரது கொள்கையில் விடாப்பிடிவாதக்காரர்.

"எனது பையன் கோபாலன் யாரையோ காதலிக்கத் தொடங்கி விட்டதாக எனது காதுக்கு எட்டியது. ஊரிலும் கொஞ்சம் பேச்சு அடிபடுகிறது. அது உங்கள் மகள் தானோ?" வாயிலிருந்த சுருட்டை எடுக்காமலேயே கேட்டார், செல்லையா.

"ஆமாம் ஐயா." இது அமுதாவின் தகப்பனின் ஒரு வரியில் சின்னப் பிள்ளை பதிலாக இருந்தது.

"இங்க பாருங்கோ தம்பி! நீங்கள் வீடு தேடி வந்து என் பிள்ளையை கேட்பதாலே சொல்றன். நான் ஆண்பிள்ளையை பெத்தவன். எனக்கு பிள்ளை என்றிருப்பதும் இவன் ஒருவன்தான். என்னை இறுதியில் பற்ற வைக்கப்போகிற பிள்ளை. இவனை பீ.ஏ. வரைக்கும் படிக்க வைக்க இரவு பகல் முழுவதும் சுருட்டு சுத்தி, எத்தனையோ முதலாளிமார்க்களுக்கு பல் இளித்து, இந்த வீடு வளவு எல்லாம் தலையாட்டி தர்மலிங்கத்தாருக்கு ஈடு வைத்துத்தான் படிக்கவைச்சனான். அதுசரி. உங்களுக்கு எத்தனை பிள்ளைகள் தம்பி?"

"ஆறு பிள்ளைகள். ஆறும் பெண் பிள்ளைகள்." அவரின் பேச்சில் சிக்கனம் தெளிந்திருந்தது.

"என்ன அரைடசின் பெட்டைகளோ? போச்சு...!! தம்பி. இது சரி வராது. ஏன் தெரியுமோ? படிப்புச் செலவை எல்லாம் கொடுத்தால்தான் இந்த திருமணம் பேசலாம். இவனுக்கு வண்டி வண்டியாக வரதட்சணை கொடுக்க கியூவில் வந்து நிற்கினம். நீங்கள் ஆறு குமருகளை வீட்டில் வைத்துக் கொண்டு.......இது சரி வராது. போங்கோ!" என்று பேச்சை முடித்துவிட்டார்.

சந்தோஷ மனதுடன் கோபாலன் வீட்டுக்கு வந்த அமுதாவின் தகப்பனும், தாயும் சரிந்து போன மனதுடன் சங்கடப் பட்டுக்கொண்டு கூனிக் குறுகிப்போய் ரயில் நிலையத்திற்கு வந்தனர்.

மூன்று வருடமாக அமுதாவை காதலித்த கோபாலன் அவனின் தகப்பனின் பேச்சுக்கு பயந்து திருமணம் செய்ய மறுத்து விட்டான்.

இது எல்லாம் நடந்து ஒரு கிழமையின் பின் கோண்டாவில் ரயில் நிலையத்திற்கு வலப்புறமாக உள்ள தேர் முட்டியில் வைத்து கோபாலனை கண்டாள் அமுதா. அவனைக் கண்டவளுக்கு பேச்சில் தடுமாற்றம் ஏற்பட்டது. "ஏழைப் பெண்ணை மணப்பேன் என்று என்னிடத்தில் சத்தியம் செய்து கொடுத்து விட்டு இன்று மறுத்து விட்டீர்களே! கோபாலன் நீங்கள் எல்லாம்....." என்று சொல்லும்போது கோபாலனின் தாய் தங்கம்மா வருவதைக் கண்டதும் சைக்கிளை வேகமாக மிதித்து மறைந்து விட்டான்.

அமுதா அடிமனதில் புழுத்துப் போய் காலாவதியாகிவிட்ட காதல் எண்ணங்களையும் கோபாலனின் கூழைப் பேச்சையும் சுமந்து கொண்டு மீண்டும் யாழ் செல்வதற்காக ரயில் ஏறினாள்.

"துப்பாக்கி வெடிச்சத்தமும் ஷெல் சத்தங்களும் கேட்டுப் பழகிப்போன காதுகளுக்கு டயர் வெடித்தாலும் பயம்வருகிறது!"

***

அன்று கண்ட அமுதாவைத்தான், இருபத்தைந்து வருடங்களுக்குப்பின் பாழாய்ப் போன போருக்கு மத்தியில் அவனது ஆணவம், பேச்சு, வரட்டுக் கௌரவங்கள் எல்லாம் அழிந்து சுருங்கிப் போன நிலையில் வீதி ஓரத்து மாமரத்து அடியில் தாடியும் வளர்த்துக் கொண்டு அகதியாக இருக்கும் போது, அவளைக் கண்டான்.

"அமுதா நீ.." அவனது பேச்சில் சிக்கல்.

"நானும் உங்களைப் போலத்தான் எல்லாவற்றையும் இழந்த நிலையில் போருக்கு அஞ்சி ஊரைவிட்டே ஓடி வந்துவிட்டேன்."

"உன் கணவன்?"

"அவர் ஐந்து வருடத்துக்கு முன் மதிவெடியில் சிக்குண்டு இரண்டு கால்களையும் இழந்த நிலையில் செத்துப் போனார்."

"உன் அப்பா, அம்மாவின் நிலைமை?"

"என் அப்பா விமான குண்டு வீச்சுக்குப் பயந்து பங்கருக்குள் இருக்கும்போது பாம்பு கடித்து செத்துப் போய்விட்டார். அம்மா என்னோடதான். அதோ அந்த வேப்ப மரத்துக்கு அடியில் என் மகனோடு!"

அமுதாவின் விதியைக் கேட்டதும் கோபாலனுக்கும் அழுகை வருமாய் போலிருந்தது. அன்று எலுமிச்சம் கலர் நிறத்திலிருந்த அமுதா இன்று விதவைக் கோலத்தில் இருப்பதைக் கண்டதும் பழைய அவளது இளமைக் கோலம் எண்ணத்தில் பூ போல வந்து விளையாடியது.

அப்போது அமுதாவின் மகன் ஓடி வந்தான். அவனுக்கு வயது இருபது. வயதுக்கு ஏற்ற வளர்ச்சி இல்லை. சோமாலியா நாட்டு ஆபிரிக்க நீக்ரோ சிறுவர்களைப்போல கை, கால்கள், எல்லாம் முருங்கைக்காயைப் போல மெலிந்து, தலைமட்டும் தேங்காயைப் போல பெரிதாகவிருந்தது. அவனுக்கு காதும் கேட்காதாம். பேச்சும் சரியாகப் பேச வராதாம். குண்டு வீச்சுக்குப் பயந்து தொடர்ச்சியாக பங்கருக்குள் ஒழிந்து இருந்தமையால் இந்த நிலைமையாம்.

கோபாலன் தன் மனைவி சாரதாவை அழைத்து அமுதாவிற்கு அறிமுகம் செய்து வைத்தான். இப்போதும் அமுதா தேம்பித் தேம்பி அழுதாள்.

'இந்த நாசம் அறுத்த யுத்தம் எப்போது முடிவடையும்? என்னைப் போல எத்தனை தாய்மார்களின் பிள்ளைகள் பிணக்காடாக மாறியுள்ள இந்தப் பூமியில் குருடர்களாய், செவிடர்களாய், ஊமைகளாய் திரிகிறார்கள். துப்பாக்கி வெடிச் சத்தமும், ஷெல் வீச்சு சத்தமும் கேட்டுக் கேட்டு பழகிப் போய்விட்ட காதுகள் இப்போது சைக்கிள் டயர் வெடிக்கும் சத்தத்தைக் கேட்டாலும்கூட பயப்படுகிறது.

மிதி வெடிகளிலும், அமுக்க வெடிகளிலும் சிக்கி கால், கைகளை இழந்து அங்கவீனர்களாக எத்தனை பேர் உயிர் வாழ்வதற்காக வாழ்கின்றனர். அழிந்துபோய் கருகிப் போன சொத்துக்கள். இனி இது எல்லாம் யாருக்கு? இந்த தறுதலையுத்தம் சனங்களை இடம்பெயர வைத்தது. தாய் ஒரு பக்கம் தகப்பன் ஒரு பக்கம், மனைவி, கணவன், பிள்ளைகள் எல்லாம் பிள்ளையார் கோவில் சிதறு தேங்காயைப் போல சிதறிப் போய் பிரித்து வைத்து வேடிக்கை பார்க்கிறது. எப்போது இந்த நிலைமை இறைவனுக்குப் புரியும்?' அமுதா எண்ணிக் கொண்டு அழுதாள்.

கோபாலன் தங்களின் பழைய- விட்டுப் போன காதலை எண்ணித்தான் அமுதா அழுகிறாள் என்று எண்ணி அவனும் அழுதான். மழை பெய்யத் தொடங்கியது. எல்லோரும் முண்டி அடித்துக் கொண்டு அருகேயிருந்த பிள்ளையார் கோவிலுக்குள் தஞ்சம் புகுந்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

# இலக்கிய நயம்

தருவது ரசிகன்



## வணங்கிய முடி

மண்டியிட்டாள் மன்னன் காலடியில்!
"வேண்டாம் மன்னா! வேண்டாம் மன்னா!
வேலி நீர், விளைந்த பயிர் நான்
வேண்டாம் மன்னா மேயும் எண்ணம்!"

விழிகள் கலங்க வேண்டுகோள் விடுத்தாள்.
வழியை மறித்து நின்றவன் நகைத்தான்.

"மரகதவீணையே மனதை மாற்று
மண்ணில் வீசவோ அழைத்தேன் உன்னை,
மடியில்தானடி தவழப்போகிறாய்!
மார்பில்தானடி ஆடப் போகிறாய்!"

"மன்னா! இது என்ன பேச்சு?"
காரிகை கலங்கி கேள்வி எழுப்ப,
பேரிகை முழக்கமாய் மன்னன் நகைத்தான்.
"பகைவர் என்றால் வாளால் பேசலாம்.
பாவையரோடு வாயால்தானே பேசலாம்!"

"அழகல்ல மன்னா இது உமக்கு
அழுதவர் கண்ணீர் துடைக்கும் கரங்கள்
பழுதான செயலை நினைப்பது தகுமோ?"

"குத்தும் விழிகளால் குற்றம் சொல்லாதே!
சித்தம் தடுமாறுவது கரத்தின் குற்றமா?
பித்தம் கொள்ளவைக்கும் கட்டழகின் குற்றம்!
கரும்பை நாடி எறும்பு செல்லும்;
விரும்பவைத்தது யாரின் குற்றம்?
உடம்பு முழுவதும் இனிப்புக்காட்டும்
கரும்பின் குற்றம்!"

"தகாத முறை! தரமற்ற விளக்கம்!
ஆகாது மன்னா அத்துமீறல்!"

பணியாத நாடென்றால்
படையெடுத்து வெல்லலாம்!
கனியாத பாவையை
பணியவைக்க என்ன செய்யலாம்!
மன்னன் மயக்கத்தில் யோசித்தான்.

"மறுக்காதே மாங்குயிலே!
தடுக்காதே மாமயிலே!
உனக்காக உருகினேன்
எனக்காக இரங்காயோ?"

"அள்ளிக் கொடுக்கும் வள்ளலே
ஆசையால் தரம் இறங்கலாமா?
அபலையிடம் நீர் இரங்கலாமா?"

"வழங்கும் நிலையில் நீ இருக்கிறாய்.
வாரியள்ளும் ஆசையில் நானிருக்கிறேன்.
பெட்டகம் நீ, பெரும் புத்தகம் நீ!
அள்ளியும் கொள்ளலாம், அறிந்தும் கொள்ளலாம்!
கையாலும் அள்ளலாம், கற்றும் கொள்ளலாம்!
மெய் மறக்கலாம், மெய்யும் அறியலாம்!
பெண்ணே! புது மலரே! கண்ணே!
காரியம் செய்வோம், காதல் காவியம் செய்வோம்
தாமதம் வேண்டாம், சம்மதம் சொல்லு!"

"அழைத்தால் வருவர் ஆயிரம் பெண்டிர்.
வளைத்தால் வளைவர் ஓராயிரம் விதமாய்
மறுக்கும் என்னை நெருக்குதல் ஏனோ?"

"மதுரசம் ஊறும் கனியிதழ் உனக்கு
புது நயம் காட்டும் பூவிழி உனக்கு.
சுகரசம் பருகும் கனவடி எனக்கு!"

"காமம் உமது தேகம் முழுவதும்
கண்களை திறந்தால், காமத்தை எரிக்கலாம்!"

"கண்கள்தானே கனிகள் கண்டது,
கண்கள்தானே கவரச் சொன்னது,
கண்கள் தானே காமம் விதைத்தது.
பெண்கள் முன்னால் கண்கள் அடிமைகள்.
கண்கள் என்பது பிச்சைப் பாத்திரம்!
பெண்களின் அழகு அட்சய பாத்திரம்!
கண்கள் இரக்குது பெண்ணே தருக!
அழகு முழுவதும் கொட்டித் தருக!"

"வாதம் செய்வதில் வெல்ல முடியாது
மேதமை உமது சொத்து மன்னா.
பேதமையாலே மேதமை அழியாதீர்!"

"வீணையே! நீயாக படிவது நன்று!
நானாக எடுக்க நேரமாகாது!"

"சுட்டுவிரல்கூட படுவது வேண்டாம்,
பட்ட மரமாக என்னை ஆக்காதீர்!"

"பத்துவிரல் பட்டால்தானே
சித்து விளையாட்டு சித்தத்தில் இனிக்கும்.
கட்டுக் குலையாத வண்ண மகளே
கட்டிக்கொள்ள வா இந்தப் பக்கம்!"

"பெண் பாவம் உமக்கு வேண்டாம்!"

"பாவம் என்னடி, பழியும் என்னடி?
ஆறடிக் குழிக்குள் அடங்க முன்னர்
ஆயிரம் சுகங்கள் அறிவது மேலடி!
உடல் வெறும் கூடாய் போவது மெய்யடி
ஊடலும் கூடலும் வரவில் வையடி
சாவதன் முன்னால் சரசம்தான் பலனடி!"

"மங்கை ஒருத்தியை
மன்னன் மேய்ந்தான்.
சரித்திரம் இகழும் என்பதை உணர்வீர்!"

"சரித்திரம் என்பது நாளைய கதை
சரசம் என்பது இன்றைய கதை
வாடி படிக்கலாம். ஆடி முடிக்கலாம்!"

மன்னன் வளைத்து இறுக்கினான்.
மங்கை திணறி மானாய் மிரண்டாள்.

"வேந்தன் நீர் வேடனாய் மாறினீர்
விஷமுள்ளாய் சுய ரூபம் காட்டினீர்
வழிகாட்டும் நீரே வழுக்கி விழுந்தீர்!"

"சந்தன அருவியில்
குளிப்பது தவறா?
பழரசத் தோட்டத்தில்
கனி பறிப்பது தவறா?
பறிக்கத்தானே கரம்!
சுவைக்காத்தானே பழம்!
கலக்கத்தானே கடல்!
நீயும் அருவி, நானும் அருவி
சுகமென்ற கடலில்
புகுவோம் அனுபவி!"

மங்கையின் எதிர்ப்பு
மன்னனின் பலத்தில் முறிந்தது.

ஆக்கிரமிக்கப்பட்ட நிலம்.
கொடி நாட்டினான் மன்னன்.
படையெடுப்பால்
மடைதிறந்த சோகத்தில் நிலம்!

ஆடி அடங்கிய பின்னர்தான்
மன்னனுக்கு ஞானம் பிறந்தது.
காமத் தீ அடங்கிய பின்னர்தான்
கண்களின் திரை காணாமல் போனது.

"மன்னித்துக் கொள்!
மிருகமாய் மிதமிஞ்சி விட்டேன்!"

"தூ! மிருகத்திலும் கேடானாய்
மனிதரில் நீ ஒரு புழுவானாய்!"
காறி உமிழ்ந்தாள் காரிகை.

"நீதி கேட்கிறேன்
நாதி இல்லையா அபலைக்கு?
நீதி கேட்கிறேன் சபையில்!"

மன்னன் மடங்கி-அவள்
காலில் விழுந்தான்!
"உள்ளே நடந்ததை ஊர் அறிந்தால்
என் பேர் கெடும், புகழ் கெடும்!"

காலடி கிடந்தவன் மன்னன்.
நாட்டை ஆள்பவன் நங்கையின் காலில்!
மண்டியிடுகிறான். மன்றாடுகிறான்.

நினைத்துப் பார்த்தான் மன்னன்.
தன்நிலை எண்ணி தானே அழுதான்.

"மலைபோல் உயர்ந்து
வாழ்ந்தவன் எனக்கு
மடுபோல் தாழ்ந்த செயலால்
கடுகுபோல் சிறுத்த நிலையிது வந்ததே!"
ஓவென்று கதறினான்.

"குன்றிமணி அளவுதான்
கெட்ட செயல் என்றாலும்
மலைபோல் உயர்ந்தவரும்
மடுபோலாக அது போதும்!"
வள்ளுவர் சொன்னதை
மறந்துபோனதால் மன்னன் அழுதான்.

"குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின்"

குறள்-965- அதிகாரம்-97

# இந்தியாவுக்கு கிடைத்த கிண்ணம்

## இந்திய-பாகிஸ்தான் இறுதிமோதல்

15 வயதிற்குட்பட்ட வீரர்களின் முதலாவது உலக 'சலேஞ்ச்' கிண்ணப் போட்டியில் இந்திய அணி 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணியை வென்று கோப்பையைச் சுவீகரித்தது.

இங்கிலாந்தில் நடைபெற்ற இந்தப் போட்டிகளில் 10 அணிகள் பங்கு பற்றின. இவை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன.



இந்தியா, இங்கிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள், சிம்பாப்வே, கனடா ஆகியவை 'ஏ' குறூப்பிலும், பாகிஸ்தான், அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, இலங்கை, ஹொலன்ட் ஆகியவை 'பி' குறூப்பிலும் இடம் பெற்றிருந்தன.

'ஏ'குறூப்பில் இந்திய அணியும், 'பி' குறூப்பில் பாகிஸ்தான் அணியும் லீக் போட்டிகள் யாவற்றிலும் வெற்றி பெற்றன.

அரையிறுதியில் இந்தியா, தென்னாபிரிக்காவுடன் மோதி வெற்றி பெற்றது.

**ஸ்கோர்:** தென்னாபிரிக்கா 55 ஓவர்களில் 262/7
இந்தியா 52 ஓவர்களில் 263/6

மற்றொரு அரையிறுதியில் பாகிஸ்தான், இங்கிலாந்துடன் மோதி வெற்றி பெற்றது.

ஸ்கோர்: பாகிஸ்தான் 50.4 ஓவர்களில் 208
இங்கிலாந்து 44.2 ஓவர்களில் 118

அரையிறுதிப் போட்டிகளில் வெற்றி பெற்ற இந்தியாவும், பாகிஸ்தானும் கடந்த ஒகஸ்ட் மாதம் 20ம் திகதி இறுதிப் போட்டியில் விளையாடின.

இந்தப் போட்டியின் போது பெரும் கலவரம் ஏற்பட்டது. இதனால் போட்டி இருமுறை நிறுத்தப்பட வேண்டிய நிலை உருவானது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 55 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 222 ஓட்டங்களைப் பெற்றது. பாகிஸ்தானிய வீரர் ஹஸன் ரஸா அபாரமாக விளையாடி 80 ஓட்டங்களைக் குவித்தார். இந்திய அணியின் கப்டனும், சகலதுறை ஆட்டக்காரருமான ரிதீந்தர் சிங் சோதி 24 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இந்திய அணி துடுப்பாட்டத்தில் இறங்கி அதன் 5வது விக்கெட்டை இழந்தபோது பாகிஸ்தான் ஆதரவாளர்கள் மைதானத்தில் இறங்கி பாகிஸ்தானுக்கு ஆதரவான கோஷங்களை எழுப்பினர். இந்தியாவைக் கிண்டல் செய்தனர்.

இதனால் சில நிமிடம் தடைப்பட்ட ஆட்டம் பாதுகாவலர்களால் சரிசெய்யப்பட்டு மீண்டும் தொடர்ந்தது. மீண்டும் தொடர்ந்த ஆட்டத்தின் ஆரம்ப நிமிடங்களில் 6வது விக்கெட்டும் வீழ்ந்தது. இம்முறையும் மைதானத்தில் புகமுயன்ற பாகிஸ்தான் ஆதரவாளர்கள், பாதுகாவலர்களால் கடுமையாகத் தடுக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டனர்.

இதன் பின்னர் இந்தியக் கப்டன் ரிதீந்தரும், விவேக் மகாஜனும் ஜோடி சேர்ந்து நிலையான ஆட்டத்தின் மூலம் ஸ்கோரை அதிரடியாக உயர்த்தினர்.

இதனால் பாகிஸ்தானுக்குத் தோல்வி உறுதி என்ற நிலை வந்தவுடன் போட்டியைச் சீர்குலைக்க முயன்றனர். பாதுகாப்புக்களை மீறி மைதானத்திற்குள் புகுந்து ஸ்டம்புகளைப் பிடுங்கி வீசி எறிந்து, ரிதீந்தரை மிரட்டி விட்டுச் சென்றனர். இந்திய வீரர்களுக்கு போத்தல்கள், அட்டைப் பெட்டிகள், செருப்புகள் போன்றவற்றால் வீசினர். இதனாலும் ஆட்டம் சிறிது நேரம் இடைநிறுத்தப்பட்டது.

இறுதியில் இந்திய அணி 52.5 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 223 ஓட்டங்களை எடுத்து, 4 விக்கெட்டுகளால் பாகிஸ்தானை வென்று, 'சலேஞ்ச்' கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இந்திய அணியின் கப்டன் ரிதீந்தர் சிங் சோதி ஆட்டமிழக்காது 82 ஓட்டங்களைக் குவித்து இந்திய அணியின் வெற்றிக்கு வழி வகுத்தார்.

# சிந்தியா பதில்கள்

**★ டியர் சிந்தியா! மீண்டும் நேரமாற்றம் ஏற்படுமா?**

வி. தயானந்தன், அவிசாவளை.

வானம் பொழிகிறது. அதனால் நேர மாற்றம் இரத்துச் செய்யப்படுகிறது என்று ஒரேயடியாக அறிவித்திருக்கலாம். அப்படிச் சொல்ல வெட்கமாக்கும். ஒரு கமிட்டி போட்டுள்ளார்கள். தலையைச் சுற்றி மூக்கைத் தொட்டுவிட்டு பழைய நேரமே ஓ.கே. என்று அறிவிக்கப்போகிறார்கள் பாருங்கள்!

—●●—

**★ ஹஜ், சிவராத்திரி விடுமுறைகள் குறிப்பிட்ட மதத்தினருக்கு மட்டுமேயான விடுமுறைகளாக இருக்கும் என்பது சரிதானா?**

எம்.எச். நஸீர், மருதானை.

இந்துக்களும், முஸ்லிம்களும் கொண்டாடும் இரண்டு பண்டிகைகளும்தான் இந்த நாட்டின் சுறுசுறுப்பையே கெடுத்துக் கொண்டிருந்தன என்று என்னமாய் ஒரு கண்டுபிடிப்பு செய்திருக்கிறார்கள்? இனிப் பாருங்கள், நாடு எங்கே போய் நிற்கப்போகிறதென்று!

—●●—

**★ 2000ம் ஆண்டில் யாவருக்கும் புகலிடம் கிடைக்குமா?**

எம். யோகர்தாஸ், அகலி-எல.

எந்த நாட்டில் எதிர்பார்க்கிறீர்கள்?

—●●—

**★ பிரபாகரன் அகிம்சைவாதியாக இருந்தால் நிலமை எப்படி இருக்கும்?**

என். பி.எம். ரம்ஸீன், கலேவெல.

அண்ணர் அமிர்தலிங்கம் தலைமையில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் தொண்டைக் குழாய்கள் ஓயாமல் முழங்கிக் கொண்டிருந்திருக்கும். நமக்கு காதுகள் அடைக்க, அவர்களுக்கு இனவாதிகள் கல்லுகள் எறிய, அடுத்த தேர்தலுக்கு அவையே தியாகத் தழும்புகளாக மாற ஒரே கொண்டாட்டம்தான் போங்கள்.

—●●—

**★ இடமறிந்து பேசத்தெரியாதவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

சி. ஜவாஹர், பண்டாரவளை.

எங்காவது இசகு பிசகாக மாட்டிக் கொண்டு முழிக்கப் போகிறார்கள் என்று நினைப்பேன். ஒரு கதை சொல்கிறேன் ஜவாஹர்.

பகல் முழுவதும் கால்கடுக்க நடந்த ஒரு யாத்திரிகருக்கு இரவில் எங்காவது தங்கிச் செல்ல வேண்டி இருந்தது.

ஒரு வீட்டின் கதவைத் தட்டி, "இரவை இங்கே கழிக்க முடியுமா?" என்று கேட்டார்.

கதவைத்திறந்த காவலாளி, "மன்னிக்கவும், இங்கே இளம் கன்னிப்பெண்களும், மருமகள்களும் இருக்கிறார்கள்." என்று கூறினான்.

அடுத்தவீட்டிலும், அதற்கடுத்த வீட்டிலும் அதேபோலவே கூறினார்கள். யாத்திரிகர் அலுத்துப் போனார். இன்னொரு வீட்டின் கதவைத் தட்டிய யாத்திரிகர் கேட்டார்:

"இங்கே வயதுக்கு வந்த பெண்களும், இளம் மருமகள்களும் இருக்கிறார்களா?"

கதவைத்திறந்த வீட்டுக்காரர், "ஏன்?" என்று கேட்டார்.

"நான் இன்றிரவு இங்கு தங்கவேண்டும்," என்றார் யாத்திரிகர். அதன் பின்னர் அவருக்கு என்ன கதி ஏற்பட்டிருக்கும் என்று நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள்.

—●●—

**★ சிந்தியா! இன்றைய காதலர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

அருமைத்துரை பரமேஸ்வரன், கொழும்பு-13.

எதை எதையெல்லாமோ தேடிக் கண்டறிந்துவிட்டு, கடைசியாகத்தான் மூளையைத் தேடுகிறார்கள். நான் யாவரையும் சொல்லவில்லை.

—●●—

**★ தவறான பாதையில் செல்லும் கணவர்களை திருத்துவது எப்படி?**

எம். ருக்குமணி, மாத்தளை.

இப்படித்தான் ஒரு கணவர் சூதாடிச் சூதாடியே பணத்தை தொலைத்துக்கொண்டிருந்தார். இதனால் மனைவிக்கும் அவருக்கும் தினமும் சண்டை. ஒருநாள் மனைவியிடம் அந்தக் கணவன் சொன்னான்:

"சூதாடுவது ஆண்களுக்கு ஒன்றும் பெரிய கெட்டபழக்கம் ஆகாது. பாவமும் கிடையாது. மகாபாரதத்தில் தருமன்கூட சூதாடி இருக்கிறான் தெரியுமா?"

மனைவி சொன்ன பதில்:

"மகாபாரதக் கதையைப் பின்பற்றுவதானால் திரௌபதிக்கு ஐந்து கணவர்கள் இருந்தார்களே அதையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்!"

—●●—

**★ தியானம் பண்ணுவதால் மனதில் அமைதி உண்டாகுமா?**

வி. தவச்செல்வன், மட்டக்களப்பு.

உண்டாகும். தியானம் பண்ணாமலும் அமைதியாக இருக்கத் தெரிந்தவர்களும் உண்டு.

"என் மனைவியும், அம்மாவும் தினமும் சண்டை போடுவார்கள். ஆனால் நான் ரொம்பவும் அமைதியாக இருக்கக் கற்றுக் கொண்டேன்." என்று ஒரு குடும்பஸ்தர் சொன்னார்.

"தியானம் பண்ணுகிறீர்களா?" என்று கேட்டார் நண்பர். "இல்லை" என்றார் குடும்பஸ்தர்.

"அதெப்படி..... உங்க அம்மா ஒரு புறம், உங்க மனைவி மறுபக்கம். எப்படி நீங்க அமைதியாக இருக்க முடியுது? நீங்க எந்தப் பக்கம் இருப்பீங்க?" என்று கேட்டார் நண்பர்.

குடும்பஸ்தர் சொன்னார், "வீட்டுக்கு வெளிப்பக்கம்!"

—●●—

**★ டியர் சிந்தியா! காற்றுள்ளபோதே தூற்றிக் கொள் என்கிறார்களே. காற்றுப் போன பின்பு தூற்றிக் கொள்ள நினைப்பவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

திருமதி சந்திராணி தங்கத்துரை, சவளக்கடை-1.

'அவர்களுக்கு சந்தர்ப்பவாதிகளாக இருக்கத் தெரியவில்லையே, எப்படி இந்த உலகத்தில் பிழைத்துக் கொள்ளப் போகிறார்களோ' என்று?

—●●—

**★ டியர் சிந்தியா! வயதானவர்களுக்கு தாழ்வு மனப்பான்மை ஏற்படுவதுதான் அவர்கள் எதற்கெடுத்தாலும் கோபப்படக் காரணமா?**

இ. பஞ்சலிங்கம், குருநாகல்.

சிலர் விஷயத்தில் ஆம்! சிலர் விஷயத்தில் இல்லை! ஒரு தாத்தாவுக்கு நூறாவது பிறந்தநாள். அவருடைய பேரப்பிள்ளைகள் எல்லாம் வந்து காலில் வீழ்ந்து ஆசீர்வாதம் வாங்கினார்கள். காலில் விழுந்து எழுந்ததும்;

"தாத்தா! ஆண்டவன் புண்ணியத்தில் அடுத்த வருஷமும் உங்கள் பிறந்தநாளில் உங்கள் ஆசீர்வாதம் பெறும் பாக்கியம் எங்களுக்கு கிடைக்கவேண்டும்," என்று பணிவாகச் சொன்னார்கள்.

அதுக்கு அந்தத் தாத்தா என்ன சொன்னார் தெரியுமா?

"கவலைப்படாதீங்க! நிச்சயமா அது நடக்கும். ஏனென்றால் நீங்களெல்லாம் சின்னப் பிள்ளைகள்தானே! அதுக்குள்ளே உங்களுக்கு ஒண்ணும் ஆயிடாது!" என்றார்.

—●●—

**★ இந்திய அணியில் ஒரு சில வீரர்கள் சிறிய வயதிலேயே திருமணம் முடிப்பதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

செல்வி. எஸ். பத்மபிரியா, ராக்ஸாவ எஸ்டேட்.

கங்குலியை மனதில் வைத்துக் கொண்டா கேட்கிறீர்கள்? 23 வயது அப்படி ஒன்றும் சிறிய வயதில்லையே? 25 ஓவருக்குள் வெளுத்துவாங்கினால் ஆஹா ஓஹோ என்று பாராட்டுகிறீர்கள். 25 வயதுக்குள் திருமணம் செய்தால் மட்டும் வெளுத்துவாங்க வாழ்த்தக் கூடாதா பத்மப்பிரியா?

—●●—

**★ ஜான்சிராணி பட்டம் பெற்றுள்ள ஜனாதிபதி சந்திரிகா பற்றி சிந்தியாவின் கருத்து?**

'கலைநேசன்' ஜவாத், புத்தளம.

அந்தப் பட்டத்தை அங்கீகரித்துள்ளது மூலம் வாளேந்தும் விருப்பத்தை வெளிப்படுத்திவிட்டார். அதனால் பயமாக இருக்கிறது. நாம் விரும்பியது சமாதானப் புறாவை.

—●●—

**★ அன்பின் சிந்தியா! ஈராக்மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியது குறித்து உங்கள் அபிப்பிராயம் என்ன?**

எஸ்.என். குமார், கண்டி.

பில் கிளிண்டன் சர்க்கஸ் வித்தை காட்டுகிறார் என்று கேலி செய்துள்ளது 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகை. எனக்குப் பிடித்த அந்தக் காட்டூன் இங்கு உங்கள் பார்வைக்காக!





படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 49

# மராமரத்தை ஊடறுத்த இராமபாணம்

இராமருடைய தகைமை எத்தகையது என்பதனை சுக்கிரீவன் கண்டறிந்ததில்லை. அனுமன் கூறியவற்றை மட்டும் வைத்துக் கொண்டு இராமருடைய வீரத்தை எடை போடும் அளவு ஆற்றல் அவனிடமில்லை. ஆனால், தனது அண்ணன் வாலியின் வலிமையை அவன் நன்கு அறிவான். நேரடியாகவே வாலியின் போர் முறைகளைப் பார்த்துமிருக்கிறான். இதனால் அதிபராக்கிரமசாலியான வாலியைக் கொல்வதற்கு இராமரிடம் வல்லமை இருக்கிறதா என்று சுக்கிரீவனிடம் சந்தேகம் தோன்றியது இயல்பே.

சுக்கிரீவனின் கருத்தை உணர்ந்த இலக்குவன், இராமரிடம் பக்குவமாக எடுத்துரைத்து, வான்முட்ட வளர்ந்த மலைபோல் உயர்ந்திருக்கும் மராமரத்தின் மீது கணை ஒன்றை விடுக்குமாறு பணிவாகக் கேட்டுக் கொண்டான். இராமர், அருகிலிருந்த இலக்குவனையும் எதிரில் நின்ற சுக்கிரீவனையும் அனுமனையும் பார்த்து ஒரு புன்னகையை உதிர்த்தார். அந்தப் புன்னகையால் அனுமனே பெரிதும் ஈர்க்கப்பட்டான்.

தனது கோதண்டத்தை வலது தோளிலிருந்து இடது கையால் எடுத்து வலது கையினால் வில்லின் நாணினைப் பூட்டினார். நாணினை இறுக்கி முடிந்ததும் தனது வலது கைப் பெருவிரலால் நாணினை ஒரு முறை தட்டினார். அந்நாணிலிருந்து எழுந்த நாதம் அக்கானகம் முழுவதும் எதிரொலித்தது. வனவிலங்குகளெல்லாம் அலறிப் புடைத்துக்கொண்டு அங்குமிங்கும் ஓடின. பறவைகளும் பயந்து வான் மீது தாவிப் பறந்து கூவித்திரிந்தன. தேவருலகுக்கும் பாதாள உலகுக்கும்கூட இவ்வொலி கேட்டதாகப் புலவர்கள் கூறுகின்றனர்.

சுக்கிரீவன் உண்மையில் அந்த நாணொலி கேட்டு அச்சம் கொண்டான், அந்த ஒலி கேட்டதுமே அவனுடைய ஐயமும் பறந்தோடிவிட்டது. அனுமனுக்கு இராமபிரான் மீது பக்திப் பெருக்குப் பன்மடங்கானது.

### துளைக்கப்பட்ட மராமரங்கள்

தனது அம்பறாத்தூணியிலிருந்து ஓர் அம்பினை வலது கையினால் எடுத்து தனது நெற்றி, மூக்கு, வாய் ஆகியவற்றில் படும்படியாக செங்குத்தாக வைத்து சில நொடிகள் கண்களை மூடி, உரிய மந்திரத்தைத் தியானித்தார். கண்களைத் திறந்ததும் கணை நாணில் ஏறியது. ஒரு மின்வெட்டுப் போன்ற ஒளிவெள்ளம் பரவ நாணிலிருந்து மிக வேகமாக அக்கணை பறந்தது, கண்ணிமைக்கும் நேரத்துக்குள்ளாக அக்கணையானது, எதிரே-வெவ்வேறாக நின்றிருந்த ஏழு மராமரங்களைத் துளைத்துக் கொண்டு பாய்ந்தது. ஏழாவது மரத்தைத் துளைத்ததும் கீழே பூமிக்குள் புகுந்து மற்றோர் புறத்தால் வெளியேறி, அதே வேகத்தில் இராமரின் கையில் வந்து ஏறிக்கொண்டது, அம்மராமரங்கள் ஏழும் பெரு மலைகள் சரிந்து விழுவது போல் ஒன்றன்பின் ஒன்றாக வேருடன் சாய்ந்து தரையைத் தொட்டன.

இக்காட்சியைக் கண்ட இலக்குவன் உடனடியாக தனது அண்ணனின் கால்களைத் தொட்டு வணங்கினான், அதேபோல் சுக்கிரீவனும் அனுமனும் சாஷ்டாங்கமாக விழுந்து இராமரை வணங்கினார்கள். எட்டத்தில் நின்றிருந்த வானரக் குடிகளும் ஓடோடி வந்து, தமது தலைவன் சுக்கிரீவனைப் போன்று இராமரை வணங்கினர். இராமர் தனது கண்களை மூடி சில நொடிகள் மௌனத்திலிருந்து விட்டு கண்திறந்ததும் வானரர்கள் எல்லோரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

வாலியால் துரத்தப்பட்ட நாளிலிருந்து சுக்கிரீவனிடம் குடி கொண்டிருந்த அச்சம் அதே கணத்தில் நீங்கிவிட்டது, இராமபிரானை அணுகிய அவன், ***"பூமியும் நீ; வானமும் நீ மற்றுமுள்ள நீர், தீ, காற்று ஆகிய பஞ்சபூதங்களும் நீயே; தாமரை மலரிலுதித்த பிரம்மதேவனும் நீயே; கடலும் நீயே; திருப்பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் திருமாலும் நீயே; செய்த பாவங்களனைத்தையும் மன்னித்தருளுவதுடன் அவற்றினாலுண்டாகும் கொடுமைகளை நீக்கும் அருளாளனும் நீயே; ஆதியில் உலகங்கள் அனைத்தையும் தோற்றுவித்தவனான நீ, நாயிலும் கடையவனான எனக்கு அருள் பாலிப்பதற்காக எழுந்தருளியிருக்கிறாய்!"*** என்றவாறு பக்திப் பெருக்குடன் கை கூப்பி நின்றான்.

இதனை கவிச்சக்கரவர்த்தி கம்பர் இவ்வாறு கூறுகிறார்:

**வையம் நீ வானும் நீ மற்றும் நீ மலரின் மேல்**
**ஐயன் நீ ஆழிமேல் ஆழிவாழ் கையன் நீ**
**செய்ய தீ அனைய அத் தேவும் நீ நாயினேன்**
**உய்ய வந்து உதவினாய் உலகம் முந்து உதவினாய்.**

*கிட்கிந்தா காண்டம்-(175)-3882.*

### சுக்கிரீவனின் போர்க்கோலம்

கால தாமதமின்றி காரியத்தில் இறங்க வேண்டும் என்ற எண்ணம் சுக்கிரீவனிடம் எழுந்ததைப் போன்று இராமரிடமும் அதே எண்ணம் உண்டாயிற்று. இராமரே சுக்கிரீவனிடம் "நண்பா! நாம் உடனடியாக கிட்கிந்தை செல்வோம், அங்கே உன் அண்ணன் வாலியை நீ போருக்கு அழை! போர் நடைபெறும் போது நான் மறைந்திருந்தே வாலி மீது பாணத்தை எய்வேன்!" என்று கூறினார், இதனால் சுக்கிரீவன் பெருமகிழ்ச்சியடைந்தான், சுக்கிரீவனும் அனுமனும் வழிகாட்ட இராமரும் இலக்குவனும் உடன் சென்றனர், கூடவே தாரன், நீலன் மற்றும் நளன் என்ற வானரர்களும் சென்றார்கள்.



கிட்கிந்தைக் கோட்டையின் எதிர்ப்புறத்தே உள்ள கானகத்தில் அனைவரும் முகாம் அமைத்துத் தங்கினர், அடுத்த நாள் பொழுது புலர்ந்ததும், ஏற்கனவே திட்டமிட்டது போல் சுக்கிரீவன் கிட்கிந்தைக் கோட்டை வாயிலை அடைந்தான். பலத்த சப்தத்துடன் கூவி வாலியைப் போருக்கழைத்தான், சுக்கிரீவனின் வீர ஒலிகேட்டு கோட்டைக்குள்ளிருந்த வானரக்குடிகள் அனைவரும் கதிகலங்கிப் போனார்கள், அக்குரலுக்குரியவன் வாலியின் தம்பி சுக்கிரீவன்தான் என்பதை அறிந்து பலருக்கு ஓரளவு மகிழ்ச்சி உண்டானது, காரணம், சுக்கிரீவனை அடித்துத் துரத்திய பின்னர் வாலியின் குணம் மாறுபட்டிருந்தது.

### இராஜகுமாரன்

அண்ணன் தம்பி இருவரும் ஒன்றாக இருந்தபோது, குடியானவர்கள் அனைவரும் இருவர் மீதும் சமமான அன்பைச் செலுத்தி, இருவருக்கும் விசுவாசமாகவே நடந்து கொண்டனர், இடையில் சுக்கிரீவன் ஆட்சி புரிந்தபோது அனைவரும் அவனுக்கு விசுவாசிகளாகி விட்டிருந்தனர். வாலி உயிருடன் திரும்பிவந்து ஆட்சிபீடம் ஏறியதும் குடிகளின் நிலை சற்றுத் தளப்பமடைந்தது. வாலியும், சுக்கிரீவன் மீது பற்று வைத்திருந்தவர்களை இனங்கண்டு பழிவாங்கவும் தலைப்பட்டான், இதனால் வெறுப்படைந்தவர்கள் மீண்டும் சுக்கிரீவன் அரசனாகி விட்டால் நன்றாயிருக்குமே என்று எண்ணியதில் வியப்பில்லை. சுக்கிரீவனின் பேராவேசக் குரல் இத்தகையோருக்கு ஆனந்த வெள்ளத்தைப் பெருக்கியது.

தம்பி சுக்கிரீவன் திடீரென வந்து போர்க்குரல் ஒலித்தமை வாலிக்கு அதிர்ச்சியைத் தந்தது, "பட்ட அடி போதாது போல் தெரிகிறது. ஒரேயடியாக ஒழித்துக் கட்டி விடுவதே நல்லது இவனை!" என்று கருதியவாறு இருக்கையை விட்டு எழுந்தான்.

வாலியின் மனைவி தாரை ஓடோடி வந்து கணவனின் தாள் தொட்டு வணங்கி எழுந்தாள், "நாதா! தம்பி சுக்கிரீவன் தங்களுடன் நேருக்கு நேர் நின்று போரிடும் ஆற்றலற்றவன் என்பது தங்களுக்குத் தெரியாததொன்றல்ல; தங்களுக்குப் பயந்தே நாட்டை விட்டு ஓடியவன், இன்று அவனாகவே வந்து தங்களைப் போருக்கழைப்பதென்றால், அதில் ஏதோ மர்மம் இருக்க வேண்டும். தங்களைக் கபடமாக முறியடிக்க ஏதோ ஒரு தந்திரத்தைக் கையாள சுக்கிரீவன் தீர்மானித்திருக்கிறான் என்றே எனக்குத் தோன்றுகிறது. தயவுசெய்து இன்று என் பேச்சைத் தட்டாமல் மாளிகையிலேயே தங்கிவிடுங்கள்!"

இவ்வாறு தாரை கண்ணீர் மல்க, வாலியின் காலில் விழுந்து அழுதாள். பல போர்களைக் கண்டவன் வாலி. போர்க்களம் புறப்பட்டுப் போகும் போதெல்லாம் வெற்றித் திலகமிட்டு வழியனுப்பி வைப்பவள் தாரை. இன்று இவ்வாறு அழுது புலம்பி, அடி தொழுது மறிப்பது வாலிக்கே ஒரு தயக்க நிலையினை ஏற்படுத்தியது.

### தாரையின் கலக்கம்

"தாரா! நீ ஒரு வீரபுத்திரி; உன் மூதாதையரெல்லாம் பெரும் போர்க்களம் கண்டு அங்கமெல்லாம் வீரவடுக்களை வெற்றிப் பதக்கங்களாக ஏற்றவர்கள். அதுமட்டுமல்ல, ஒரு சுத்த வீரனின் மனைவி நீ! என்றுமில்லாதவாறு இன்றேன் கலங்குகிறாய்? உன் கணவனின் வீரதீர பராக்கிரமச் செயல்களை நீ அறியமாட்டாயா? மாயாவி என்ற மாயவீரனை தனிமையில் நின்று தாக்கி அழித்ததை நன்கு அறிந்தவளல்லவா நீ? சமுத்திர ராஜனுடனும் இமாலய மலைக் கதிபன் இமவானுடனும் வலுச் சண்டைக்குச் சென்று, அவர்கள் அச்சங்கொண்டு, அவர்களாலேயே என்னிடம் அனுப்பப்பட்ட எருதினுருக்கொண்ட துந்துபி எனும் அரக்கன் பட்டபாட்டைப் பார்த்தவளல்லவா நீ! இத்தனை ஆற்றல் மிக்க என்னுடன்- என் தம்பி-அடி தாங்க முடியாமல் ஓடி ஒளிந்து கொண்ட சுக்கிரீவன்-மோத வருகிறானாம்? அவனை எதிர்கொள்ள விடாமல் நீ தடுக்கிறாயே! என்ன பேதமை!"

வாலி தன் மனையாள் தாரையின் தோள்களைத் தொட்டு உலுக்கியவாறு இவ்வாறு கேட்டான். தாரை விம்மி விம்மி அழுதாள். வேதனையால் அவள் உடல் நடுங்கியது. 'என்றுமில்லாதவாறு இன்றேன் இவள் இவ்வாறு கலங்குகிறாள்?' என்ற வினா வாலியின் உள்ளத்திலும் எழாமலில்லை. அவளுடைய கண்களைத் துடைத்துவிட்டான். தாரை அவனுடைய மலை போன்ற பரந்த தோளில் தன் முகத்தைப் புதைத்தவாறு மீண்டும் அழலானாள். அழுகையினூடே, "நாதா! நான் கண்ட கனவுகள் பயங்கரமானவை. அதே போன்று துர்ச் சகுனங்களும் ஒன்றன்பின் ஒன்றாக நடைபெற்றுள்ளன. நமது ஒற்றர்படையுடன் சென்றிருந்த நமது மகன் அங்கதனும் பல கதைகளை வந்து இப்பொழுதுதான் சொன்னான்!"

"யார் அங்கதனா? நம் மகனா? அவன் இன்னும் என்னை வந்து காணவுமில்லை; எக்கதைகளையும் கூறவுமில்லையே!"

"பிரபு! சற்று நேரத்துக்கு முன்னர்தான் அந்தப்புரம் வந்தான். சிரமபரிகாரங்களை முடித்து விட்டு தங்களிடம் வருவதற்கிருக்கிறான். அவன் உணவுகூட உண்ண மறுத்து கவலையுடன் காணப்பட்டான். 'கவலைக்குக் காரணம் என்ன மகனே?' என்று கேட்டபோதுதான், பயங்கரமான அந்தத் தகவலைச் சொன்னான்."

இவ்வாறு தாரை விக்கி திக்கி அழுத வண்ணம் கூறினாள்.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி: 47**

**சரியானவிடை:- அனுமன்**

1. பி.எஃப் சதீஸ், தபாலகம், மட்டக்களப்பு.
2. மனோ கோபாலன், ஷொப்பிங் கொம்பிளக்ஸ், ஹபுத்தளை.
3. என். ஜெயகௌரி, 6/3, லேடி மெக்லம்ஸ் வீதி, நுவரெலியா.
4. என். வினோத், 62/ஏ, ஜுட் பிளேஸ், நீர்கொழும்பு.
5. எம்.ஜீவரெட்ணம், ஊவா பென் ஹட், ஏ.பி.சி (100A), வெளிமடை.

**போட்டி இல. 49** கேள்வி:- **சுக்கிரீவனின் சந்தேகத்தைப் போக்க இராமர் என்ன செய்தார்?**

செப்டம்பர் 28 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி – இல.49, தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

# ஆச்சிக்கு மன்னிப்பு

**காதில பூ கந்தசாமி**

***கடந்த தமிழகத் தேர்தலில் ரஜினிகாந்த்தை திட்டித்தீர்த்தார் மனோரமா. ரஜினியோ அவரை மன்னித்துவிட்டார். தனது புதிய படத்தில் நடிக்கும் வாய்ப்பையும் வழங்கிவிட்டார். ரஜினியும்-மனோரமாவும் நேரில் சந்தித்தால் என்ன பேசிக்கொள்வார்கள்? காதில பூ கந்தசாமியார் கற்பனை செய்கிறார்.***



**மனோரமா:-** வணக்கம் தம்பி!

**ரஜினி:-** வணக்கம். எப்படியிருக்கீங்க? நீங்க ரொம்ப ரொம்பப் பெரிய நடிகை. நமக்கெல்லாம் ஆச்சிமாதிரி! நீங்க என் வீடு தேடி வரலாமா? சொன்னா நானே வந்திருக்க மாட்டேனா?

**மனோரமா:-** தம்பி நீங்க நிஜமாவே 'முத்து' 'ராஜாதிராஜா'. உங்களைப் போயி இந்தக் கழுதை எப்படியெல்லாம் பேசிப்புட்டேன். என் வாயில நெருப்புக் கொள்ளி வைக்க! தம்பி! என்னை மன்னிச்சிடுங்க தம்பி! என் ராசா! ஏதோ இந்தக் கிழவி கண்ணு மண்ணு தெரியாம, சேரக்கூடாத இடத்தில சேர்ந்து ஏதோ பேசிப்புட்டேன். அதையெல்லாம் மனசில போட்டு வைச்சிக்காம, நாறின மீனை வெளியே தூக்கி வீசிறமாதிரி மனசில இருந்து தூக்கி எறிஞ்சிடுங்க தம்பி!

**ரஜினி:-** பேசாதீங்க. ரொம்பப் பேசாதீங்க! எதுவும் நம்ம கையிலே இல்லே. எல்லாம் அவன் கையில இருக்கு. (மேலே காட்டுகிறார்.)

**மனோரமா:-** அய்யோ....அய்யோ ரொம்ப பெரிசு, உங்களுக்கு ரொம்பப் பெரிசு தம்பி மனசு. உங்களைப் போயி குடிகாரன் என்று நான்.... இந்த கிழவி பேசிப்புட்டேனே தம்பி! என் வாய் வெந்து போக! நாசமாய்ப் போக!

**ரஜினி:-** யார் பெயரையும் யாரும் கெடுக்க முடியாது. யார் புகழையும் யாரும் பறிக்க முடியாது. யார் யாருக்கு என்னென்ன சேரணுமோ எப்பப்போ சேரணுமோ அது அது அப்பப்ப சேரணும் என்று அவன்.....யாரு? ஆண்டவன் நம்ம தலையிலே எழுதி வைச்சிட்டான். எப்போ? நீங்க, நான் எல்லோரும் எப்ப பிறந்தோமோ அப்பவே!

**மனோரமா:-** முரட்டுக்காளையென்று நினைச்சு பயந்து பயந்து வந்தேன். சாட்சாத் ஸ்ரீராகவேந்திரர் மாதிரியில்லே பேசுறீங்க தம்பி.

**ரஜினி:-** வேணாம். நோ! வேணாம்! தயவு செஞ்சி மனிதனை ஆண்டவனாக்காதீங்க. ஆண்டவனை மனிதனாக்காதீங்க. மனிதன் மனிதன்தான். ஆண்டவன் ஆண்டவன்தான். மனிதன் ஆண்டவனாக முடியாது. ஆண்டவன் மனிதனாக முடியாது. ஹௌ இஸ் இட்?

**மனோரமா:-** சூப்பரு! மகாத்மா காந்தி ரேஞ்சுக்கு வந்திட்டீங்க தம்பி.

**ரஜினி:-** இல்லே. நான் மகான் அல்ல. அன்புக்கு நான் அடிமை.

**மனோரமா:-** என்ன குணம். என்ன குணம்?! நம்ம எம்.ஜி.ஆரு மாதிரியே தங்கம் தம்பி நீங்க. உங்களைப் போயி பித்தளை என்று சொன்னாங்களே!

**ரஜினி:-** யாரு?

**மனோரமா:-** அந்த ரெண்டு பொண்ணுங்களும்!

**ரஜினி:-** யாரு......அதுங்களா? அதுங்க பொண்ணுங்களா? ஹா ஹா ஹா.....பொண்ணுங்களுக்கு மூணு குணம் முக்கியம். என்னென்னு கேளுங்க!

**மனோரமா:-** என்னென்ன தம்பி?

**ரஜினி:-** அன்பு, பண்பு, மாண்பு. அன்பிருந்தா உறவு சேரும். பண்பிருந்தா சேரும் உறவு நிலைக்கும். மாண்பிருந்தா நிலைக்கும் உறவு மதிக்கும்.

**மனோரமா:-** தம்பி! உங்கபேரை ஒரு தரம் கேட்டா எழுந்து நின்றிடும் புல்லும் என்று சொன்னாங்க. அப்போ நான் நம்பல்லே. இப்போ நம்பறேன் தம்பி! நம்பறேன்!



**ரஜினி:-** புல்லு! புல்லை நாம சாதாரணமா நினைக்கப்படாது! (பாடுகிறார்.)

*மண்ணின் மீது புல்லுக்காசை.*
*புல்லின் மீது மண்ணுக்காசை*
*புல்தான் மண்ணில் முளைக்கிறது*
*மண்தான் புல்லை சுமக்கிறது.*

**மனோரமா:-** (பதிலுக்குப் பாடுகிறார்)

*நீ பாடும் பாட்டழகு*
*நீ சொல்லும் பொருள் அழகு*
*நீ சிரிக்கும் பல் அழகு*
*நீ முடி இழுக்கும் சீப்பழகு*
*நீ முகம் துடைக்கும் துண்டழகு*
*நீ இழந்த முடி அழகு*

**ரஜினி:-** ரொம்ப, ரொம்பப் புகழாதீங்க. எனக்கு முகத்துக்கு முன்னாடி புகழ்ந்து பேசறவங்களை பிடிக்காது!

**மனோரமா:-** தம்பி, ஒண்ணு கேட்கலாமா தம்பி.

**ரஜினி:-** ஒண்ணு என்ன ஒன்பதே கேளுங்க. நான் கொடுக்க தயங்காதவன். யார் கொடுத்தாலும் வாங்காதவன்.

**மனோரமா:-** உங்க அடுத்த படத்தில நான் உண்டா தம்பி?

**ரஜினி:-** ஹா ஹா ஹா.... அடுத்த படத்தில மட்டுமல்ல, அடுத்த அடுத்த படத்திலயும் நீங்க கண்டிப்பா இருக்கபோறதில்ல.

**மனோரமா:-** (நெஞ்சை பிடித்துக் கொள்கிறார்) ஐயோ ரஜினித் தம்பி! உங்களை மலையா நம்பி வந்தேனே தம்பி. நீங்க என்னை கைவிடலாமா தம்பி.

**ரஜினி:-** மலையா! நானா?

**மனோரமா:-** சாதாரண மலையில்லைத் தம்பி அண்ணாமலை.

**ரஜினி:-** இல்லே! நான் ரொம்ப சாதாரண மானவன். (பாடுகிறார்)

*மீன் செத்தா கருவாடு*
*மான் செத்தா இறைச்சிக்கூட்டு*
*பாண் சுட்டா றோஸ்ட்டு*
*நான் செத்தா வெறுங்கூடு"*

**மனோரமா:-** தலைக்கனமே இல்லாம பேசுறீங்க தம்பி.

**ரஜினி:-** ஹா ஹா ஹா. அதுதான் நான் அமெரிக்காவில சலூனில் தூங்கறப்போ சுத்தமா இறக்கி வைச்சிட்டாங்களே.

**மனோரமா:-** எந்தக் கம்மனாட்டிப் பயல் உங்க முடியில கைவைக்கத் துணிவான். தம்பி சும்மா தமாசு பண்ணுறீங்க.

**ரஜினி:-** நானா? இல்லே நீங்கதான் மேடைக்கு மேடை சொல்லிக்கிட்டிருந்தீங்க என்று பத்திரிகைக்காரங்க சொன்னாங்க.

**மனோரமா:-** நான் சொன்னதா ஞாபகமில்லீங்களே தம்பி.

**ரஜினி:-** என்னது, ஞாபகமில்லையா?

**மனோரமா:-** கோவிச்சுக்காதீங்க தம்பி. நான் எங்க சொந்தமா பேசினேன். கையிலே ஸ்கிரிப்டைக் கொடுத்தாங்க. மள மளவென்னு பாடமாக்கிப்புட்டு கட கட வென்று மேடையில ஏறி கொட்டிப்புட்டேன். அம்புட்டுத்தாங்.

**ரஜினி:-** இந்த உலகமே ஒரு நாடகமேடை. நாம எல்லாம் நடிகங்க. நீங்க நல்ல நடிகை. ஆண்டவனாய் பார்த்து கொடுத்த கொடை!

**மனோரமா:-** என்மேல கோபமே இல்லியா தம்பி?

**ரஜினி:-** இல்லே. ஆனா வருத்தப்பட்டேன். என்னடாயிது, நாம நம்ம பாதையில போய்க்கிட்டிருக்கோம். நம்ம பாதையில ஆச்சி வந்து குறுக்கிடுறாங்களே என்னு வருத்தப்பட்டேன். என்னைப் பெரியாளாக்கினா எனக்கு மட்டுமில்ல, ஆச்சிக்கும் கஷ்டமாயிடுமே என்று கவலைப்பட்டேன்.

**மனோரமா:-** ரொம்ப நல்ல மனசுங்க தம்பி! ஆனா ஒரு குறை. உங்க படங்கள்ள நான் இருக்க மாட்டேன் என்று சொல்லிப்புட்டீங்களே தம்பி.

**ரஜினி:-** இருக்க மாட்டீங்க. ஏன் என்னா நீங்க இருந்தா ஓடியாடி நடிக்க முடியாதே. சோ.. நீங்க என் படங்கள்ள தொடர்ந்தும் நடிச்சுக்கிட்டிருப்பீங்க.

**மனோரமா:-** ஐயோ தம்பி. நீங்க எங்கேயோ இருக்க வேண்டியவரு.

**ரஜினி:-** நான் எங்கே, எப்போ, எப்படி இருக்கணுமோ அங்கே அப்படி அப்போ இருப்பேன்.

**மனோரமா:-** நீங்கதான் தம்பி எனக்கு இனிமேல் எஜமான்.

**ரஜினி:-** எஜமான்! ஹா ஹா ஹா. (பாடுகிறார்)

*ஒருவன் ஒருவன் முதலாளி*
*உலகில் மற்றவன் தொழிலாளி.*
*பதவியை நினைப்பவன் ஏமாளி*
*அதை விலக்க நினைப்பவன் அறிவாளி.*

*எலெக்ஷனில் வெல்ல கோடிகள் எதற்கு?*
*மக்களை வெல்ல மைக்குகள் எதற்கு?*

*நாற்காலிமீது மனிதனுக்காசை.*
*மனிதன்மீது நாற்காலிக்காசை.*
*நாற்காலிதான் கடைசியில் ஜெயிக்கிறது.*
*மனிதன் குணத்தைப் பறிக்கிறது.*

**மனோரமா:-** தம்பி நான் வரட்டுங்களா தம்பி. உங்க படத்தில நான் உண்டுதானே தம்பி. மறந்துடாதீங்க.

**ரஜினி:-** (விரலை சொடக்கி உயர்த்தியபடி) நான் ஒரு தடவை சொன்னா அது நூறு தடவை சொன்ன மாதிரி!

**மனோரமா:-** அது போதும் தம்பி! சிலர் இருக்காங்க தம்பி. அவங்க ஒரு தடவை 'ஆமா' எண்ணு சொன்னா நூறு தடவை 'இல்லை' எண்ணு சொல்லுற மாதிரி.

**ரஜினி:-** நான் கொடுத்த வாக்கையும், கொடுத்த பொருளையும் திருப்பி எடுக்கறதில்ல.


**மனோரமா:-** தம்பி நீங்க கட்சி தொடங்கினா ஆட்சியைய புடிச்சிடலாம் தம்பி.

**ரஜினி:-** ஆட்சி எல்லாம் இப்ப நமக்கெதற்கு ஆண்டவன் கையில் அது இருக்கு. (மேலே காட்டி சிரிக்கிறார்)


படிப்பகம்

அருள் ஜுவல்லர்ஸ்
ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
436331
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
323657
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

# வீசும் புயல்

→ இன்றைய தேதியில் உலகில் மிக வேகமான பந்துவீச்சாளர்களில் முதலிடத்தில் இருக்கிறார் வக்கார் யூனுஸ்.

1989/90 இல் டெஸ்ட் போட்டியில் முதன் முதலில் களம் கண்டபோது வக்கார் யூனுசுக்கு 19 வயது.

அன்றிலிருந்து இன்றுவரை 41 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார் வக்கார் யூனுஸ். டெஸ்ட் போட்டிகளில் விழ்த்திய விக்கெட்டுக்கள் 216.

டெஸ்ட் போட்டிகளில் ஒரு இன்னிங்ஸில் 19 தடவைகள் ஐந்து விக்கெட்டுக்களை விழ்த்தியது வக்கார் யூனுஸின் அசத்தல்களில் குறிப்பிடத்தக்கது.

ஒரு டெஸ்ட் போட்டியில் நான்கு தடவைகள் பத்துக்கு மேற்பட்ட விக்கெட்டுக்களை விழ்த்தியுள்ளார்.

76 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து 7 விக்கெட்டுக்களை லபக் லபக்கென்று அமுக்கியதுதான் டெஸ்ட் போட்டியில் இவரது சிறந்த பந்துவீச்சு. 1990/91 இல் நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் அதனைச் சாதித்தார்.

சர்வதேச ஒருநாள் போட்டிகளில் 213 விக்கெட்டுக்களை விழ்த்தியுள்ளார். (கடைசியாக நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான போட்டிவரை)

26 ஓட்டங்களை கொடுத்துவிட்டு 6 விக்கெட்டுக்களை விழ்த்தியதுதான் ஒருநாள் சர்வதேசப் போட்டியில் இவரது சாதனை. 1989/90 சார்ஜாவில் இலங்கை அணிக்கெதிரான போட்டியில் அந்த சாதனை வாய்த்தது.

வக்கார் யூனுஸின் பந்துவீச்சில் சமீபகாலமாக ஒரு தொய்வு இருப்பதாகத் தெரிகிறது.

எனினும் பாகிஸ்தான் அணியின் நம்பகமான நட்சத்திரம் வக்கார்.

சமீபத்தில் இங்கிலாந்தில் ஓவலில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸில் 4, இரண்டாவது இன்னிங்ஸில் 1, மொத்தம் ஐந்து விக்கெட்டுக்களை சாய்த்தார். அதன்மூலம் வக்காரின் பந்துவீச்சும் அணியின் வெற்றிக்கு பிரதான காரணமாகியது.

தற்போது கனடாவில் இந்திய-பாகிஸ்தான் இடையேயான ஒருநாள் போட்டிகளிலும் வக்காரின் பந்து பேசும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# நாளைய நாயகன்



# ஓரே நேரத்தில்



↑ ஒவ்வொரு 40.4 செக்கன்களுக்கொரு தடவை விமானம் இறங்கி ஏறும் மிகவும் 'பிசி'யான விமான நிலையம் அமெரிக்காவின் இல்லிநொயிஸ் மாநிலத்தின் ஓஹெயர் ஃபீல்ட் என்னுமிடத்திலுள்ள சிக்காகோ இன்டர்நஷனல் எயர்போட்.

ஒரு விமானம் இறங்க ஒரு விமானம் ஏறும். இவ்வாறு தொடர்ச்சியாக கியூவரிசை போன்று ஓடுபாதையில் விமானங்கள் ஒன்றன்பின் ஒன்றாக செல்வது அழகாயிருக்கும். 1989ல் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பொன்றில் 5 கோடியே 91 இலட்சத்து 30 ஆயிரத்து ஏழு பிரயாணிகள் அவ்வாண்டு அவ்விமான நிலையத்தினூடாகப் பயணம் செய்துள்ளார்கள் எனக் காட்டப்பட்டுள்ளது. இத் தொகை பிரயாணிகள் வேறெங்கும் வந்து போனதாகக் கண்டறியப்படவில்லை. கின்னஸ் சாதனை. உலகின் பிசியான மற்றொரு விமான நிலையம் தெற்கு வியட்நாமின் பியன் ஹோ எயர்போட். இங்கு 1970ம் ஆண்டில் 10 இலட்சம் தடவை விமானங்கள் இறங்கியும் ஏறியும் போயுள்ளன என்றும் அறியப்படுகின்றது.

'மகும்' என்றொரு இந்தித்திரைப்படம் அண்மையில் திரைக்கு வந்து வட இந்தியாவில் சக்கைபோடு போடுகிறது. சின்னஞ் சிறுசுகள் முதல் முதுமையடைந்த பாட்டன் பாட்டிமாரும் திரை அரங்குகளை மொய்க்கின்றனர்.

'மகும்' ஒன்றும் பிரமாண்டமான படம் அல்ல. ஆனால் இப்படத்தில் தோன்றும் ஒம்கார் கபூர் என்ற 11 வயதுச் சிறுவனின் நடிப்புத்தான் அனைவரையும் கவர்கிறது. மும்பாய் புற நகர்ப் பகுதியில் பி.கே.என் உயர் நிலைப் பள்ளியில் ஆறாவது வகுப்பில் படிக்கும் ஒம்கார் இத்திரைப் படத்தில் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து, அழுது புரண்டு, அடிதடிகளில் ஈடுபட்டு, அதே வேளை குறும்புகளையும் செய்து பார்ப்போரைத் தன் வசம் ஈர்த்து விடுகிறான்.

தந்தை பிரகாஷ் கபூர் சினிமாத்துறையில் துணை நடிகர்களை ஏற்பாடு செய்யும் பணியிலுள்ளவர். ஒம்காருக்கு மூத்த சகோதரர்கள் இருவருள்ளனர். 1992ல் ஒம்கார் முதன் முதலில் 'மேரே ஜானேமன்' படத்தில் தோன்றினார். இப்போது தொலைக்காட்சித் தொடர்களில் தோன்றுகிறான்.

'காவுன் காசிந்தார்', 'பாண்டவ்' மற்றும் 'சாஹாட்' ஆகிய படங்களிலும் நடித்திருக்கிறான்.

'மகும்' படத்தைத் தொடர்ந்து 'ஜூடாய்', 'பாதல்', ஹீரோ நம்பர் 1 ஆகிய படங்களிலும் நடித்துவருகிறான்.

'மகும்' வசூலை அறுவடை செய்து கொண்டிருப்பதால் இந்த சின்னப்பையன் வீட்டுக்கு பெரிய பெரிய தயாரிப்பாளர்களெல்லாம் நடையாய் நடந்து கொண்டிருக்கிறார்கள்.

ஒம்காருக்கு சின்ன சின்ன ஆசையெல்லாம் கிடையாது. எல்லாமே பென்னாம் பெரிய ஆசைகள்தான். அமிதாப்பச்சன் போல சூப்பர் ஸ்டாராகவேண்டும். ஸ்ரீதேவியோடு ஒரு படத்திலாவது நடிக்கவேண்டும். படிப்பிலும் நல்ல மார்க் எடுக்க வேண்டும் என்று ஒரு பட்டியலே ரெடியாக வைத்திருக்கிறான்.

ஸ்ரீதேவியிடம் அப்படி என்ன விருப்பம்? என்று கேட்டால், 'ஸ்ரீதேவியக்காவின் கண்கள் ரொம்ப அழகு.' என்கிறான். கண்கள் மட்டும்தானா? என்று ஸ்ரீதேவி கோபிக்காவிட்டால் சரி.

ஒம் காரின் தந்தை பிரகாஷ் மகனுக்கு ஒரு இடைவேளை தேவையென்கிறார். அதாவது "சிலகாலம் சினிமாவில் இருந்து ஒதுங்கியிருந்து படித்துவிட்டு, பின்னர் கதாநாயகனாகப் பிரவேசம் செய்யட்டும்" என்கிறார் எப்படியோ இந்திச் சினிமாவுக்கு எதிர்கால சூப்பர் ஸ்டார் ரெடி.

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



செல்வன் ஜெயக்குமாரன் ஆதர்ஷன்

அவுஸ்திரேலியா 18/107-109, LANE STREET, WENTWORTHVILLE, N.S.W. 2145 இல் வசிக்கும் ஜெயக்குமாரன்-சுதாமதி தம்பதியினரின் செல்வப் புதல்வன் ஆதர்ஷன் தனது முதலாவது பிறந்த தினத்தை அவுஸ்திரேலியாவில் 27-09-1996 வெள்ளிக்கிழமை கொண்டாடுகிறார். ஆதர்ஷனை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, மாமாமார், மாமிமார், அண்ணா, அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறோம்.

தகவல் :- M.CHANDRAKUMAR (சித்தப்பா)

# மின்சார மீன்




→ மீனில் பல வகை உண்டு என்பது தெரிந்த சங்கதிதான். ஆனால் படத்தில் காணப்படும் மீன் மிக மிக வித்தியாச ரகம். அதிசயமானதும்கூட.

காரணம், இந்த மீனைத் தொட்டால் மின்சாரம் தாக்கும்.

இந்த மீனின் உடலில் இருந்து ஒரே தடவையில் 650 வோல்ற் மின்னழுத்தம் கொண்ட ஒரு அம்பியர் அளவு மின்சாரம் வெளிப்படுகிறது. ஒரு மனிதனை நிலை குலைய வைக்க அது போதுமானது.

கடலில் ஏனைய மீன்களுக்கு இந்த மின்சார மீனிடம் பயங்கர மரியாதை. விஷயம் தெரியாமல் வாலாட்டினால் மின்சாரத்தை பாய்ச்சி கதி கலங்க வைத்துவிடும். உதட்டின் மூலம்தான் இது மின்சாரத்தை பாய்ச்சுகிறது. உதட்டில் மின்சாரம். (கவனமாகத்தான் இருக்க வேண்டும்)

இந்த மீனின் விஞ்ஞானப் பெயர்: 'எலக்ரோபோறஸ் எலெக்றிகஸ்'.

'எலெக்றிகல் ஈல்' என்றும் இந்த இன மீன்கள் அழைக்கப் படுவதுண்டு.



இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை கவிந்த பிளேஸ், 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் [illegible] உள்ள சமனல அச்சகத்தில் செப்டம்பர் மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்